Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU





முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 ஆனி 22 சனிக்கிழமை (06.07.2013) பக்கங்கள் 20 ஓசை – 279













# மேலும் 500 பட்டதாரிகளுக்கு வடக்கில் அரச நியமனம்

## யாழ்.செயலகத்தில் இன்று நேர்முகத் தேர்வு

(யாழ்ப்பாணம்)

**வடபகுதியில் உள்ள எச்.என்.டி.ஏ. மற்றும் எச்.என். டி.எம். பட்டதாரிகளுக்கு நிரந்தர வேலைவாய்ப்பு வழங்குவதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஜனாதிபதியுடன் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போது மேற்படி பட்டதாரிகளுக்கு அரச நியமனம் வழங்க வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை விடுத்திருந்தார்.**

இதனைத் தொடர்ந்து விடுக்கப்பட்ட பணிப்புரைக்கு அமைவாகவே இந்தப் பட்டதாரிகளுக்கு இந்த அரச நியமனம் வழங்கப்படவிருக்கிறது.

2012 ஆம் ஆண்டு வரை மேற்படி பாடநெறிகளில் சித்தியடைந்த பட்டதாரிகளுக்கே இவ்வாறு அரச உத்தியோகம் வழங்கப்படவுள்ளது.

இதற்கான நேர்முகப்பரீட்சை இன்று காலை 9.00 மணிக்கு யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ளது. எனவே மேற்படி பட்டதாரிகள் அனைவரும் உரிய ஆவணங்களுடன் யாழ். செயலகத்துக்கு சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## பளையில் விபத்து; பொலிஸார் பலி

(பளை)

பளை - இயக்கச்சி சந்தியில் நேற்று மாலை இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

இயக்கச்சி சந்தியில் பொலிஸ் மோட்டார் சைக்கிளொன்றும், எரிபொருள் பவுஷர் ஒன்றும் மோதிக் கொண்டதில் மோட்டார் சைக்கிள் பாரிய சேதமடைந்ததுடன், அதில் பயணித்த பளை பொலிஸ் உத்தியோகத்தர் ரட்ணாயக்க (வயது-22) சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இது தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (40)

## அரியாலையில் வீதி விபத்து; பயணிகள் 11 பேர் காயம்



(யாழ்ப்பாணம்)

ஏ-9 வீதியில் புங்கங்குளம் சந்தியில் நேற்றுக்காலை இடம்பெற்ற வாகன விபத்தில் 11 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்றுக்காலை 10.00 மணியளவில் கட்டைக்காடு, ஆழியவளை நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ்.சாலைக்குச் சொந்தமான பேருந்து யாழ். வவுனியா தனியார் பேருந்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. இதில் ஆழியவளையை

19 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு மாகாண பிரகடனம் வெளியீடு

(கொழும்பு)

வடக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கான பிரகடனத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று வெளியிட்டுள்ளார்.

இதன்படி, தேர்தல்கள் ஆணையாளருக்கு இவ்விடயம் தொடர்பான அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

1987 ஆம் ஆண்டு இந்திய-

19 ஆம் பக்கம் பார்க்க

## நேபாள முன்னாள் பிரதமர் இன்று யாழ்ப்பாணத்தில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 70 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அதில் கலந்து கொள்வதற்காக நேபாளத்தின் முன்னாள் பிரதம ரும், நேபாள கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவருமான மாதேவ் இன்று யாழ். வருகிறார்.

முரண்பாடுகளுக்கு வன்முறையோ யுத்தமோ தீர்வாகாது. எனவே அனைவரையும் மதித்தும் ஒவ்வொருவருடைய சமய கலாசாரங்களை மதித்து மனிதாபிமானத்துடன் அனைவரும் நடத்தப்படவேண்டும் என நேபாளத்தின் முன்னாள் பிரதமரும் நேபாள கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவருமான மாதேவ் குமார் நேபால் நேற்று

19 ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சி வரை "யாழ்.தேவி"

(கொழும்பு)

யாழ்தேவி ரயிலின் வடக்கு பயணத்தை ஆரம்பித்து வைக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

யாழ்தேவி ரயிலை கிளிநொச்சி வரை பயணிக்க வைப்பதற்கான சகல நடவடிக்கைகளும் பூர்த்தியாகியுள்ளதென போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்தார்.

இது தொடர்பில் வடக்கு ரயில் வீதி புனரமைப்பு நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் போக்குவரத்து அமைச்சின் அதிகாரிகளுக்கு இடையில் அண்மையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

அதன்போது இரண்டு மாதங்களில் யாழ்தேவி ரயிலை கிளிநொச்சி வரை பயணிக்க வைப்பதென்றும் அடுத்த வருட முடிவுக்கு முன் யாழ்ப்பாணத்திற்கு பயணிக்க வைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## உபதபாலகம் மீது விஷமிகள் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணார்பண்ணை உப தபாலகம் நேற்று முன்தினம் இரவு திருடர்களால் உடைக்கப்பட்டுச் சேதமாக்கப்பட்டுள்ளது.

இந்தத் தபாலகத்தின் பின் பக்கக் கதவை உடைத்து அதனூடாக உட்புகுந்த திருடர்கள் தபாலகத்தின் மேசைலாச்சி, அலுமாரிகளில் இருந்த ஆவணங்கள், காகிதாதிகள், முத்திரைகள் போன்றவற்றைச் சிதறடித்துச் சென்றுள்ளதாக அந்த தபாலகத்தின் உப தபாலதிபர் தெரிவித்தார்.

மேலும் பணம் இரும்புப் பெட்டகத்தில் வைக்கப்பட்டிருந்தமையால் அது பாதுகாக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் குறித்து யாழ்.பொலிஸாரிடம் முறைப்

19 ஆம் பக்கம் பார்க்க

## சோனியாவுடன் பசில்; டில்லியில் இன்று சந்திப்பு

(புதுடில்லி)



புதுடில்லியில் தங்கியிருக்கும் அமைச்சர் பசில் ராஜபக்ஷ இன்று சோனியா காந்தியைச் சந்தித்து முக்கிய பேச்சுக்களில் ஈடுபடவுள்ளார்.

ஏற்கனவே பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ நேற்று மாலை வெளிவிவகாரத்துறை அமைச்சர் சல்மன் குர்ஷித்தை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இதன்போது, 13 ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தம் மீதான திருத்தங்கள் தொடர்பில் இருவரும் கருத்துப் பரிமாற்றம் செய்தனர்.

இதனிடையே,

19 ஆம் பக்கம் பார்க்க



# வேலணையில் நான்கு வீதிகள் மக்கள் பாவனைக்கு திறப்பு



வேலணை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட வீதிகள் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், தீவகம் தெற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரினால் (உதயன்) நேற்று திறந்துவைக்கப்பட்டது.

குறித்தொதுக்கப்பட்ட மாகாண நன்கொடை நிதி மூலம் புனரமைப்புச் செய்யப்பட்ட வேலணை அம்பிகைநகர் குமாரசாமிப்பிள்ளை வீதி, மீள் எழுச்சித்திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்பட்ட வேலணை கண்ணபுரம் சுடலை வீதி, நேதாஜி பிள்ளையான் வீதி, செட்டிபுலம் ஐயனார் வீதி என்பன புனரமைப்புச் செய்யப்பட்டு மக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் வேலணை பிரதேச சபைத் தவிசாளர் சி.சிவராசா (போல்), பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கொன்ஸ்சன்ரைன் ஜக்சில், வேலணை பிரதேச சபை உப தவிசாளர் சின்னத்தம்பி கார்த்திகேசு, வேலணை பிரதேச சபை செயலாளர் முத்துலிங்கம் இராஜகோபால், வேலணை பிரதேச சபை உறுப்பினர்களான பாலசிங்கம், தவபாலன், ஜெயநாயகம், ஜெயரஞ்சன், தீவகம் தெற்கு பிரதேச செயலக திட்டமிடல் பிரிவின் அபிவிருத்திட்ட உத்தியோகத்தர் ஜெகன் ஆகியோரும் மீள் எழுச்சித்திட்ட பொறியியலாளரும் பொதுமக்களும் கலந்து சிறப்பித்தார்கள்.

# பெருவிழா

(குருநகர்)

யாழ்.குருநகர் தூய கார்மேல் அன்னை ஆலயப் பெருவிழா 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பித்து எட்டுத் தினங்கள் நடைபெறவுள்ளன.

ஆயுத்த வழிபாடுகள் தினமும் மாலை 5.30 மணிக்கு திருச்செப மாலையுடன் ஆரம்பமாகும். நற்கருணை வழிபாடுகள் 15 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறும்.

16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு திருநாள் பாடல் கூட்டுத் திருப்பலி ஆரம்பமாகும். அன்றைய தினம் மாலை 5.30 மணிக்கு திருச்சொரூப தேர்ப்பவனி திருச்செபமாலையுடன் ஆரம்பித்து நடைபெறும். இரவு 7.00 மணிக்கு ஆலயத்தை வந்தடையும் பவனி சொரூப ஆசீர் வழங்கலுடன் திருநாள் கொண்டாட்டங்கள் நிறைவுபெறும். (68)

# வீடெரிந்த குடும்பத்திற்கு அன்பளிப்பு



(கரவெட்டி)

உடுப்பிட்டி மொட்டப்புளியடிப் பகுதியில் அண்மையில் வீடெரிந்த குடும்பத்திற்கு சேவா லங்கா நிறுவனத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்ட தகரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கரவெட்டி பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் சந்திரசேகரம், வல்வெட்டித்துறை நகர சபை உறுப்பினரான, இந்திரன் கயிலாஜினி, கரவெட்டி பிரதேச செயலக நிர்வாக கிராம அலுவலர் வி.கே.சண்முகநாதன் ஆகியோர் இணைந்து குடும்பத்திற்கான தகரங்களை அவர்களது வீட்டில்வைத்து வழங்கிவைத்தனர்.

இக்குடும்பம் மிகவும் கஷ்டத்தின் மத்தியில் வாழ்ந்துவரும் நிலையில் முன்னர் கரவெட்டி பிரதேச சபையினால் தற்காலிக கொட்டகை அமைத்து வழங்கப்பட்ட நிலையில் தொடர்ந்தும் இவர்களுக்கு உதவிகள் வழங்கப்படவிருப்பதாக கரவெட்டி பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் அ.சந்திரசேகரம் அறிவித்துள்ளார். (116)

# வீதி அகலிப்பு பணிகளுக்காக மின்சார விநியோகம் தடை

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்தவேண்டியிருப்பதாலும், புதிய உயர் அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காகவும் இன்று சனிக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் நவாலி, காக்கைதீவு, மூர்த்தவிநாயகர் கோவிலடி, சுழிபுரம், சாவற்கட்டு, குளப்பிட்டி, ஆனைக்கோட்டை வீதி ஆகிய இடங்களிலும்,

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரையும் உரும்பிராய், கோண்டாவில், மருத்துவ பீடப்பிரதேசம், திருநெல்வேலிப பிரதேசம், பட்டணப்பகுதி நீங்கலாக யாழ். மாநகரசபைப்பகுதி, ஸ்ரான்லி வீதி, புன்னாலைக்கட்டுவன், அச்செழு, ஈவினை, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, வல்லை, குஞ்சர்கடை ஒரு பகுதி, மண்டான் பிரதேசம், நவிண்டில், உடுப்பிட்டி, தொண்டைமனாறு, வல்வெட்டித்துறை, வல்வெட்டி, கரந்தன், சிறுப்பிட்டி, நீர்வேலி, கோப்பாய், இருபாலை, கல்வியன்காடு, நல்லூர், செம்மணி, நாவற்குழி, கைதடி, மறவன்புலோ, தச்சன்தோப்பு, மீசாலை, சாவகச்சேரியின் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும்,

நாளை மறுதினம் திங்கட்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் அம்பன், குடத்தனைப் பிரதேசங்கள் ஆகிய இடங்களிலும்

10 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரையும் அம்பன், குடத்தனைப் பிரதேசங்கள் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். என மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# நுணாவில் அறவழி கட்டடத்தில் தொழிற்பயிற்சி நிலையம்



(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாவட்ட தொழிற்பயிற்சி நிலையம் அண்மையில் கைதடி நுணாவில் அறவழி கட்டடத்தில் திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் யாழ்.மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி திருமதி விநோதினி, யாழ். மாவட்ட மேலதிக இளைஞர் சேவை அதிகாரி எஸ்.சண்முகவடிவேல், சாவகச்சேரி பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர் ஏ.குனேஸ், யாழ்.மாவட்ட சம்மேளனத் தலைவர் எஸ்.லக்ஷன், சாவகச்சேரி இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.மதியுகன், யாழ்.மாவட்ட தேசிய பிரதிநிதி எஸ்.மயூரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சிகரெட் வாங்கி பணமோசடி செய்த கொக்குவில் வாசிக்கு விளக்கமறியல்

சிகரெட்டை வாங்கிக்கொண்டு பண மோசடி செய்த நபர் ஒருவர விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். முகவர் ஒருவரிடம் 12 இலட்சத்து 54 ஆயிரம் ரூபா பெறுமதியான சிகரெட்டை பெற்று கெண்டே ஏமாற்றியுள்ளார்.

30 வயதுடைய கொக்குவிலைச் சேர்ந்த பிரஸ்தாப சந்தேக நபர் கடந்த 28 ஆம் திகதி நீதிமன்றில் யாழ்.பொலிஸாரினால் ஆஜர் படுத்தப்பட்டார். இவர் எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (இ)

# HNDE பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா HNDE பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்படவுள்ளது.

இதன் முதற்கட்டமாக அவர்களுக்கான நேர்முகத்தேர்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

மேற்குறித்த 71 பட்டதாரிகளின் பெயர் விபரங்களை நாளைய தினமுரசில் பார்வையிடலாம்.


## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 970

திகதி 04.07.2013

வெற்றி எண்கள்: 01 21 57 65 — ஆங்கில எழுத்து: Y

ஜக்பொட் பரிசு ரூ. 1,06,11,880/= வெற்றி பெற்றுள்ளார்

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 1,06,11,880/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 12 | 50,000/= | ரூ. 6,00,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 285 | 1,000/= | ரூ. 2,85,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 406 | 1,000/= | ரூ. 4,06,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 12294 | 60/= | ரூ. 7,37,640/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6441 | 40/= | ரூ. 2,57,640/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 160144 | 20/= | ரூ. 32,02,880/= |
| ஆங்கில எழுத்து | 23293 | 20/= | ரூ. 4,65,860/= |
| | | மொத்தம் ரூ. | 69,55,020/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| திருக்கோணாமலை | 704453907-9-49 |
| மொனராகலை | 704441570-7-07 |
| வவுனியா | 704451109-2-12 |
| காலி | 704454417-0-10 |
| பொலன்னறுவை | 704448164-9-19 |
| வவுனியா | 704454689-1-41 |
| கம்பஹா | 704450658-9-09 |
| கம்பஹா | 704450835-7-07 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 73,55,020/=

எதிர்வரும் வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா. 10,925,280/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2013.07.08 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/2907)



பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியின் 175 ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி நேற்று முன்தினம் கல்லூரியில் இடம்பெற்ற தபால் திணைக்களத்தால் முத்திரை வெளியிடும் நிகழ்வின் பதிவுகள் (01)

# பாரம்பரிய கலாசார வரையறைக்குள் கலைகளின் புத்தாக்கம் அமைய வேண்டும்

## திருமறைக் கலாமன்ற இயக்குநர்

(யாழ்ப்பாணம்)

எமது முன்னோர்கள் வகுத்த கலை,கலாசார தமிழ் பாரம்பரியங்கள் இன்றைய இளைஞர் யுவதிகளுக்கிடையே கடைப்பிடிக்கப்படவேண்டும்.என திருமறைக்கலாமன்ற இயக்குநர் கலாநிதி அருட்திரு நீ.மரிய சேவியர் அடிகளார் தெரிவித்தார். அண்மையில் கலைத்தூது கலையகத்தில் அமெரிக்கன் ஸ்தானிக தகவல் கூடமும் திருமறைக் கலா மன்றமும் இணைந்து நடத்திய புத்தாக்க நடனப் பயிற்சிப் பட்டறையின் கலந்து கொண்டு உரையாற்றும போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், எமது பாரம்பரிய விழுமியங்களை கலைகளின் வேர்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்ப இன்றைய இளைஞர் யுவதிகளிடையே தங்கியுள்ளது. அந்த வகையில் பாரதத்தில் சரி ஏனைய கலைகளிலும் சரி ஆணும் பெண்ணும் இணைந்து ஆடும் போதோ அல்லது நடிக்கும் போதோ நமது முன்னோர்கள் வகுத்தநெறிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும். புத்ததாக்கம் என்ற முறையில் நமது பண்பாட்டுக் கலாசாரங்களை மாற்ற முனைவது தவறாகும். புதியது புகவேண்டுமாயின் நமது பண்பாட்டு விழுமியங்களின எல்லைக்குள்ளே அமைய வேண்டும் என அவர் தெரிவித்தார். தொடர்ந்து புத்தாக்கு நடனப் பயிற்சியில் கலந்து கொண்ட மாணவ மாணவிகளுக்கு பயிற்சிக்கான சான்றிதழை செல்வி எலென் பிஷ்சர் வழங்கி வைத்தார். (27)

# திண்மக்கழிவகற்றல் முகாமைத்துவம் தேசியமட்டத்தில் போட்டி

(வடமராட்சி)

உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சு உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையே தேசிய மட்டத்தில் திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவப் போட்டிகளை நடத்துவதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

திண்மக் கழிவு முகாமைத்துவ நடவடிக்கையை முன்னெடுத்துவரும் உள்ளூராட்சி மன்றங்களை மதிப்பீடு செய்து சிறந்த செயற்பாடுகளை மேற்கொண்டுள்ள உள்ளூராட்சி மன்றங்களை ஊக்கப்படுத்தும் பொருட்டு இப்போட்டி முன்னெடுக்கப்படுவதாக அமைச்சு அறிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றங்கள் ஒவ்வொன்றும் தமது நிர்வாக பிரதேசத்தில் தினமும் சேரும் கழிவுப் பொருட்களை அகற்றுவதில் தொடர்ந்தும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றன.

இந்த நிலையில் திண்மக் கழிவு அகற்றல் போட்டித்தன்மையை உருவாக்குவதன் மூலமாக திண்மக் கழிவு முகாமைத்துவம் சிறப்பான முறையில் நடைமுறைப்படுத்துவன நோக்கமாக இச்செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுவதாக அமைப்பினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (109)

# அலங்கார உற்சவம்

(கல்வயல்)

மிருசுவில் படித்த மகளிர் திட்டம் துர்காபுரம் ஸ்ரீ ஞான துர்கை அம்மன் ஆலய அலங்கார உற்சவம் எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் விசேடஉற்சவம் இடம் பெறவுள்ளது.

இந்த உற்சவ காலத்தில் காலை 9 மணி முதல் விசேட் பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 22 ஆம் திகதி விசேட அபிஷேகங்கள், பூசைகள் நடைபெற்று தொடர்ந்து ஞான துர்க்கை அம்மன் மீது பாடப்பட்ட 2 ஆவது பக்திப்பாடல் வெளியீட்டு விழாவும் இடம் பெற்று ஞானதுர்க்கை அம்பாள் வெளிவீதி உலாவரும் காட்சியும் இடம்பெறவுள்ளது. (43)

# நேர்முகத் தேர்வு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொண்டர் ஆசிரியர்களாக 03 வருடம் கடமையாற்றியும் இதுவரையும் நியமனம் பெறாத தொண்டர் ஆசிரியர்களுக்கான நேர்முகத் தேர்வு நடைபெறவுள்ளது.

இதன்படி ,முல்லைத்தீவு கல்வி வலயத்திற்குட்பட்டவர்களுக்கு இன்று சனிக்கிழமையும், துணுக்காய் வலயத்திற்குட்பட்டவர்களுக்கு எதிர்வரும் 09ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும், நேர்முகத் தேர்வு நடைபெற உள்ளதாக ஈ.பி.டி.பி முல்லைமாவட்ட இணைப்பாளர் அறிவித்துள்ளார். (40)

# சங்காபிஷேகம்

(கல்வயல்)

சாவகச்சேரி நகர் கச்சாய் வீதி, கோயிற்குடியிருப்பு அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் சமேத ஞான வீரபத்திர சுவாமி ஆலய வருடாந்த உற்சவப்பெருவிழா கடந்த 29 ஆம் திகதி கும்பாபிஷெட விழாவுடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் இடம்பெறவுள்ளது.

தினசரி காலை 9.30 மணி முதல் 12.30 மணிவரையும் உற்சவம் சிறப்புற இடம்பெறவுள்ளது. இதில் நாளை மறுதினம் திங்கட்கிழமை 108 சங்காபிஷேகம் இடம்பெறவுள்ளது.(43)

# மூன்றுமொழிச்சங்கங்கள் கிளிநொச்சியில் உருவாக்கம்

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தால் மிக அண்மையில் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் 3 மொழிச் சங்கங்கள் உருவாக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளன.

இத்துடன் கிளிநொச்சி மாவட்டத்தில் 59 மொழிச் சங்கங்கள் இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ளன.

மாவட்ட அதிகாரி நடராசா உமாநாத் அரசாங்க அதிபரின் வழிகாட்டலுடன் பிரதேச செயலர்களின் ஒத்துழைப்புடன் இம் மொழிச் சங்கங்களை உருவாக்குவதிலும் பதிவு செய்து ஈடுபட்டு வருகின்றார்.

இவ் அமைச்சின் மாவட்டச் செயல்க கடமைகளுக்கென பட்டதாரி உத்தியோகத்தர்கள் மூவர் மிக அண்மையில் நிரந்தர நியமனம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மும் மொழிகொள்ளைகளை மாவட்ட மட்டத்தில் நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (90)

# கிளிநொச்சி பண்பாட்டு பேரவையால் கலைத்திறன் போட்டிக்கு விண்ணப்பம்

கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டுப் பேரவையால் நடத்தப்படவிருக்கும் அரசஅலுவலர்கள், கலை இலக்கிய மன்றங்கள் ஆகியவற்றிற்கான ஆக்கத்திறன், கலைத்திறன் போட்டிக்கான விண்ணப்பங்கள் கிளி.மாவட்ட அரச அதிபரால் கோரப்பட்டுள்ளது.

இதற்கமைவாகப் பிரதேச செயலகங்கள் ஊடாக விபரங்களையும், விண்ணப்பப்படிவங்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

கட்டுரை, கவிதை, சிறுகதைகள், பேச்சு கையெழுத்துச் சஞ்சிகை, பட்டிமன்றம், கவியரங்கம், சமூக நாடகம், வில்லுப்பாட்டு குழு நடனம் ஆகிய போட்டிகளில் பங்குபற்ற விண்ணப்பிக்க முடியும்.

பூநகரி பிரதேச செயலகப் பிரிவிற்கான விண்ணப்பப்படிவங்களை பிரதேச செயலகப் பிரிவில் பெற்று எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்பாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டுமென கலாசார அலுவலரால் அறிவிக்கப்பட்டுள்ளது மாவட்ட பிரதேச கலாசார பிரிவில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் இந்தப் போட்டியில் பங்குபற்ற முடியாது என அறிவிக் கப்பட்டுள்ளது. (112)

## எழுத்துப் பரீட்சை பிற்போடல்

யாழ்.மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் இன்று சனிக்கிழமை நடைபெற இருந்த சாரதி அனுமதிப்பத்திர எழுத்துப் பரீட்சைகள் யாவும் தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் 13ஆம் திகதி பிற்போடப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்கள பிரதம வாகன பரிசோதகர் அறிவித்துள்ளார்.

# சீட்டிழுப்பில் வெற்றி

(முழங்காவில்)

பூநகரி பிரதேச கலை, கலாசார, விளையாட்டு அபிவிருத்தி நிதிக்காக பூநகரி பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தால் நடாத்தப்பட்ட அதிஸ்ட இலாபச் சீட்டிழுப்பு கடந்த வாரம் பிரதேச செயலகத்தில் நடத்தப்பட்டு பரிசுக்குரிய சீட்டுக்களின் இலக்கங்கள் பிரதேச செயலகத்தினால்அறிவிக்கப்பட்டுள்ளது.

1 ஆம் பரிசில்- 1629 என்ற இலக்கமும்
2 ஆம் பரிசில்- 347 என்ற இலக்கமும்
3 ஆம் பரிசில்- 2836 என்ற இலக்கமும்
5 ஆறுதல் பரிசுக்குரிய இலக்கங்கள் வெற்றி பெற்றுள்ளன
3077, 1410, 4618, 568, 29 ஆகிய இலக்கங்களில் வெற்றி பெற்ற சீட்டுக்களை உடையோர் பிரதேச செயலக கலாசாரப் பிரிவோடு தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் கே.எஸ். வசந்தகுமார் கேட்டுள்ளார். (112)

# தொண்டமான் நகர் மக்களின் தேவைகள் குறித்து ஆராய்வு

கிளிநொச்சி தொண்டமான் நகர் கிராமத்தின் தேவைகள் தொடர்பாக கிராம மக்களுடனான கலந்துரையாடல் கடந்த புதன்கிழமை பிற்பகல். 2 மணியளவில் இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலில் கிராமஅபிவிருத்தி சங்கம் மற்றும் மாதர் கிராம அபிவிருத்தி சங்க பிரதிநிதிகள், கூட்டமைப்பு மற்றும் கிராம அலுவலர் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் இதில் கலந்துகொண்டு மக்களின் தேவைகள் தொடர்பில் ஆராய்ந்தனர்.

இதன்போது இக்கிராம மக்கள் மீள் குடியேறியுள்ள தமக்கு வீட்டுத் திட்ட வசதிகள் வழங்கப்படவில்லை. குடிநீருக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. குடிநீரை பெறுவதற்கு தாம் மிகுந்த கஷ்டங்களை எதிர்நோக்குவதாகவும் நீண்டதூரம் சென்றே குடிநீரை பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளதாகவும் மக்கள் இதன் போது தெரிவித்தனர்.

இதைவிட மின்சார இணைப்புக்களும் பல வீடுகளுக்கு வழங்கப்படவில்லை எனவும் மலசல கூட வசதிகளும் சீரான முறையில் இல்லாமல் இருப்பதாகவும் தெரிவிக்கும் மக்கள் நிரந்தர வீட்டுவசதிகள் இன்றி தற்காலிக வீடுகளிலே மீள்குடியேறிய காலம்முதல் சிரமத்தின் மத்தியில் வாழ்ந்து வருவதாகவும் அவர் தெரிவித்தனர்.

இத்தகைய தேவைகள் குறித்து உரிய அதிகாரிக்கு தெரியப்படுத்தி அத்தியாவசிய தேவையான குடிநீர், மலசலகூட வசதிகள், மின்சாரம் என்பவற்றை ஏற்படுத்த ஆவன செய்யுமாறு மக்கள் பிரதிநிதிகளிடம் கோரிக்கை முன் வைத்தனர். (77)

நீ எந்நிலையில் இருந்தாலும் கடந்து வந்த பாதைகளை மறந்துவிடாதே... - பொன்மொழி

தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## பழிக்குப் பழியா? வாழ்வா?

மனிதர்கள் உணர்ச்சிமயமாக இருக்கும்போது, வாழ்வுக்கு அவசியமான உண்மைகள் பின்னால் ஓடி ஒளிந்துவிடுகின்றன. பழிக்குப் பழி தீர்த்தே தீருவது என்ற ஆவேசத்தை மனதில் புகுத்திக் கொண்டால், சுற்றியுள்ளவர்களெல்லாம் அழிந்து படுவதையும் நியாயமாக்கிக் கொண்டுவிடுகிறது மனது. அறிவின் விளக்கங்களையெல்லாம் தூக்கியெறிந்துவிட்டு, ஆதி மனிதர்களின் வன்முறை ஆவேசத்திற்குச் சென்றுவிடுகிறோம்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இயேசு கிறிஸ்து, 'கண்ணுக்குக் கண்', 'இரத்தத்துக்கு இரத்தம்' என்ற நியதியை மாற்றி, 'ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் காட்டு' என்று புது நீதி வழங்கினார். தன்னுடைய மதத்தில் இருந்த வன்முறையை உணர்ந்த சித்தார்த்தன், வன்முறைக்குப் பதிலாக மனதில் கருணையைப் பொங்க விடாமல் மனிதர்க்கு வாழ்வில்லை என்று கண்டார். அகிம்சைக்கும் அன்பிற்குமே எதையும் மாற்றும் சக்தி உண்டு வன்முறைக்கல்ல என்று உணர்த்தினார்.

ரோஜா மலரை எந்தப் பெயரிட்டு அழைத்தாலும் அதன் வாசனை ஒன்றுதான் என்றார் ஷேக்ஸ்பியர். அதைப் போலத்தான் அன்பு என்ற சொல்லும். எந்த நாட்டில், எந்த மொழியில், எந்த நேரத்தில், எப்படி அழைத்தாலும் அதன் அர்த்தம் ஒன்றே; அது மாறாதது. அன்பின் அர்த்தம் அன்பே.

தமிழில் உயிர் எழுத்து, மெய் எழுத்து, உயிர்மெய் எழுத்து ஆகிய மூன்றையும் தன்னகத்தே கொண்டது அன்பு. இந்த அன்பு என்ற மூன்றெழுத்து மந்திரம் ஒருவரிடத்தில் இருந்தால் அது அவரையும், அவரைச் சுற்றி இருப்பவர்களையும் பாதுகாக்கும் அகிம்சை ஆயுதமாகிறது.

நாம் வாழும் பூமி சூரியன் மீதும், நிலா பூமி மீதும் காட்டும் அன்பால்தான் நமது சூரிய குடும்பம் ஒரு கூட்டுக் குடும்பமாக இயங்குகிறது? இயற்கையே அன்பாக இயங்கும் போது, இயற்கையின் குழந்தைகளும் அன்பாகத்தானே இருக்க வேண்டும்? ஏன் பகைக்கு முன்னுரிமை கொடுக்கிறோம்?

நாம் வெறுப்பினாலும் வீரத்தினாலும் நீதியை உருவாக்கிவிட முடியும் என்று போலியாக நம்புகிறோம். மேலும் மேலும் அழிவுகளைத்தான் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். தோற்றுப்போனாலும் இதை ஒப்புக்கொள்வதில்லை. நமது எதிர்ப்பைச் சரியாகத் திட்டமிடவில்லை; அடுத்தமுறை தவறுகளைச் சரிசெய்து தாக்கினால் வெற்றி நிச்சயம் என்று நம்மை நாமே ஏமாற்றிக்கொண்டு விட்டில் பூச்சிகளாக வீழ்ந்து கொண்டிருக்கிறோம்.

ஆயிரம் நீதி நியாயங்களைப் பேசுகிற நாம், மனிதர்களை நீதியால் வெல்ல முடியும் என்பதில் முழுநம்பிக்கை கொள்வதில்லை. நமக்குள் இருக்கிற நீதியுணர்வு எல்லா மனிதர்களுக்குள்ளும் இருக்கத்தான் செய்யும்; அதைத் தூண்டிவிட முடியும்; பேசி எதிரிகள் என்ற நிலையிலிருந்து அவர்களை மாற்ற முடியும் என்பதையெல்லாம் நிதானிப்பதில்லை. எதிர்ப்பினால் சுயலாபங்களைப் பெற்றுக்கொண்டிருப்பவர்கள் வலையில் திரும்பத் திரும்ப போய் விழுகிறோம்.

மனித மனங்களைப் புரிந்து கொள்ள மனித மனங்களுக்கு இருக்கும் சக்தி போதவில்லை. கோபம் கொண்ட மனது விவேகத்தை இழந்துவிடுகிறது. காந்தத்தின் எதிரெதிர் துருவங்கள் ஒட்டிக்கொள்ளும்போது, வேறு வேறு கருத்துடைய வேறு வேறு கலாசாரமுடைய, இன்னும் நாம் கருதிக்கொள்ளும் பல வேறு வேறுகளையுடைய மனிதர்கள் சேர்ந்து வாழ முடியாதா? எதற்காக இவ்வளவு குரோதங்களும் பிளவுகளும் வாழ்வுத் தொலைப்புகளும்....

- ஆசிரியர்

# தென்கிழக்கு பல்கலையில் இருநாள் சர்வதேச ஆய்வரங்கு

(கல்முனை நிருபர்)

தென்கிழக்கு பல்கலைக்கழகம் மூன்றாவது தடவையாக நடத்தும் சர்வதேச ஆய்வரங்கு இன்றும், நாளையும் நடைபெறவிருக்கின்றது. இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி எஸ்.எம் முகமட் இஸ்மாயில் தலைமையில் தென்கிழக்கு பல்கலைக்கழக ஒலுவில் வளாக புதிய கலை அரங்கில் இந்த ஆய்வரங்கு நடைபெறும். இந்த சர்வதேச ஆய்வரங்கின் ஆரம்ப வைபவத்தில் இலங்கை மத்திய வங்கியின் உதவி ஆளுநர் கலாநிதி டபிள்யூ.எம் ஹேமச்சந்திர சிறப்புச் சொற்பொழிவொன்றை ஆற்றுவார்

மேலும் இச்சர்வதேச ஆய்வரங்கில் இந்தியா, சிங்கப்பூர், மலேஷியா மற்றும் இலங்கை உட்பட பல நாடுகளின் பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் கல்வியியலாளர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

பல்வேறு துறைசார்ந்தோருடைய 150 ஆய்வுக் கட்டுரைகள் இந்த ஆய்வரங்கில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக பல்கலைக்கழகப்பதிவாளர் எச். அப்துல் சத்தார் தெரிவித்தார்.

இலங்கையின் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் உபவேந்தராக கலாநிதி.முகம்மட் இஸ்மாயில் நியமனம் பெற்றதன் பின்னர்,அவரது முன்மாதிரி செயற்திட்டங்களுள் ஒன்றாக இத்தகைய சர்வதேச ஆய்வரங்குகள் இருமுறை நடைபெற்றுள்ளமையும், தற்போது மூன்றாவது தடவையாக சர்வதேச ஆய்வரங்கு நடைபெறுவதும் குறிப்பிடத்தக்கது.

# ஆவரங்கால் பகுதிகளில் திருடர்கள் அதிகரிப்பு

(அச்சுவேலி)

அச்சுவேலி, ஆவரங்கால் பகுதிகளில் அண்மை நாட்களில் திருடர்களின் நடமாட்டம் வெகுவாக அதிகரித்திருப்பதையிட்டு பொது மக்கள் பகல் வேளைகளிலும் கூட வீதிகளில் அச்ச உணர்வுடனேயே செல்ல வேண்டிய நிலை காணப்படுவதாக பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக கிராமப்புற குறுக்கு ஒழுங்கைகளில் நண்பகல் வேளைகளில் பொது மக்களை நோட்டமிட்டுத் திரியும் திருடர்கள் வீதிகளில் ஆள்நடமாட்டம் இல்லாத வேளைகளில் தமது கைங்கரியங்களைக் காண்பித்து வருகின்றனர். மேற்படி திருடர்கள் சாதாரண பொது மக்களைப் போல மோட்டார் சைக்கிள்களில் நடமாடித் திரிவதுடன் சந்தர்ப்பம் கிடைக்கும் வேளையில் வயதானவர்கள், பெண்கள் ஆகியோரை அச்சுறுத்தி நகைகளை அறுத்துக் கொண்டு மிக வேகமாகத் தப்பித்துச் சென்றுவிடுவதால் நகைகளைப் பறிகொடுத்தவர்கள் கூக்குரலிட்டு கதறியும் எந்தப் பயனுமின்றி வீடு செல்ல வேண்டிய நிலையே காணப்படுகின்றது.

இதேவேளை, கடந்த சில தினங்களுக்கு முன்பும் அச்சுவேலி தெற்குப் பகுதியில் குறுக்கு ஒழுங்கை ஒன்றினூடாக சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த இளம்பெண்ணொருவரின் ஒன்றரைப் பவுண் தங்கச்சங்கிலியொன்று மோட்டார் சைக்கிளில் வந்த திருட்டுக் கும்பல் ஒன்றினால் அறுத்துச் செல்லப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (03)

# பரீட்சை அனுமதிஅட்டைகள் தபால்மூலம் அனுப்பிவைப்பு

## உடன் விநியோகிக்கப் பணிப்பு

க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் புஸ்பகுமார தெரிவித்தார்.

பாடசாலை அதிபர்கள் கடைசி நேரம் வரை காத்திருக்காமல் உடனடியாக பரீட்சை அட்டைகளை மாணவர்களுக்கு வழங்குமாறு அவர் உத்தரவிட்டுள்ளார்.

இதன் மூலம் மாணவர்களது பெயர் மற்றும் விபரங்களில் ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டியிருந்தால் இயலுமானவரை விரைவில் பரீட்சைகள் திணைக்களத்தை நாடுமாறும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அதிபர்களைக் கேட்டுள்ளார். பாடசாலை பரீட்சார்த்திகளுக்கான அனுமதிஅட்டைகள் பாடசாலை அதிபருக்கும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் அவர்களது தனிப்பட்ட விலாசங்களுக்கும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. ஆகஸ்ட் 5 ஆம் திகதி க.பொ.த. உயர்தரப் பரீட்சை ஆரம்பமாகிறது. சுமார் ஒரு மாதம் வரை கால அவகாசம் இருப்பதனால் பல அதிபர்கள் அவற்றை மாணவர்களிடையே பகிர்ந்தளிக்காது இறுதித் தறுவாய்வரை வைத்திருப்பார்கள். இதன் காரணமாக பரீட்சை ஆரம்பிப்பதற்கு ஒரு சில தினங்களுக்கு முன்பாக மாணவர்களும் பரீட்சைகள் திணைக்களமும் பாரிய சிக்கல்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. இவற்றைத் தவிர்க்கும் பொருட்டே இதற்குரிய வேலைத் திட்டங்களை உடனடியாக மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்வருடம் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு 2 இலட்சத்து 92 ஆயிரத்து 706 மாணவர்கள் தோற்றவுள்ளனர். இவர்களுக்காக சுமார் 2050 இற்கும் அதிகமான பரீட்சை நிலையங்கள் தயார்படுத்தப்பட்டிருப்பதாகவும் 14 ஆயிரத்துக்கு அதிகமான அதிகாரிகள் பரீட்சை கடமைகளில் ஈடுபடுத்தப்படவிருப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

# ஹாட்லிக் கல்லூரியில் கல்விக்கண்காட்சி

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் 175 ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டிய கல்விக்கண்காட்சி எதிர்வரும் 10ஆம்,11ஆம் திகதிகளில் கல்லூரியில் அதிபர் என்.தெய்வேந்திரராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

10 ஆம் திகதி காலை 9.00 மணி தொடக்கம் 2.00 மணிவரையும், 11 ஆம் திகதி காலையும் 9.00 மணி தொடக்கம் 1.00 மணி வரையும் நடைபெறும். இக்கல்விக் கண்காட்சியின் ஆரம்ப விழாவில் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ். செல்வராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். இக் கல்விக் கண்காட்சியை அனைத்துப் பாடசாலை மாணவர்களும் பார்வையிடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 12ஆம் திகதி விளையாட்டு நிகழ்வுகளும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. இந்நிகழ்ச்சிக்கு வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் எஸ். நந்தகுமார் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

இறுதி நாள் நிகழ்வுகள் 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும். இதில் 175ஆவது ஆண்டு மலர் வெளியீடும், ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பும் இடம்பெறும். இம்மலர் வெளியீட்டிலும் பரிசளிப்பு விழாவிலும் வடக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் கலந்துகொள்வார். (01)

# பேய், பிசாசு, ஏலியன்கள்: அறிவியலா புரட்டா?

**அருண் நரசிம்மன்**

**வானிலிருந்து எரிந்துகொண்டே கற்கள் வந்து விழுந்தன என்று இரண்டு பேராசிரியர்கள் தாங்கள் நேரில் பார்த்த சாட்சியாக அமெரிக்காவில் நாளிதழில் பேட்டியளித்தனராம். இதைக் கேள்விப்பட்டு அன்றைய அமெரிக்க ஜனாதிபதி தோமஸ் ஜெ:ப்:பெர்ஸன் கொடுத்த பதிலடி: "எரிகற்கள் இருக்கிறது என்று நம்புவதைவிட, இரண்டு பேராசிரியர்கள் பொய் சொல்லியிருக்கலாம் என்று நம்புவது எனக்குச் சரி".**

மனித உயிரியல், மற்றும் பௌதீக இயங்கு விதிகளுக்குக் கட்டுப்படாத, அவ்வப்போது தட்டுப்பட்டு அலறவைக்கும் அருவங்கள், அதாவது பேய் பிசாசுகள் இருப்பதாய் நம்மில் பலர் நம்புகிறோம். அதேபோல, சாமான்யர்கள் கண்களில் தட்டுப்படாத அணுக்கள், அணுக்கருத்துகள்கள் எனவும் பொருள்கள் இருப்பதாய் அறிவியலாளார்கள் என்றழைக்கப்படுபவர்களில் பலர் நம்புகிறார்கள்.

முன்னதைக் கிட்டத்தட்ட மூடநம்பிக்கை என்கையில், பின்னதை அவ்வாறு நாம் கருதுவதில்லை. இது புரட்டில்லையா? பேய் பிசாசு இருப்பதாய் நம்புவதை அறிவியல் சிந்தை மறுக்கிறதா? அப்படியெனில் உலகில் சாமான்யர் இதுவரை பார்த்திராத ஏலியன்கள், வளி-அறிவு-ஜீவராசிகள் இருப்பதாய் ஏன் நம்பலாம்? எவ்வகைத் தேடலுக்கும் இதுவரை தென்படாத இவர்கள் இருப்பதாய் மட்டும் ஏன் நம்பவேண்டும்? அறிவியல் சிந்தைக்கே ஒவ்வாத செயலாய் படுகிறதே. ஏன் ஒப்புக்கொள்கிறோம்?

இக்கேள்விகள் பேய், பிசாசு, ஏலியன்கள் பற்றியவை மட்டுமில்லை. அறிவியல் சிந்தைக்கும் அதை புரிந்துகொள்ள முற்படும் சாதாரண சிந்தைக்கும் நடக்கும் ஆதர்ச சம்பாஷணையின் ஒரு சரடு.

சற்று விஷயம் தெரிந்தவர்கள் இவ்வகைக் கேள்விகளின் சாராம்சத்தை அறிவியலாளர்களிடம் வேறுவகையாகக் கேட்பார்கள். பேய், பிசாசு இருப்பதை நம்ப மறுக்கிறீர்கள், ஆனால் நியூட்ரினோ, ஹிக்ஸ் போஸான் என்றெல்லாம் கண்ணுக்குத் தெரியாத, இதுவரை யாருமே பார்த்திராத, அணுவிலும் சிறிதான துகள்களை இருப்பதாய் நம்பி Large Hadron Collider என்று பெரிய உந்திகள் வைத்து துகள்களை முடுக்கி, மோதவிட்டுத் தேடிக்கொண்டிருக்கிறீர்களே.

ஒரு புதிய கோணத்தில் இவற்றை விவாதிப்போம். தெளிவு பிறக்கலாம். ஏலியன்கள், மற்றும் பேய் பிசாசுகள், மனிதப்புலன்களுக்கு நேரடியாகக் கைகூடாத இயற்கை பற்றி கேட்கப்படும் கேள்விகளுக்கு சுருக்கமான பதில்: பேய்ஸ் தியொரெம் (Bayes theorem).

ரெவரெண்ட் தோமஸ் பேய்ஸ் தன் கோட்பாட்டின்மூலம், "நிபந்தனையுள்ள நிகழ்தகவுகள்" எனும் கருத்தாக்கத்தை வைத்து, புதிய உள்ளொளி பெற்ற திறப்புகளைக் கொணர்ந்தார்.

ஒரு கருத்தாக்கம் அல்லது நிகழ்வின் சாத்தியம், புதிய சாதக, பாதகச் சான்றுகள் அல்லது ருசு உருவாகுகையில், எவ்வாறு மாறுபடும் என்பதை கணக்கிட வல்லது பேய்ஸ் கோட்பாடு. நடக்கக்கூடிய ஒரு நிகழ்வின் நம்பகத்தன்மையை, அதனை பாதிக்கும் பிற நிகழ்வுகளை, தகவல்களை வைத்து,கணித மதிப்பீடாய், அறுதியாக்க, பேய்ஸ்கோட்பாட்டை உபயோகிக்கலாம்.

பிரசித்திபெற்ற வானியலாளர் கார்ல் ஸாகன் (Carl Sagan) தன் "கொஸ்மோஸ்" (Cosmos) புத்தகத்தில், "அசாத்தியமான சாதிப்புகளுக்கு, அவற்றின் நம்பகத் தன்மையை உயர்த்த அசாதாரணமான சாட்சியங்கள் வேண்டும்," என்றார். இக்கூற்றே "பேய்ஸ் தேற்ற"த்தின் சாராம்சம் எனலாம்.

உதாரணமாக எங்கள் வீட்டில் தினம் ஒன்றரை லீற்றர் பக்கெற் பால் வாங்குவோம். இதை, விடியற்காலை நாங்கள் எழுவதற்கு முன்பே, வாசலில் மூன்று அரை லீற்றர் பக்கெற்களாக பால்காரர் போட்டிருப்பார். காலையில் வாசலுக்கு வந்தால் மூன்று பால் பக்கெற்கள் இருக்கும் என்பது எனக்குப் பரிச்சயம். ஆச்சரியம் இல்லை. எனக்கு இது இப்படித்தான் நடக்கும் என்று எதிர்பார்க்கக்கூடிய, சாதாரண சாத்தியம் உள்ள நிகழ்வு.

ஆனால், ஒரு காலை வாசலில் ஐந்து பால் பக்கெற்கள் இருக்கிறது என்போம். நான் எதிர்பாராத, ஆச்சரியமான நிகழ்வு இது. எப்படி? இதை விளக்க எனக்கு போதிய நம்பத்தகுந்த சாத்தியங்கள் வேண்டும். உதாரணமாக, ஒருவேளை பால்காரச் சிறுவன் புதுசோ, எங்கள் வீட்டிற்கு எவ்வளவு என்று அளவு தெரியாமல் போட்டுவிட்டானோ? இருக்கலாம். கடையில் பால்காரரைச் சந்தித்து விசாரிக்கையில் தான் இந்த விளக்கத்தின் உண்மை தெரியும். அதுவரை காரணம் நிச்சயம் இல்லை. அதனால் இது அசாத்தியமாக நடக்கக்கூடியதா, உளவியல் ரீதியாக, மனித இயல்பாக, இது நடக்கக்கூடியதா, ஊரில் மற்றவர்களுக்கு இப்படி நடக்கலாமா, போன்றவைகளை வைத்து தான் என்னுடைய இந்த விளக்கத்தின் நம்பகத்தன்மையை உயர்த்தி, ஒப்புக்கொள்ள முடியும். மறுப்பு தெரிவிக்க நான் கூறும் விளக்கத்தைவிடவும் வலுவான சாத்தியங்களுடனான ஒரு விளக்கத்தை, காரணத்தை ஐந்து பால் பக்கெற் இருப்பதற்காக நீங்கள் கூற வேண்டும். அதுவரை, என் விளக்கம் ஓரளவு ஒப்புக்கொள்ளக்கூடியதே.

மறுப்பாக, நீங்கள், ஒரு வேளை பக்கத்து வீட்டிற்குப் போடும் பக்கெற்களையும் சேர்த்து உங்கள் வீட்டுக்குப் போட்டுவிட்டு போயிருக்கலாம் என்று விளக்கம் கொடுத்தால், அதுவும் சாத்தியமே. என் விளக்கத்தையும் உங்கள் விளக்கத்தையும் எப்படிச் சரிபார்த்து ஒன்றின் நம்பகத்தன்மையை (அதன் நிகழ்தகவின் மதிப்பை) உயர்த்துவது?

இதற்கு மேலும் நமக்கு தகவல்கள் வேண்டும். இதை "முன் நிகழ்தகவு" (prior probability) என்பார்கள். அதாவது, எங்கள் பக்கத்தில் வீடே இல்லை என்று வைத்துக்கொள்வோம். நீங்கள் கூறும் விளக்கம் உடனே சரியில்லை என்றாகிவிடும். அதாவது, நீங்கள் கூறும் விளக்கத்திற்கான "முன் நிகழ்தகவு" மிகக்குறைவு. பூச்சியம் (நிச்சயமாய் நடக்கும் செயலுக்கு நிகழ்தகவு மதிப்பு ஒன்று). இதனால் நான் கூறிய விளக்கமான, பால்காரச் சிறுவன் தவறுத்லாகப் போட்டுவிட்டிருப்பான் என்பதன் நம்பகத்தன்மை உயருகிறது. ஆனால் ஊர்ஜிதம் இல்லை.

ஏனெனில் அடுத்த விளக்கமாய் நீங்கள் பால்காரச் சிறுவன் மூன்றுதான் போட்டிருக்கிறான், ஒருவேளை குரங்கு வேறு எங்காவதிருந்து இழுத்துவந்து இரண்டு பக்கெற்களை போட்டிருக்கலாம் என்று புதிய விளக்கம் கூறலாம். இது அசாத்தியமான விளக்கம். ஊரில் மற்ற இடங்களில் விசாரித்தால் வீட்டில் இவ்வாறு நடப்பதாக முன்னுதாரணம் இருக்காது. அதனால் இந்த விளக்கம் உடனே பொய் என்று கூறுவதா? முடியாது.

எங்கள் வீடு இருப்பது குரங்கு மான் போன்ற விலங்குகள் பெருவாரியாக இருக்கும், சுதந்திரமாக மனிதர்களுடன் வெளியில் உலாவிப்பழகும் இடத்தில் தான். அதனால் குரங்குகள் உணவிற்காக இப்படி எங்கள் வீடுகளில் புகுந்து சூறையாடிவிடுவது நடப்பதே. அதனால் உங்களுடைய புதிய விந்தையான விளக்கம் எனக்கு அவ்வளவு விந்தையில்லை.

ஆனாலும், அடுத்த கேள்வியாக மற்றவர் வீட்டிலிருந்து பால் பக்கெற்றை தன் உணவாக எடுத்துவந்த குரங்கு, என் வீட்டில் மற்ற பக்கெற்களுடன் ஏன் போடவேண்டும். எங்கள் மூன்று பக்கெற்களையும் சேர்த்தல்லவா எடுத்துச்சென்றிருக்க வேண்டும்? இந்த கேள்விக்கான விடை நம்பகமாகக் கிடைக்காத வரை, உங்கள் விளக்கம் மொத்தமாக பொய்யுரையில்லையெனினும், ஒப்புக்கொள்ளக்கூடியதாக இருக்காது. அவ்வகையில் நடந்திருப்பதற்கான சாத்தியம் மிகக்குறைவு என்பதால், இதன் நம்பகத்தன்மையை உயர்த்த அசாத்தியமான சாட்சியங்களை நீங்கள் சொல்ல வேண்டும்.

போதும். இப்படிச் சிந்திப்பதின் கணித சாராம்சம்தான் பேய்ஸ் கோட்பாடு. ஒரு நிகழ்வின் "முன் நிகழ்தகவு" (prior probability) எவ்வளவு அதிகமோ, அவ்வளவு அதிகம் அந்த நிகழ்வின் மூலம் அடுத்து நடக்கக்கூடிய நிகழ்வின் சாத்தியம் அல்லது அசாத்தியம் (அதாவது, posterior probability, "பின் நிகழ்தகவின்" மதிப்பும் அதிகரிக்கும்).

இப்போது முன்னர் கேட்ட கேள்வியை பரிசீலிப்போம். பேய் பிசாசுகள் மனிதர்கள் இல்லை என்பது திண்ணம். அவைகளை உலகில் அநேகர் தின நிகழ்வாய் பார்க்காதிருக்கையில், நான் பார்த்தேன் என்றால், அது அசாத்தியமான நிகழ்வு. அதற்கான நம்பகத்தன்மையை உயர்த்த அசாத்தியமான சாட்சியங்கள் வேண்டும். இதுவரை நமக்குக் கிடைக்கக்கூடிய சாட்சியங்கள் அவ்வளவு அசாத்தியமானது அல்ல என்று நிரூபிக்க முடிகிறது.

ஒரு உபகதை. அமெரிக்க ஜனாதிபதி தோமஸ் ஜெ.்.ப்.்.பெர்ஸன் (Thomas Jefferson) ஒருமுறை சொன்னது: "எரிகற்கள் இருக்கிறது என்று நம்புவதைவிட, இரண்டு பேராசிரியர்கள் பொய் சொல்லியிருக்கலாம் என்று நம்புவது எனக்குச் சரி". வானிலிருந்து எரிந்துகொண்டே கற்கள் வந்து விழுந்தன என்று இரண்டு பேராசிரியர்கள் தாங்கள் நேரில் பார்த்த சாட்சியாக அமெரிக்காவில் நாளிதழில் பேட்டியளித்தனராம். இதைக் கேள்விப்பட்டு ஜெ.்.ப்.்.பெர்ஸன் கொடுத்த பதிலடி அது.

பதினெட்டாம் நூற்றாண்டில் எரிகற்களைப்பற்றி மனிதகுலம் விரிவாக அறிந்திருக்கவில்லை. அப்படி ஒரு நிகழ்வின் சாத்தியம் கிடையாது என்றே நினைக்கக்கூடும். அதை விடவும், இரண்டு பேர்வழிகள் "பதினைந்து நிமிடப் புகழுக்காக" பொய் சொல்லியிருக்கலாம் என்பதன் சாத்தியமே அதிகம். ஆனாலும், பேராசிரியர்கள் கூறியது நிஜம் என்று வரலாற்றில் பிறகு கண்டோம்.

இன்று எரிகற்கள் விழுவதை பார்த்து நம் குழந்தைகள் நம்மிடம் சொன்னாலும் பெரிதாக அலட்டிக்கொள்ளாமல் அவர்களை நம்புவோம். இதுவரை நாம் அறிவியல் மூலம் எரிகற்களைப் பற்றி அறிந்துகொண்ட தகவல்கள், இந்த நிகழ்வு நடக்கலாம் என்பதற்கான "முன் நிகழ்தகவை"அதிகமாக்கிவிட்டது. ஆனால், இன்றும் பேய் பிசாசுகள் அசாத்தியமான நிகழ்வே. இதுவரை அறிந்துகொண்டுள்ள அறிவியல் கட்டுமானத்திற்குள் வருவதற்கான "முன் நிகழ்தகவு" மிகவும் குறைவாகவே இருக்கிறது.

அணுக்கருத் துகள்கள், நியூட்ரினோக்கள், ஹிக்ஸ் போஸான்கள் என்று இயற்பியலாளர்கள் தேடும் வஸ்துகளுக்கும், பேய் பிசாசுகளுக்கும் உள்ள பெரிய வித்தியாசம் இதுதான். குருட்டாம்போக்கில் கண்ணுக்குத் தெரியாத துகள்களை இயற்பியலாளர்கள் தேடிக்கொண்டிருக்கவில்லை. இவ்வகைத் துகள்கள் இருப்பதற்கான ஒரு இயற்பியல் கோட்பாடு, கட்டுமானம் ஏற்கனவே இருக்கிறது. இதைச் சார்ந்த பல துகள்களை ஏற்கனவே அறிவியல் விதிகளையும் அவற்றின் நீட்சிகளையும் வைத்துக் கண்டுள்ளனர்.

இதெல்லாம் சரி, ஏலியன்கள் விஷயத்தில்எப்படி? பேயஸ் தேற்றத்தை ஏலியன்-கள் இருக்கிறார்களா, நம்பலாமா என்ற விஷயத்திற்கு பிரயோகித்தால், உடனே கேட்க வேண்டிய ஆதாரக் கேள்வி: ஒரு வளி-அறிவு.்.ஜீவன் பிரபஞ்சத்தில் எங்கோ இருக்கிறது என்பதற்கான முன் நிகழ்தகவு (prior probability) என்ன? நேர்மையான பதில்: ஒருவருக்கும் தெரியாது.

ஆனால், பிரபஞ்சத்தில் அறிவு ஜீவராசி கள் இருக்கலாமா என்றால், நிச்சயம் இருக்கலாம், நாம் இருக்கிறோமே என்பீர்கள். அதனால் நிச்சயம் ஏலியன்கள் இருக்கலாம். அதற்கான முன் நிகழ்தகவு கிட்டத்தட்ட ஒன்று என்பீர்கள்.

அதேபோல், ஏலியன்கள் இல்லையா என்றால், அதற்கும் பதில் நாம் இருப்பதை வைத்துமட்டும் கூற முடியாது. இதனால், ஏலியன்களை தேடுதல் விரயம் என்று உறுதியாக சொல்லமுடியாது. இல்லை என்பதற்கான சாட்சியங்களோ, அறிவியல் கட்டுமானங்களுட்பட்ட நிரூபணங்களோ நம்மிடம் இல்லையே.

பேய்ஸ் தேற்றம் (Bayes theorem) தரும் அறிவார்ந்த வாதப்படி ஏலியன்கள்புரட்டல்ல.பேய் பிசாசுகள் போல அறிவியல் கட்டுமானங்களுக்கு அப்பாற்பட்டதல்ல. ஏலியன்-கள் ஒன்று சுத்தமாக கிடையாது.




ஏலியன்ஸ் சந்திப்பு?

(18ஆம் பக்கம் பார்க்க)

# மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரம் மீளவும் பிரிவினையை ஏற்படுத்தும்

## எச்சரிக்கிறார் கோத்தா



(கொழும்பு)

மாகாண சபைகளுக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரம வழங்குவதன் மூலம் நாடு குழப்பமடைவதுடன் பிரிவினையையும் ஏற்படுத்தும் பொலிஸ அரசியல் மயமாவதை தடுக்க முடியாது என பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

13 ஆவது திருத்தம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது,

13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் படி மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கினால் தேசிய பொலிஸ் 9 ஆக உடையும் 9 மாகாணங்களிலும் 9 பொலிஸ் உருவாகும். பொலிஸ் நிலையங்கள் தொடர்பில் பொலிஸ் மா அதிபருக்குள்ள அதிகாரம் இல்லாமல் போகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஒவ்வொரு மாகாணத்திலும் முதலமைச்சர்களின் கீழ் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஒருவரின் தலைமையில் மாகாண பொலிஸ் இயங்கும். ஆட்சேர்ப்பும் பொலிஸ் அதிகாரத்தின் கீழ் காணப்படுகின்றது. இதன் மூலம், இன ரீதியான பொலிஸ் நிலையங்கள் உருவாகும் அபாயம் எழும்

இதன் மூலம், நாட்டில் பிரிவினை வாதம் தலை தூக்கும், மாகாணத்திற்குப் . பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதபர் ஏதும் தவறு செய்தால் அவரை விசாரிப்பதற்கு பொலிஸ் மா அதிபர் மாகாண முதலமைச்சரின் அனுமதியைப் பெற வேண்டும். அவரை விசாரிப்பதும் விசாரிக்காமல் இருப்பதும் முதலமைச்சரின் விருப்புப் படியே நடக்கும்

மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்குவதன் மூலம் தேசிய பொலிஸ் சேவை துண்டுகளாக பிரிக்கப்படும். 75 ஆயிரம் பொலிஸாரும் மாகாணங்களுக்கு பிரிந்து செல்வதன் மூலம் பொலிஸ் தலைமையகத்தில் 600 பொலிஸாரே எஞ்சுவர்

பொலிஸ் ஆயுதம் தரித்திருப்பதன் மூலம் மாகாணங்கள் தனியான ஆட்சியில் ஈடுபட ஆயுதப் போராட்டத்தில் குதிக்கும் அபாயமும் உள்ளது. பொலிஸ் அதிகாரம் வழங்குவதன் மூலம் நாட்டில் மீண்டும் பிரிவினை ஏற்பட்டு யுத்தம் ஏற்படும் சூழல் ஏழலாம் என்றும் கூறினார்.

# இனவாத தீயை அணைக்க 50 வீதமானோரே முயற்சி

## கவலை கொள்ளும் வாசு

(கொழும்பு)

இலங்கையின் தற்போதைய அரசாங்கத்தில் இருக்கும் அமைச்சர்களுக்கிடையில், நாட்டிற்குள் இனவாதம் மற்றும் மதவாத தீயை அணைப்பதற்காக நேர்மையாக முயற்சிப் பவரகள் 50 வீதமானவர்களே என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஏனையவர்களில் பெரும்பாலானவர்கள், இனவாத, மதவாத செயற்பாடுகளில் நேரடியாக ஈடுபடாவிட்டாலும் அதற்கு இரகசியமான முறையில பங்களிப்பு செய்து வருகின்றனர்.

தமது இனம் மற்றும் மதம் தொடர்பில் கொண்டுள்ள குருட்டுத்தனமான பக்தி காரணமாவே அவர்கள் அவ்வாறு செயற்பட்டு வருகிறார்கள்.

இது நாட்டிற்குள் தேவையற்ற வன்செயல்கள் ஏற்பட வழி வகுக்கும்.

நாட்டில் இன மற்றும் மதவாத தீயை ஏற்படுத்த தாம் தெரிந்தோ தெரியாமலோ உதவி வரும் அமைச்சர்கள் அதனை தற்போதாவது நிறுத்திக் கொள்ள வேண்டும் எனவும் வாசுதேவ நாணயக்கார கூறியுள்ளார்.

# திருமலை மாணவர் படுகொலை 12 அதிரடிப்படையினர் கைது

(கொழும்பு)

2006 ஆம் ஆண்டு ஜனவரி 2 ஆம் திகதியன்று திருகோணமலை கடற்கரையில் வைத்து ஐந்து மாணவர்கள் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் விசேட அதிரடிப்படை வீரர்கள் 11 பேரும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருமாக 12 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் விசேட அதிரடிப்படையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவரும் அடங்குகிறார். அத்துடன் பொலிஸார் ஒருவரும் இரகசிய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் கைது செய்யப்பட்ட 12 பேரும் நேற்று முன்தினம் திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். இதனையடுத்து குறித்த 12 பேரையும் எதிர் வரும் 18 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிழன்றம் உத்தரவிட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கொல்லப்பட்ட மாணவர்களில் ஒருவரான ரஜிதரின் தந்தையான டொக்டர் காசிப்பிள்ளை மனோகரன், கடந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலும் சாட்சியமளித்திருந்தார்.




சம்பவத்தின் போது ரஜிதருடன் யோகராஜா ஹேமசந்திரன், லோகிதராஜ் ரோஹன், தங்கதுரை சிவானந்தா, சண்முகராஜா கஜேந்திரன் ஆகியோரே கொல்லப்பட்டவர்களாவர்.

இதேவேளை இந்த மாணவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டே கொல்லப்பட்டார்கள் என்பதனை தமது புகைப்படத்தின் மூலம் பத்திரிகை ஒன்றில் வெளியிட்ட ஊடகவியலாளரான சுப்பிரமணியன் சுகிர்தராஜனும் பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கே.பி.குறித்த தகவல்களை அம்பலப்படுத்த வேண்டும் அரசு

## கோருகிறது ஐ.தே.க



(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் முன்னாள் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் குமரன் பத்மநாதன் எனப்படும் கே.பி.யின் விபரங்களை அரசாங்கம் அம்பலப்படுத்த வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

வட மாகாணசபை தேர்தலில் குமரன் பத்மநாதன் போட்டியிட்டால், அவர் குறித்த விபரங்கள் அம்பலப்படுத்தப்பட வேண்டியது அவசியமானது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பின ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத நடவடிக்கைகள் மற்றும் ஏனைய சகல விபரங்கள் பற்றியும் அம்பலப்படுத்தப்பட வேண்டுமென குறிப்பிட்டுள்ளார். கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதிகள் ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து கொள்வது வரவேற்கப்பட வேண்டியது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், அவர்களது கடந்த காலத் தவறுகளுக்கான தண்டனை விதிக்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

13 ஆவது திருத்தச் சட்டத்தை ரத்துச் செய்வதில் அரசாங்கம் தற்போது நாட்டம் காட்டி வருவதாகவும், குறித்த சட்ட மூலத்தை இரத்து செய்ய மெய்யாகவே அரசாங்கம் விரும்பியிருந்தால் யுத்தம் நிறைவடைந்த காலத்தில் அதனை செய்திருக்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 15 இலங்கையர்களை நாடு கடத்தியது ஆஸி

அவுஸ்ரேலியாவுக்கு சட்ட விரோதமாக புகலிடம் கோரிச் சென்ற 15 இலங்கையர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளனர். இவர்கள் நேற்று நாடு கடத்தப்பட டதாக அவுஸ்ரேலிய குடிவரவு திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

குறித்த 15 பேரும் கிறிஸ்மஸ் தீவில் இருந்து இலங்கைக்கு விமானத்தின் மூலம் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி கடந்த வருடம் ஒகஸ்ட் தொடக்கம் இது வரையில 1285 இலங்கை அகதிகள் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

இவர்களில் 1072 பேர் சுய விருப்பின் பேரில் நாடு திரும்பியுள்ளதாக அவுஸ்ரேலிய குடிவரவு திணைக்களப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

# கைபேசி ஒட்டுக்கேட்பு விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ உட்பட இலங்கை பாதுகாப்பு பிரிவின் முக்கியஸ்தர்களின் தொலைபேசிகள் ஒட்டுக்கேட்டமை தொடர்பிலான சம்பவம் குறிதது புலனாய்வுப் பிரிவு விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடக அமைசசருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இலங்கை பாதுகாப்பு பிரிவின் முக்கியஸ்தர்களின் தொலை பேசிகள் குறிப்பிட்ட ஒரு தரப்பினரால் ஒட்டுக்கேட்கப்பட்டுள்ளது.

இது குறித்த தகவல்கள் இலங்கை புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்ததையடுத்து அவ்விடயம் தொடர்பில் தீவிர அவதானம் செலுத்தப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஊடக அமைச்சில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப் பின் போது தெரிவித்தார்.

# முதலீட்டுக்கான சிறந்த சூழல் இலங்கையில் காணப்படுகிறது

## அமைச்சர் பஸில் தெரிவிப்பு

இலங்கையில் முதலீட்டுக்கான சிறந்த சூழல் காணப்படுவதாக பொருளாதார அபிவிருத்தியமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். நெடுஞ்சாலைகள் மற்றும் நீர்விநியோக கட்டமைப்புகள் என்பன அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

வடக்கில் அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணிக்கும் வேலைத திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் வெளிநாட்டு நிறுவனங்கள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள அதிக ஆர்வம் செலுத்துவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அபுதாபியின் முதலீட்டாளர்கள் குழுவொன்றுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து பிரிவு பலப்படுத்தப்பட்டுள்ளதால் துரித கதியில் பொருட்கள் விநியோகத்தை மேற்கொள்ள முடிந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மகனுக்கான தண்டனை ஏற்றுக்கொள்ளத் தயார்

## அமைச்சர் கெஹலிய

ரமித்ரம்புக்வெல விடயத்தில் தனிநபர் குழு அமைத்து விசாரணைகள் இடம்பெறுவதால் அதற்குரிய நடவடிக்கையினை அக் குழுவே மேற்கொள்ளும் என அவரது தந்தையும், ஊடகத்துறை அமைச்சரும், அமைச் சரவைப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

ஊடக அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாராந்த அமைசசரவை தீர்மானங்களை அறிவிக்கும ஊடகவியலாளர் மாநாடடில் கலந்துகொண்டு ஊடகவியலாளர் எழுப்பிய கேளவிகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், விமானத்தில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் தனிநபர் குழுவொன்று அமைக்கப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருவதால் அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அது எவ்விதமான தண்டனையாகவிருந்தாலும் ஏற்றுக் கொள்ளவேண்டும். அவரது சிறுநீரகமும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது ஒரு சிறிய சம்பவமே. இதனை பிரான்ஸிஸ் என்ற பெண்ணே டெய்லி டெலிகிராபிற்கு தெரிவித்திருந்தார். அது குறித்து பிரிட்டிஷ் எயார்வேஷ் சிறிய சம்பவம் எனத் தெரிவித்திருந்தது என அவர் மேலும் தெரிவித்தார்

# கிளிநொச்சி தபால் நிலைய தேவைகள் குறித்து ஆராய்வு

கிளிநொச்சி மாவட்டத்தில் தபால் நிலையங்களின் செயற்பாடுகள் விநியோகங்களில் உள்ள நடைமுறைப் பிரச்சினைகள் குறித்து ஈ.பி.டி.பி யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தலைமையில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி தபால் நிலையத்தில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள தபாலகங்களில் உள்ள தேவைகள் மற்றும் ஆளணிப் பற்றாக்குறைகள் உள்ளிட்டபல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன. இதன் போது அங்கு கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர், தபால் விநியோக செயற்பாடுகள் மக்களுக்கு மிகவும் அத்தியாவசியமான சேவை. எனவே இயன்றவரைமக்களுக்கு சிறந்த சேவையினை வழங்க வேண்டும். தபால் நிலையங்களிலும், விநியோக செயற்பாடுகளிலும் பல்வேறு நடைமுறைப் பிரச்சினைகள் உண்டு அவ்வாறான பிரச்சினைகளை நாம் அறிந்துள்ளோம் அவற்றை எதிர்காலத்தில் தீர்த்து வைப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் நாம் மேற்கொளவோம் .ஆனால் தற்போது பணியாற்றுகின்ற தபால் ஊழியர்கள் கடந்த நெருக்கடியான காலத்தில் செய்தது போன்று எதிர் வரும் காலங்களிலும் சிறந்த சேவையினை மேற்கொள்வர் பெரும்பாலும் கிராமங்களில் தபால் விநியோகம் மேற்கொள்கின்ற போது மக்களுக்கான கடிதங்கள் கிராமம் ங்களிலுள்ள பொது இடங்கள் மற்றும் வியாபார நிலையங்களில் வழங்கிவிட்டுச் செல்வதாகவும்,அதனால் மக்களுக்கு பல்வேறு அசௌகரியங்கள் ஏற்படுவதாகவும் மக்கள் எம்மிடம் தெரிவிக்கின்றனர். எனவே அவற்றைத் தவிர்த்து மக்களின் வீடுகளுக்கே சென்று கடிதங்களை விநியோகிக்க வேண்டும் எனவும குறிப்பிட்டார்.

இங்கு கருத்துத் தெரிவித்த வடமாகாண உபதபாலதிபர் இரத்தினசிங்கம் தபால் விநியோகங்கள் கிராமங்களில் உள்ள பொது இடங்களிலோ அல்லது வியாபார நிலையங்களிலோ கொடுத்து விட்டு வருவது தவிர்க்கப்படல் வேண்டும் கடிதங்கள் எவருக்கு வருகிறதோ அவரிடம சேர்க்க வேண்டும் இதனைக் கட்டாயம் நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும வலியுறுத்தினார்.

இக்கலந்துரையாடலில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா பிராந்திய தபால் அத்தியட்சகர் திருமதி சல்காது கிளிநொச்சி தபாலதிபர்,உபதபாலகங்களின் அதிபர்கள்,ஊழியர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (௨௧)

# புல்லாவெளி செபஸ்தியார் ஆலய வருடாந்த திருவிழா ஆரம்பம்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு முள்ளியவளை பகுதியில் பிரசித்த பெற்ற கத்தோலிக்க தேவாலயமான புல்லாவெளி புனித செபஸ்தியார் தேவாலய வருடாந்த திருவிழா நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பூசைகள் வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

விசேட நிகழ்வாகஇன்று சனிக்கிழமை காலை 7மணிக்கு நற்கருணை ஆராதனை வழிபாடு தாளையடி பங்குத் தந்தை அருட்திரு எம்.யேசுரட்ணம் அடிகளாா தலைமையில் இடம்பெறவுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7மணிக்கு திருவிழா கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு திருச்சொரூப பவனியுடன் வருடாந்த திருவிழா இடம்பெறும். வருடாந்த திருவிழாவையொட்டி பருத்தித்துறைபிரதேசசபை தேவாலய சுற்றாடலிலுள்ள கிணறுகள் சுத்தம் செய்யப்பட்டதுடன் திருவிழாக் காலத்தில் பௌசர் மூலம் குடி தண்ணீர் வழங்குவதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மடு ஆலயத்திருவிழாவை முடித்துக்கொண்டு யாழ்ப்பாணம் திரும்பும் குருநகர் பாசையூர் மக்கள் புல்லாவெளி செபஸ்தியார் தேவாலயத்தில் தங்கி நின்று அதன் வருடாந்த திருவிழாவில் கலந்து கொண்ட பின்னர் தத்தமது இடங்களுக்குச் செல்லும் மரபுவழிக்கமைய திருவிழா இடம்பெறுகிறது. (109)

# இரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு முகப்புவயல் அருள்மிகு சிவசுப்பிரமணியசுவாமி ஆலய வருடாந்த தேர் உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இவ்வாலய வருடாந்த மகோற்சவம் கடந்த 29 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி திருவிழா நடைபெற்று வருகின்ற நிலையில் நாளை மறுதினம அதிங்கட்கிழமை காலை தீர்த்தத் திருவிழாவும் மாலை கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. (21)

# இலவச கண்சிகிச்சைக்கு பதிவு செய்யக் கோரிக்கை

(வேலணை)

ஊர்காவற்றுறை சுகாதார வைத்தியஅதிகாரி பிரிவில் கண் நோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் நன்மைகளை கருதி விசேட சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளன. வெளிநாட்டில் குடியேறியுள்ள நலன் விரும்பி ஒருவரது நிதியில் இருந்து கண்பார்வை அற்றவர்கள் மற்றும் கண்ணில் கற்றாக் குறும்பார்வை, நீள்பார்வைக் குறைபாடு உடையவர்களை இனம் கண்டு அவர்களது குறைபாடுகளை நீக்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. முற்றிலும் இலவசமாக செய்யப்படவிருக்கின்ற இந்தச் சேவைகளைச் பெற்றுக்கொள்ள விரும்புவோர் உடனடியாக ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரியினது அலுவலகத்திலோ அல்லது பொதுச் சுகாதார பரிசோதகரிடமோ தங்களின் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் 14ஆம் திகதி இதற்கான தெரிவுகள் இடம்பெற்று அதற்குரியவர்களை இனங்கண்டு அவர்களுக்கு சிகிச்சைகள் அளிப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)




சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் அண்மையில் நடத்திய இரத்ததான நிகழ்வில் கழக இளைஞர்கள் இரத்த தானம் செய்வதைக் காணலாம்.

# முரசின் இன்றைய பலன்

(06.07.2013 –சனிக்கிழமை)

விஜய வருஷம் ஆனி மாதம் 22 ஆம் திகதி. மிருகசீரிடம் நாள்முழுவதும் திரயோதசி திதி மு.ப 09.07 வரை. சித்தம் நாமயோகம் இராகுகாலம 08.58-10.28வரை. சுபநேரம் 02.58-04.28 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** கிரிக்கெட்டில் சாதனை, பரீட்சை முடிவு வேதனையைத் தரல், குழந்தைப்பேறு, இன்னிசை அரங்கேற்றம், பழைய மனையை அழித்தல், உதவிசெய்ய வருவோரை எச்சரித்தல், பிரமுகர் சந்திப்பு, வேலை பற்றிய சுபசெய்தி, கனவினால் பதற்றம், ஆசிபெறுதல், உணர்ச்சிவசப்பட்டு காரியக்கேடு, சுவீப்பில் பணம், நோய் குணமடைதல்.

**ரிஷபம்** மலிவு விற்பனையில் பொருட்கள் பெறும் மகிழ்வு, குறை கூறி நண்பர் எதிரியாதல், விட்டுக்கொடுப்பதால் மன அமைதி, தத்துப்புத்திரயோகம் ,அரசஊழியரின் கருணை, ஆன்மீகத்தில் நாட்டம், மகிழ்ச்சிகரமான செய்தி, பயணச்சிந்தனை, பணவரவில் திருப்தி, உடன்பிறந்தோரின் ஒத்துழைப்பு, சேமிக்கும் மனநிலை, பின்னடைவுகள் நீங்கும.

**மிதுனம்** பைபாஸ்-பற்றிய அச்சம் தவிர்த்தல், குடும்பத்தகராறு ஆவணங்கள் தவறுதல், வேகக்கட்டுப்பாட்டை இழந்துதுயர், சந்தேகத்தால் கைகலப்பு, சலுகைகள் கிடைத்தல், பயணம், புத்திரர் பற்றிய சோகச்செய்தி, நம்பி ஏமாற்றம், காசோலை திரும்பும் சங்கடம், முன்கோபத்தால் பதற்றம், அயல்வீட்டார் தொல்லை அகலும்.

**கடகம்** நடமாடும் சேவைமூலம் பயன், அதிர்ச்சித்தோல்வி, காப்புறுதியில் சாதனை, பேச்சு வார்த்தை முடிவின்றி இழுபடல், தாயாரின் உடல்நிலை பற்றியசிறிய கவலை, மங்கள காரியத்திற்கு செலவுகள், வெளிவட்டாரத்தொடர்பு, குடும்ப மனத்தாங்கல் நீங்குதல், மார்புச்சளிநோய்க்கு வைத்தியம், சுவீப்பில் பெருந்தொகை பணம்.

**சிம்மம்** தொழில் பெறவிண்ணப்பித்தல், தனியார் மண்டபம்பெற அலைச்சல், தீர்வை வரிச்சலுகையில் கனரகவாகனம், பயிற்சிப்பட்டறையில் கலந்துகொள்ளல், சுபகாரிய நிகழ்வுகளை ஒத்திவைத்தல், தீயால்சிறுசேதம், அரசியலில் குதிக்கும் எண்ணம், வெளிநாட்டு உறவினர், விருந்தினர் வருகை, திருமணத்திற்காக மதம் மாறும் எண்ணம்.

**கன்னி** கருத்தடைசத்திரசிகிச்சை, நோயாளர் நலன்புரிச் சங்கத்தில் அங்கத்துவம், ஆட்டுத்திருட்டு ,விக்கிரகங்கள் அபகரிப்பு, சிரமதானப்பணிகள், அடிப்படைவசதிக் குறைவால்அவதி, அதிரடித்திட்டமொன்றை நிறைவேற்றல், பயணத்தினால்சோகம், சத்திரசிகிச்சைக்கு நாட் குறித்தல், பரீட்சை முடிவினால் மனதிற்கு சந்தோஷம்.

**துலாம்** சுற்றுலா செல்லும் விருப்பு, ,பாராட்டி வாழ்த்துப்பெறல், அறிவுரைகேட்டு மனமாற்றம், அரசியல்பேச வாய்திறந்து கெடுதி, ஞாபக இழப்பினால் பொருட்கள் தொலைத்தல், காலாவதியான பொருட்களால் மனத்துக்கம், நித்திரை செய்வதால் அருகிலிருப்பவர் பொருளைச்சூறையாடல், காரியஞ்சாதிக்க இனிக்கப்பேசுதல்.

**விருச்சிகம்** இயற்கை அழிவினால் கவலை, பொம்மலாட்டக்கலை கற்க விருப்பு, அரங்கேற்றம், கடனை கட்ட பூர்வீகச்சொத்து விற்றல், எதிரி, திருடரால் பிரச்சினை, குப்பை கொட்டியதால் தண்டம், நிகழ்விற்கு அழைக்காமையினால் உறவினருடன் முறுகல், கிருகப்பிரவேசத்திற்கு நாட்குறித்தல், பயணத்தை ஒத்தி வைத்தல், சுவீப்பில் பணவரவு.

**தனுசு** தேர்தலில் நிற்க விருப்பு, நீர்க்குழாய் சேதமடைதல், மருத்துவக்கல்விக்காக மொஸ்கோ செல்லும் விருப்பு, 9இல்குருநிற்பதனால் பயண ஆரம்பம் வெற்றி, சனி11இல் நிற்பதால் தொழிலால் இலாபம், விவாகப்பேச்சு, நோய்பற்றிய கவலை நீங்குதல், திருட்டுப்பொருள் பிடிபடுதல், மார்புச்சளி, காதுநோய்கட்டுப்பாட்டில் வரல்.

**மகரம்** நடமாடும்சேவை மூலம் தொலைத்தொடர்பு பெறல், திருடரால் பயம், ஆவணமின்மையால் காவல்துறையால் அபராதம், கபாலஇடியினால் கவலை, வங்கித்தொடர்பு முறிவடையும் நிலை, தண்ணீர் கலந்த எரிபொருள் பெறுதல், சேவைமனப்பாங்கு, பயணம் இடையில் இறக்கிவிடல், சிறிதான சத்திரசிகிச்சை.

**கும்பம்** தொழிலாளர் முறைப்பாடுகள் தீர்க்கப்படல், காப்புறுதியால் நன்மை, காதலில் சோதனை, ஓய்வூதியம் பற்றிய மகிழ்வான செய்தி, குடும்பத்தில் ஏற்பட்ட தகராறு நீங்குதல், சகோதரர்களின் உதவி, கர்ப்பம் பற்றிய மகிழ்வு, தலயாத்திரை செல்லும் திட்டம்திருமணத்தடை நீக்கம், தோல் நோய்கள் ஏற்படல்.

**மீனம்** சந்தேக நபர் தலைமறைவு, கெல்மெற் அணியாமையால் தண்டனை, சளிநோய் குணமடைதல், சுவீப் அதிர்ஷ்டம், இனிப்புப்பண்டங்களால் சீனிச்சத்து அதிகரித்தல், நண்பரைப்போல் நடித்து மோசடி, பிரயாணத்தில் அருகிலிருப்போர் பற்றிய அவதானம், அயல்நாட்டு செய்தி மகிழ்வைத்தரல், காதல் உறவு பெற்றோரால் துண்டிக்கப்படல்.

## பிபா தரவரிசைப் பட்டியல் பிரேசில் பாரிய முன்னேற்றம்

பிபா கால்பந்து தரவரிசையில், நடப்பு கொன்பெடரேஷன் கிண்ணக் கால்பந்துத் தொடரில் சம்பியன் கிண்ணம் வென்ற பிரேசில் அணி 9ஆவது இடத்துக்கு முன்னேறியது.

சர்வதேச கால்பந்துப்போட்டியில் சிறந்து விளங்கும் அணிகளுக்கான தரவரிசை பட்டியலை, சர்வதேச கால்பந்து சுட்டமைப்பு (பிபா) நேற்று முன்தினம் வெளியிட்டது. இதன்படி சமீபத்தில் முடிந்த கொன்பெடரேஷன் கிண்ணக் கால்பந்துத் தொடரில் நான்காவது முறையாக பட்டம் வென்ற பிரேசில் அணி, 22ஆவது இடத்தில் இருந்து 9ஆவது இடத்துக்கு முன்னேறியது.

நான்கு இடங்கள் முன்னேறிய கொலம்பியா அணி மூன்றாவது இடத்தைக் கைப்பற்றியது. முதலிரண்டு இடத்தை உலக சம்பியன் ஸ்பெயின், ஜேர்மனி அணிகள் தக்க வைத்துக் கொண்டன. ஆர்ஜென்ரீனா அணி, ஒரு இடம் பின்தங்கி 4ஆவது இடம் பிடித்தது. நெதர்லாந்து அணி 5ஆவது இடத்தில் நீடிக்கிறது.

கொன்பெடரேஷன் தொடரில் மூன்றாவது இடம் பிடித்த இத்தாலி அணி, 8ஆவது இடத்தில் இருந்து 6ஆவது இடத்துக்கு முன்னேறியது. இத்தொடரில் 4ஆவது இடம் பிடித்த உருகுவே அணி, 7 இடங்கள் முன்னேறி 12ஆவது இடம் பிடித்தது. போர்த்துக்கல் (7ஆவது இடம்), குரோஷியா (8ஆவ்து இடம்) அணிகள் பின்னடைவை சந்தித்தன. பெல்ஜியம் அணி 10ஆவது இடத்துக்கு முன்னேறியது. இங்கிலாந்து அணி 9ஆவது இடத்தில் இருந்து 15ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டது.

## விம்பிள்டன் இறுதிப் போட்டியில் பார்டோலி, லிசிக்கி மோதல்



(லண்டன்)

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவில் மரியன் பார்டோலி, லிசிக்கி ஆகியோர் இறுதிப்போட்டிக்கு முன்னேறினர். ரென்னிஸ் போட்டிகளில் மிகவும் கௌரவமிக்கதாக கருதப்படும், கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற விம்பிள்டன் ரென்னிஸ் போட்டி இங்கிலாந்தில் தலைநகர் லண்டனில் விறுவிறுப்பாக நடந்து வருகிறது.

இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் அரையிறுதி ஆட்டங்கள் நடந்தன. ஒரு ஆட்டத்தில் 15ஆம் நிலை வீராங்கனை பிரான்சின் மரியன் பார்டோலி, 20ஆம் நிலை வீராங்கனை பெல்ஜியத்தின் கிரஸ்டின் பிலிப்கென்சை எதிர்கொண்டார். முதல் முறையாக கிராண்ட்ஸ்லாம் அரையிறுதிச் சுற்றில் விளையாடிய பிலிப்கென்சால், நெருக்கடியை சமாளிக்க முடியவில்லை. அனுபவம் வாய்ந்த 28 வயதான பார்டோலி 6-1, 6-2 என்ற நேர் செட்டில் பிலிப்கென்சை பந்தாடினார்.

விம்பிள்டனில் அவர் இறுதிச் சுற்றை எட்டுவது இது 2ஆவது முறையாகும். இதற்கு முன்பு 2007ஆம் ஆண்டு இறுதிப்போட்டியில் வீனஸ் வில்லியம்சிடம் தோற்றிருந்தார்.

மற்றொரு அரையிறுதியில் 24ஆம் நிலை வீராங்கனை ஜேர்மனியின் சபினே லிசிக்கியும், தரவரிசையில் 4ஆவது இடம் வகிக்கும் போலந்தின் அக்னீஸ்கா ராத்வன்ஸ்காவும் பலப்பரீட்சை நடத்தினர். முதல் இரு செட்களை இருவரும் தலா ஒன்று வீதம் கைப்பற்றிய நிலையில், கடைசி செட்டில் ஆட்டம் அனல் பறந்தது. இறுதி செட்டில் தொடக்கத்தில் ராத்வன்ஸ்கா 3-0 என்று முன்னிலை வகித்த போதிலும், சரிவில் இருந்து எழுச்சி கண்ட லிசிக்கி 3-3 என்று சமன் செய்தார். இதன் பிறகு 7-7 என்று வரை சமநிலையே தொடர்ந்தது. இந்த பரபரப்பான கட்டத்தில் 15ஆவது கேமில் ராத்வன்ஸ்காவின் சேர்விசை முறியடித்த லிசிக்கி, பின்னர் தனது சேர்விசை சாதகமாக மாற்றி ஆட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்தார்.

2 மணி 18 நிமிடங்கள் நீடித்த ஆட்டத்தின் முடிவில் லிசிக்கி 6-4, 2-6, 9-7 என்ற செட் கணக்கில் வெற்றிக்கனியைப் பறித்து, கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் முதல் முறையாக இறுதிப்போட்டிக்குள் நுழைந்தார். இந்த ஆட்டத்தில் எதிராளியை விட நிறைய தவறுகளை லிசிக்கி செய்த போதிலும், அவரது அதிரடியான ஷொட்கள் மற்றும் 9 ஏஸ் சேர்வீஸ்கள் வெற்றிக்கு பக்கபலமாக இருந்தன. 1999ஆம் ஆண்டுக்கு பிறகு ஸ்டெபி கிராப்புக்கு பின்னர் விம்பிள்டனில் இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்ற முதல் ஜேர்மனி வீராங்கனை லிசிக்கி ஆவார். இறுதி ஆட்டத்தில் லிசிக்கி - பார்டோலி மோதுகிறார்கள்.

## இலங்கை பிரிமியர் லீக் 90 வெளிநாட்டு வீரர்கள்

(கொழும்பு)

இவ்வாண்டு இடம்பெறவுள்ள இலங்கை பிரிமியர் லீக் ருவென்ரி-20 தொடரில் பங்குபற்றுவதற்காக 90 வெளிநாட்டு வீரர்கள் தங்கள் விருப்பத்தை வெளியிட்டுள்ளதாக இலங்கை பிறீமியர் லீக் தொடரின் பணிப்பாளர் அஜித் ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான்,அவுஸ்ரேலியா, மேற்கிந்தியத்தீவுகள், தென்னாபிரிக்கா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த வீரர்களே இவ்வாறு இவ்வருடத்திற்கான தொடரில் பங்குபற்றுவதற்கு தங்கள் விருப்பத்தை வெளியிட்டுள்ளதாகத்தெரிவித்த அஜித் ஜெயசேகர, இவ்வருடத்திற்கான தொர்டர் பரந்துபட்ட ரசிகர்களை இலக்காகக் கொண்டு செயற்படும் எனத் தெரிவித்துள்ளார். இவ்வருடத்திற்கான தொடர் இலங்கை முழுவதிலுமுள்ள 7 மைதானங்களில் இடம்பெறவுள்ளதாகத் தெரிவித்த அஜித் ஜெயசேகர, பிரேமதாச மைதானம், அம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு மைதானம், பல்லேகல சர்வதேசக் கிரிக்கெட் மைதானம், தம்புள்ள உட்பட்ட மைதானங்களில் போட்டிகள் இடம்பெறவுள்ளதாகத் தெரிவித்தார்.

கடந்த வருடம் முதன்முறையாக இடம்பெற்ற இலங்கை பிறீமியர் லீக் தொடர் பிரேமதாச மைதானம், பல்லேகல சர்வதேசக் கிரிக்கெட் மைதானம் ஆகியவற்றில் மாத்திரம் இடம்பெற்றிருந்ததோடு, அப்போட்டிகளில் பார்வையாளர்கள் வரவு குறைவாகக் காணப்பட்டிருந்தது.

இவ் வருடத்திற்கான போட்டிகள் ஓகஸ்ட் 10ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளதுடன், அப்போட்டிகளுக்கானஅணிகளைத் தெரிவதற்கான தெரிவு எதிர்வரும் ஜூலை 14ஆம் திகதி இடம்பெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கைக்கு எதிரான தொடர் நீக்கப்பட்டார் ஸ்ரெய்ன்



(ஜோகனஸ்பேர்க்)

இலங்கைக்கு எதிரான ஒருநாள் மற்றும் சர்வதேச ருவென்ரி-20 போட்டிக்கான தென்னாபிரிக்க அணியில், வேகப்பந்துவீச்சாளர் ஸ்ரெய்ன் நீக்கப்பட்டார்.

இம்மாத இறுதியில் இலங்கை வர உள்ள தென்னாபிரிக்க அணி (ஜூலை 20 - ஆக., 6), ஐந்து ஒருநாள் மற்றும் மூன்று சர்வதேச ருவென்ரி-20 போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. இத்தொடருக்கான தென்னாபிரிக்க அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

ஒருநாள் மற்றும் ருவென்ரி-20 போட்டிக்கான அணியில் வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரெய்ன் நீக்கப்பட்டார். சமீபத்தில் இங்கிலாந்தில் நடந்த சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடரின் போது இடுப்புப் பகுதியில் அவர் காயமடைந்தார். இதேபோல, கணுக்கால் காயம் காரணமாக ஸ்மித் இடம் பெறவில்லை.

ஆம்லா, இங்ராம், ஆல்விரோ பீற்றர்சன், ரொபின் பீற்றர்சன் ஆகியோர் ஒருநாள் போட்டிக்கு மட்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். ஹென்றி டேவிட்ஸ், இம்ரான் தாஹிர், பார்னல், அறிமுக வீரர் டேவிட் வெய்சி ஆகியோர் ருவென்ரி-20 போட்டிக்கு மட்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

வரும் ஆகஸ்ட் மாதம் பயிற்சியாளர் பொறுப்பில் இருந்து ஹரி கேஸ்டன் விலக உள்ளதை அடுத்து, புதிய பயிற்சியாளராக ரசல் டோமிங்கோ தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவர், இலங்கைக்கு எதிரான தொடரில் அறிமுகப்பயிற்சியாளராக களமிறங்க உள்ளார். துணைப் பயிற்சியாளராக அட்ரியன் பைரல் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஒருநாள் அணி: டிவில்லியர்ஸ் (கப்டன்), அம்லா, பெகார்டியன், குயின்டன் டி காக், டுபிளசி, டுமினி, இங்ராம், கிளைன்வெல்ட், மெக்லாரன், டேவிட் மில்லர், மோர்கல், கிறிஸ் மொறிஸ், ஆல்விரோ பீற்றர்சன், ரொபின் பீற்றர்சன், ஆரோன் பங்கிசோ, டிச்சோட்சொபே.

ருவென்டி-20 அணி: டுபிளசி (கப்டன்), பெகார்டியன், ஹென்றி டேவிட்ஸ், குயின்டன் டி காக், டிவிலியர்ஸ், டுமினி, இம்ரான் தாஹிர், கிளைன்வெல்ட், மெக்லாரன், டேவிட் மில்லர், மோர்கல், கிறிஸ் மொறிஸ், பார்னல், ஆரோன் பங்கிசோ, டிச்சோட்சொபே, டேவிட் வெய்சி.

## விடுதிப் பெண்ணுடன் முறைகேடு திருப்பி அனுப்பப்பட்டார் பாகிஸ்தான் அணி உதவியாளர்

(கராச்சி)

லண்டன் விடுதியில் பெண்ணிடம் தகாத முறையில் நடந்து கொண்ட, பாகிஸ்தான் அணி உதவியாளர் திருப்பி அனுப்பப்பட்ட தகவல் வெளியாகியுள்ளது.

சம்பியன்ஸ் கிண்ண ஒரு நாள் கிரிக்கெட் தொடர் அண்மையில் இங்கிலாந்தில் நடைபெற்றது. இதில் பங்கேற்கச் சென்றிருந்த பாகிஸ்தான் அணியினர், அங்குள்ள விடுதியில் தங்கியிருந்தனர். இவர்களுக்கு உதவியாக, மசாஜ் நிபுணர் மலாங் அலி தங்கியிருந்தார்.

இவர், விடுதியில் வேலை பார்த்த பெண்ணுக்கு பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். இதையடுத்து, மலாங்கின் செயல் குறித்து, பாகிஸ்தான் அணி நிர்வாகத்திடம் புகார் தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்து விசாரித்த அணி நிர்வாகம், புகாரில் உண்மை இருப்பதைத் தெரிந்து கொண்டது. ஏற்கனவே, 2010இல் லண்டனில் சூதாட்டப் புகாரில் சிக்கி, மூன்று வீரர்கள் சிறை சென்ற நிலையில், உடனடியாக இவ்விவகாரத்தைப் பாகிஸ்தான் மூடி மறைத்தது.

இந்த நிலையில், மலாங் மனைவி உடல் நலமில்லாமல் உள்ளார் என்று கூறி, அவரை அவசரம் அவசரமாக பாகிஸ்தானுக்கு திருப்பி அனுப்பிய செயல், இப்போது தெரியவந்துள்ளது. பிரச்சினை குறித்து விசாரித்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை, அவரை பணியில் இருந்து நீக்கியது.

2008இல் 19வயதுக்குட்பட்ட வீரர்களுக்கு உலக கோப்பை தொடர் மலேசியாவில் நடந்தது. அப்போது அணியினருடன் சென்ற மலாங் அலி, வீரர்கள் அறையில் இருந்து விலையுயர்ந்த பொருட்கள், பணத்தை திருடியது, விடுதியில் இருந்த சி.சி.டி.வி., கமரா மூலம் உறுதியானது.

இதற்காக நீக்கம் செய்யப்பட்ட இவர், வீரர்களுடன் கொண்ட நெருக்கம் காரணமாக மீண்டும் பணிக்குத் திரும்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 2020 ஒலிம்பிக்; ஸ்பெயினுக்கு வாய்ப்பு

madrid2020

Ciudad Aspirante

2020 ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கென போட்டியிடும் நாடுகளின் உத்தேச விளக்கவுரையில் ஸ்பெயின் சிறப்பாக பிரகாசித்துள்ளது.

இந்தப் போட்டிகளை நடத்துவதற்கென ஸ்பெயினின் மெட்ரிட், துருக்கியின் இஸ்தான்புல் மற்றும் ஜப்பானின் டோக்கியோ ஆகிய நகரங்கள் போட்டியிடுகின்றன.

சுவிட்ஸர்லாந்தில் நடைபெற்ற சர்வதேச ஒலிம்பிக் குழுவின் முக்கிய சந்திப்பில் போட்டிகளை நடத்துவது தொடர்பான நாடுகளின் விளக்கவுரைகள் வழங்கப்பட்டன.

போட்டிகள் இடம்பெறும் பகுதிகளின் 80 வீதமான நிர்மாணப் பணிகள் நிறைவு பெற்றுள்ளதுடன், 1.9 பில்லியன் அமெரிக்க டொலர்களே நிர்மாணப் பணிகளுக்கு தேவைப்படுவதாக ஸ்பெயின் கூறியுள்ளது.

நாம் விரைவாக சகல ஏற்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றோம். இதில் எங்களுக்கு பூரண திருப்தியும் இருக்கின்றது. எங்கள் ஒலிம்பிக் போட்டியை நடாத்தும் உரிமையைப் பெற்றால் இதுவரை இல்லாத அளவிற்கு போட்டியை சிறப்புற நடத்தும். எங்கள் நாட்டு மக்கள் அனைவரும் அதற்கு துணைபுரிவார்கள். அவர்கள் பங்களிப்பு அதிகமாக இருக்கும் என நம்புகின்றோம் என ஸ்பெயின் ஒலிம்பிக் சம்மேளம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேசிய மட்டப் போட்டிகளில் வடக்கிற்கு சிறந்த பெறுபேறு

## நம்பிக்கை கொள்கிறார் ஆளுநர்



(யாழ்ப்பாணம்)

இந்த ஆண்டு இடம்பெறும் தேசிய மட்டப் போட்டிகளில் சிறப்பான பெறுபேறுகளை வடமாகாண வீர,வீராங்கனைகள் பெற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை உள்ளதென வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டி நேற்று முன்தினம் ஆரம்பமானது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், நான் இந்நிகழ்விற்கு வருகை தந்தபோது இங்கு மாணவர்களின் உற்சாகத்தைப் பார்த்தேன். அப்போது இம்முறை தேசிய மட்டத் தடகளப் போட்டியில் கடந்த ஆண்டைவிட சிறந்த பெறுபேற்றைப் பெற முடியும் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டது. கடந்த ஆண்டு ஆறாமிடத்தைப் பிடித்துக் கொண்டோம். இந்த முறை குறைந்த நான்காவது இடம் கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. அந்தளவிற்கு வீரர்களின் திறன் மேம்பட்டிருக்கின்றது. மாணவர்களை மாகாண மட்டப் போட்டிகளுக்குத் தயார்ப்படுத்திய தடகள விளையாட்டு ஆசிரியர்களுக்கு எனது நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். தொடர்ந்து தேசிய மட்ட விளையாட்டுப் போட்டி வரை வீர,வீராங்கனைகளுக்குப் பயிற்சிகளை வழங்கி அவர்களை முன்நோக்கி கொண்டு செல்வதற்கு உதவவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (பா)

## இந்திய, ஆஸி. அணிகள் மோதும் ஒரு நாள் தொடர் ஒக்டோபரில்

(புதுடில்லி)

இந்திய, அவுஸ்ரேலிய அணிகள் மோதும் ஒருநாள் தொடருக்கான அட்டவணையை இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.) வெளியிட்டது.

இந்த ஆண்டின் இறுதியில் இந்தியா செல்லும் அவுஸ்ரேலிய அணி, ஒரு ருவென்ரி–20, 7 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் (ஓக்., 10– நவ., 2) பங்கேற்கிறது. இத்தொடருக்கான அட்டவணையை நேற்று முன்தினம் பி.சி.சி.ஐ., வெளியிட்டது.

இதன்படி புனேயில் புதிதாக கட்டப்பட்டுள்ள சுப்ரதோ ராய் சகாரா மைதானத்தில் முதன் முறையாக ஒருநாள் போட்டி (அக்.,13) நடைபெறவுள்ளது. இங்கு ஏற்கனவே பிரிமியர் கிரிக்கெட் போட்டிகள் நடந்துள்ளன. ருவென்ரி–20 போட்டி ராஜ்கோட்டில் வரும் அக்., 10இல் நடைபெறவுள்ளது.

அட்டவணை வருமாறு:

| திகதி | போட்டி | இடம் |
|---|---|---|
| அக்., 10 | ருவென்ரி–20 | ராஜ்கோட் |
| அக்., 13 | முதல் ஒருநாள் | புனே |
| அக்., 16 | இரண்டாவது ஒருநாள் | ஜெய்ப்பூர் |
| அக்., 19 | மூன்றாவது ஒருநாள் | மொகாலி |
| அக்., 23 | நான்காவது ஒருநாள் | ராஞ்சி |
| அக்., 26 | ஐந்தாவது ஒருநாள் | கட்டாக் |
| அக்., 30 | ஆறாவது ஒருநாள் | நாக்பூர் |
| நவ., 2 | ஏழாவது ஒருநாள் | பெங்களூர். |

ருவென்ரி–20 போட்டி இரவு 7.00 மணிக்கும்,

ஒருநாள் போட்டிகள் அனைத்தும் பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வட–கிழக்கு இணைந்த அணியிடம் வீழ்ந்தது ஆஸி. மெல்பேர்ன்



(கிளிநொச்சி)

அவுஸ்ரேலிய மெல்பேர்ன் கிரிக்கெட் அக்கடமி அணிக்கெதிரான போட்டியில் வடக்கு-கிழக்கு இணைந்த அணி த்ரில் வெற்றிபெற்றது.

அவுஸ்ரேலிய மெல்பேர்ன் கிரிக்கெட் அக்கடமி மற்றும் வடக்கு-கிழக்கு இணைந்த அணிகளின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ருவென்ரி-20 கிரிக்கெட் போட்டி கடந்த 1ஆம் திகதி கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய வடக்குகிழக்கு இணைந்த அணி, நவதீப், அஞ்சலம் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் வடக்கு-கிழக்கு இணைந்த அணி 20 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 175 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நவதீப் 57, அஞ்சலம் 26 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரெய்லர் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 176 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய அவுஸ்ரேலிய மெல்பேர்ன் கிரிக்கெட் அக்கடமி அணி 18.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 170 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் பீற்றர் 21, அபு 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கொலின் 17 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று, லோகதீஸ்வர் ஆறு ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இப்போட்டியின் ஆட்டநாயகனாகவும், சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் நவதீப், சிறந்த பந்து வீச்சாளராக லோகதீஸ்வர், சிறந்த களத்தடுப்பாளராக ரெய்லர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

கடந்த 30 வருடகால யுத்தத்திற்குப் பின்னர் கிளிநொச்சிக்கு விஜயம் செய்த முதல் அணி என்ற சிறப்பை அவுஸ்ரேலிய மெல்பேர்ன் கிரிக்கெட் அக்கடமி அணி பெற்றுக்கொண்டது. இப்போட்டியை குட்னஸ் பவுண்டேஷன் நிறுவனம் ஒழுங்குபடுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டி நிகழ்வில் இலங்கை கிரிக்கெட் சபையைச் சேர்ந்த அதிகாரிகள், மற்றும் வட மாகாணப் பயிற்றுநர், யாழ். மாவட்ட பயிற்றுநர், கிரிக்கெட் வீரர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எஸ்.பி.)

## 99 இலட்சம் ரூபா செலவில் பளையில் விளையாட்டு மைதானம்



(பச்சிலைப்பள்ளி)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள பளை நகரத்தில் 99 இலட்சம் ரூபா செல்வில் புதிதாக விளையாட்டு மைதானமொன்று அமைப்பதற்கான பணி கடந்த புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடன் அமைக்கப்படவுள்ள இவ்விளையாட்டு மைதானத்திற்கான அடிக்கல்லை நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் நாட்டிவைத்தார்.

இவ்விளையாட்டு மைதானமானது பாரிய முகப்பு வளைவை பிரதான வாயிலில் கொண்டதாக அமைக்கப்படவுள்ளது. அனைத்து வகையான விளையாட்டுக்களையும் இம்மைதானத்தில் மேற்கொள்ள முடியுமெனப் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார்.

மேலும், இம்மைதானத்தின் வேலைத்திட்டங்களை கண்காணிக்கவும் மேற்பார்வை செய்வதற்கும் விளையாட்டுக்கழக அங்கத்தவர்களை உள்ளடக்கியதாக குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

குடிநீர்க் கிணறு, குடிநீர் விநியோக வசதிகள், சுற்றுவேலி ஆகியவற்றை உள்ளடக்கியதாக மைதானத்தின் சமதரைத் தன்மையைப் பேணும் வகையில் இவ்விளையாட்டு மைதானம் அமைக்கப்படுமெனவும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உறுப்பினர் அ.அன்ரன் அன்பழகன் தெரிவித்தார்.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் டொமினிக் அன்ரன் தலைமையில் நடைபெற்ற இதற்கான நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உறுப்பினர் அ.அன்ரன் அன்பழகன், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## யாழ். மாவட்டம் சம்பியன்

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியில் யாழ். மாவட்ட அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் வட மாகாண மாவட்டங்களுக்கிடையில் மென்பந்து கிரிக்கெட் போட்டி கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.


இறுதிப்போட்டியில் யாழ்ப்பாண மாவட்ட அணியினை எதிர்த்து மன்னார் மாவட்ட அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். மாவட்ட அணி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. 15 ஓவர்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 144 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. இதில் விதுசன் 46 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். 145 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியென்ற நிலையில் களமிறங்கிய மன்னார் மாவட்ட அணி, 11 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 37 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எந்தவொரு வீரரம் இரண்டை இலக்கை அடையவில்லை. பந்துவீச்சில் அஜய், கோபிநாத் தலா 3 இலக்குகளை வீழ்த்தினர்.

# 13 வலுக்குறைக்கப்படுவதில் ரி.என்.ஏ இற்கு உள்ள பங்கு

தயான் ஜயதிலக கட்டுரையிலிருந்து.

எதிர்க்கட்சிகள், மாறுபட்ட கருத்துள்ள புத்திஜீவிகள் 13ஆம் திருத்தத்தின்மீது மேற்கொள்ளப்படும் நகர்வுகளின் பரிமாணத்தை நன்கு புரிந்துகொள்ள வேண்டும். மாகாணங்கள் இணைய முடியாதபடி ஒழுங்கு படுத்துதல், எனது



கருத்தின்படி குறைகாண முடியாத ஒன்றாகவே உள்ளது.

ஆபத்தானது என்னவென்றால் புதிய சட்ட விதிப்படி, மாகாணசபைகளுக்கு பரவலாக்கப்பட்டுள்ள அல்லது பகிரப்பட்டுள்ள அதிகாரம் மற்றும் நடவடிக்கைகளில் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு சட்டவாக்கத்துக்கும் எல்லா சபைகளும் இசைவு தெரிவிக்கவேண்டும் என்பதற்கு மாறாக பெரும்பான்மையான சபைகள் ஆதரவு தெரிவித்தால் போதுமானது என்றுள்ளது தான்.

இது பழைய பனிப் போர் காலத்தில் வந்த சொற்றொடர் போல, சூழ்ச்சியான தந்திரங்கள் மூலம் அதிகாரப்பரவலாக்கத்தை விலக்கி விடுவதாகும். இது குறிப்பிடுவது திட்டமிட்ட முறையில் ஜன நாயக அதிகாரத்தை கூறு போடுவதை - அதாவது ஒரே அடியில் வெட்டுவதற்கு மாறாக ஆயிரம் வெட்டுக்களை ஏற்படுத்தி அதைச் சாகடிப்பதை.

மிகவும் முக்கியமாக அது தனிப்பட்ட முறையில் தமிழர்களை மட்டும் பாதிக்காது, ஐ.தே.க, ஸ்ரீ.ல.சு.க, அல்லது ஜே.வி.பி ஆகிய எந்தவொரு ஜனநாயக எதிர்க்கட்சியும், எதிர்காலத்தில் எப்போதாவது ஒரு மாகாணசபை நிர்வாகத்துக்கு தெரிவு செய்யப்பட்டால் அதற்கு இந்த சட்டமூலம் பாதிப்பை ஏற்படுத்தவே செய்யும், அதேவேளை தற்சமயம் பெரும்பாலான மாகாண சபைகள் தற்போது ஆட்சியிலுள்ள அரசாங்கத்தின் நிர்வாகத்திலேயே உள்ளன.

உண்மையில் ஊடகங்களுக்கும் மற்றும் மாகாணசபைகளுக்கும் எதிரான இந்த நகர்வுகள் ஐ.தே.க மற்றும் ரி.என்.ஏ விட்ட தவறுகள் காரணமாகவே மேற்கொள்ளப் படுவதற்கு சாத்தியமாகியுள்ளன.

13ஆவது திருத்தத்தை பாதுகாக்கத் தவறியதில் ரி.என்.ஏக்கு உள்ள பங்கு குறைவானதல்ல. அதற்கு கட்டுப்படாமல் இருந்ததுடன், அதற்கு அப்பால் செல்லக் கூடிய வகையில் சந்திரிகா குமாரதுங்க கொண்டுவந்த முயற்சிகளுக்கு ஆதரவளிக்க மறுத்தது, மற்றும் பெரும்பாலும் அதைத்தாண்டிய சொல்லாட்சியின் பக்கம் நகர்ந்தது (அரசியல் புரட்சி பற்றிய குற்றச்சாட்டுகளுக்கு நம்பகத் தன்மை வழங்கியது) போன்றவை அது இழைத்துள்ள தவறுகளாகும்.

தமிழ் தேசியவாதம் முன்னால் உள்ள வேளையில் சாதாரணமாக அதிலிருந்து வெளியேற ரி.என்.ஏ உட்பட யாராலும் முடியாது. அது தொடர்ந்து எல்.ரீ.ரீ.ஈ மீது பந்தயம் வைக்கும்போது அது வீட்டுக்கு எதிராகவும் பந்தயம் வைத்து தோற்றுப்போனது. அதற்காக அது செலுத்தவேண்டிய விலைதான் தற்பொழுது நடைபெறும் அதிகாரப் பரவலாக்கத்தின் மீதான குறைப்பு.

ஒருவர் எழுச்சியை ஒரு விளையாட்டாக விளையாடக் கூடாது என மார்க்ஸ் மற்றும் ஏங்கல்ஸ் எச்சரித்துள்ளனர். உண்மையில் புலிகளும் அவர்களது பலமான ஆதரவு வலையமைப்பும் ஒரு விளையாட்டை நடத்தவில்லை.

75 விகிதமான மக்கள் தொகையை இழுக்கக்கூடிய பலமுள்ள ஒரு எதிரியுடன் போராடி வெற்றி பெறலாம் என ஒருபோதும் நம்பிக்கை கொள்ளலாகாது. அப்படிச் செய்யும் ஒருவர்மீது உங்கள் பந்தயம் முழுவதையும் பணயம் வைக்கவும்கூடாது. எப்படியோ தமிழ்த் தேசியம் அதனைச் செய்துவிட்டது. எப்போதும் அப்படியான ஒன்றின் கீழிருந்து வெளியேற வேண்டும் மற்றும் அப்படியான வெறிபிடித்த சாகசக்காரர்களுக்கும் மற்றும் உங்களுக்கும் இடையே ஒரு தூரத்தை கடைப்பிடிக்க வேண்டும். இதைத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்பன ஒரு முன்னணிக் கண்டனவடிவில் இப்போதும் செய்யவேண்டிய தேவையாக உள்ளது.

புலிகளின் பயங்கரவாதத்தின்போது அவர்களை கண்டிக்கத் தவறிய அவர்களின் அலட்சியத்தையும், அதுவும் இப்போதுகூட புலிகளின் பயங்கரவாதத்தை கண்டிக்கத் தவறும் அவர்களின் போக்கையும் நாட்டின் ஏனைய பகுதியினர் ஒதுக்கித் தள்ளி விடுவார்கள் என ரி.என்.ஏயினால் எதிர்பார்க்க முடியாது.

அல்லாமலும் போர் இப்போது முடிந்துவிட்டது என்பதன் அடிப்படையில் போருக்கு முன்பிருந்த நிலைக்கு வடக்கு திரும்பும் என அவர்களால் எதிர்பார்க்க முடியுமா, ஏனெனில் ஒரு யுத்தமானது ஒருவரின் இழப்பைத் தவிர, அநேகமாக வேறு எதனாலும் செய்யமுடியாத அளவிற்கு விடயங்களை முற்றாக மாற்றி அமைக்கும். ஒருபக்கம் தோல்வி அடைந்ததும், அதாவது 1987இல் (ஒப்பந்தம்), 1990 (பிரேமதாஸாவுடனான பேச்சுக்கள்), 1995 (சி.பி.கே) அல்லது 2005 இல் யுத்தம் செய்வது நிறுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் தமிழ் தேசியவாதிகள் அதற்கு ஆதரவு தெரிவித்தார்கள் அல்லது அந்தப் பக்கத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை.

தமிழ் தேசியவாதம் மற்றும் புலம்பெயர் சமூகம் என்பன கௌதமாலா மற்றும் ஆர்ஜன்ரீனா என்பனவற்றிலிருந்து பாடம் கற்றுக்கொள்ள வேண்டும், அங்கு றியொஸ் மொண்ட் மற்றும் ஜோர்ஜ் விடேலா என்பவர்கள் ஆயுள் பரியந்தம் சிறை வைக்கப்பட்டார்கள். நீதி மற்றும் பொறுப்புக்கூறல் என்பன உண்மையில் அணுகத்தக்கவையே, ஆனால் உள்நாட்டு நடவடிக்கைகள் மற்றும் இயக்கவியல் என்பனவற்றின் விளைவுகளை பொறுத்து மாத்திரமே அது நடைபெறலாம். அதற்கு பல தசாப்தங்கள் எடுக்கும்.

---

காட்டில் பலசாலியான ஒரு சிங்கம் இருந்தது. ஆனால், அது எப்போது பார்த்தாலும் கவலைப்பட்டுக்கொண்டே இருந்தது.

“எனக்கு இவ்வளவு பலம் இருந்தும், இரும்பு போன்ற நகங்களும் பற்களும் இருந்தும் என்ன உபயோகம்? கேவலம், இந்தக் காட்டுச் சேவல் கூவுகிற சத்தம் என்னை நடுங்கவைக்கிறது. இப்படிப் பயந்துகொண்டே வாழ்வது ஒரு வாழ்க்கையா? என்று தன்னைத்தானே நொந்து கொண்டபடி இருந்தது.

அதே சமயம், அங்கே ஒரு யானை வந்தது. அது மிகவும் கவலையுடன் தன் காதுகளை முன்னும் பின்னும் அடித்துக்கொண்டே நகர்ந்தது.


அதைப்பார்த்த சிங்கம், “ஏய்.....! உனக்கு என்ன கவலை? யாருமே உன்னை எதிர்த்து சண்டைக்கு வரமாட்டார்களே! உன் உடலைப் பார்த்தாலே, எல்லா மிருகங்களும் பயந்து ஓடுமே.....எதற்காக நீ கவலையோடு இருக்கிறாய்?” என்று ஆச்சரியத்துடன் கேட்டது.

அதற்கு யானை, “இதோ......என் காதுக்குப் பக்கத்தில் பறக்கும் குளவியைப் பார்த்தாயா? இது என் காதுக்குள் நுழைந்து கொட்டிவிட்டால், அவ்வளவுதான்.....என் உயிரே போய்விடும்! அதற்காகத்தான் இது காதுக்குள் போய்விடாதபடி, காதுகளை ஆட்டிக்கொண்டு கவலையோடு நடக்கிறேன்.....” என்றது.

அது கேட்டு சிங்கம் யோசித்தது. “இவ்வளவு பெரிய உடம்பை வைத்து இருக்கும் யானை கவலைப்படாது என்று நினைத்தால், அதுகூடக் கவலைப்படுகிறதே! அப்படியானால், பூமியில் இருக்கும் எல்லா உயிர்களுக்கும் ஏதாவது ஒரு கவலை இருக்கத்தான் செய்யும் போலிருக்கிறது!

கவலைப்படுவதால் வாழ்க்கை ஒன்றும் நமக்கேற்ற மாதிரி மாறப்போவதில்லை. அது மட்டுமல்லாமல் கவலைப்பட்டு, கவலைப்பட்டு நம் கண்ணெதிரே இருக்கும் சந்தோஷமான விஷயங்களைப் பார்த்து சந்தோஷமாகக்கூட வாழமுடியாமல் போய்விட்டதே!” என்று அது புரிந்து கொண்டது.

அன்றிலிருந்து அது கவலைப்படுவதை விட்டு விட்டு, சந்தோஷமாக வாழத் தொடங்கியது!







# Despicable me 2

1200 கோடி ரூபா செலவில் தயாரிக்கப்பட்டு கிட்டத்தட்ட 8000 கோடி ரூபா வசூல் வேட்டையாடிய “டிஸ்பிக்கபிள் மீ” அனிமேஷன் படத்தின் இரண்டாம் பாகம் திரைக்கு வந்திருக்கிறது. கடந்த 2010இல் வெளிவந்த “டிஸ்பிக்கபிள் மீ” முதல் பாகம் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் கவரவே, அப்போதே இரண்டாம் பாகத்திற்கான வேலையையும் தொடங்கிவிட்டார்கள் யுனிவர்சல் பிக்சர்ஸ் நிறுவனத்தினர்.

இப்படத்தின் முக்கிய பாத்திரங்கள் “க்ரு” மற்றும் மினியன் படை. சூப்பர் வில்லனான க்ரு தன் மினியன் படைகளை வைத்துக்கொண்டு வாஷிங்டன் நகரத்தை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பார். ஒரு நாள் அவரிடம் மூன்று அனாதைக் குழந்தைகள் வந்து சேர்கின்றன. “க்ரு”வை எப்படியும் வீழ்த்த வேண்டும் என துடித்துக் கொண்டிருக்கும் மெயின் வில்லனிடமிருந்து அந்த மூன்று குழந்தைகளையும் தன்னையும் எப்படிக் காத்துக் கொள்கிறார் என்பதே “டிஸ்பிக்கபிள் மீ” முதல் பாகத்தின் கதை.

முதல் பாகத்தில் தன் வில்லத்தனத்தைக் காட்டிய “க்ரு” இந்த இரண்டாம் பாகத்தில் மேலும் சில சுவாரஸ்யமான கிண்டல் கலாட்டாக்களையும் செய்கிறாராம். உலகமெங்கும் கடந்த பதன்கிழமை வெளியாகியது இப்படம்.

# ஜோன் மில்டன்



ஆங்கிலக் கவிதைகள் என்றவுடன் உடனே நினைவுக்கு வருபவர் ஜோன் மில்டனே! உலகின் தலைசிறந்த கவிஞர்களில் ஒருவராகப் போற்றப்படுபவர். உலகில் இவருடைய கவிதைகள் இல்லாத பொது நூலகமோ, கல்லூரி நூலகமோ இருக்கவே முடியாது.

இவரது கவிதைகளைப் படிக்கும்போது சில வேளைகளில் வானில் சஞ்சரிக்கலாம். சில நேரங்களில் கண்ணீர் வழிய வைக்கும். நம்மையே ஆன்ம பரிசோதனை செய்திட வைக்கும்.

கவிஞர் ஜோன் மில்டனின் மிகச்சிறந்த படைப்பாகக் கருதப்படுவது, "இழந்த சொர்க்கம்" (Paradise lost) என்னும் காவியமே! இதை எழுதிய கால கட்டத்தில் முற்றிலும் பார்வையை இழந்திருந்தார். அவர் வரிகளை சொல்லச் சொல்ல அவருடைய மகள்மார் எழுதியவை. பார்வையற்ற நிலையில் அவர் படைத்த அந்தப் படைப்பே அவருடைய சிறந்த படைப்பாகக் கருதப்பட்டு உலக அளவில் இன்றும் பாராட்டப்பட்டு வருகிறது.

1609 ஆம் ஆண்டு லண்டனில் பிறந்தவர். இளம்பருவம் முதல் நூல்கள் படிப்பதில் அளவற்ற ஆர்வம் கொண்டிருந்தார். தினமும் நள்ளிரவு வரை நூல்கள் படிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

தன்னுடைய 21 ஆம் வயது முதல் கவிதைகள் எழுத ஆரம்பித்தார். இவருடைய தந்தை இவரை ஒரு வழக்கறிஞராக ஆக்க வேண்டும் என்று விரும்பினார். அவருடைய விருப்பம் நிறைவேறியிருந்தால் தலைசிறந்த கவிஞர் கிடைக்காமல் போயிருக்கக் கூடும்.

அவரது புகழ் வளர்ந்து வந்த கால கட்டத்தில் தனக்குப் பார்வைக் கோளாறு ஏற்படுவதை உணர்ந்தார். அப்போது அவருக்கு வயது 32. இருப்பினும் அவர் கவிதைகள் எழுதுவதிலும், இங்கிலாந்து அரசியலில் ஈடுபடுவதிலும் ஆர்வம் காட்டி வந்தார்.

முடியாட்சியை அகற்றி குடியாட்சியைக் கொண்டு வர வேண்டும் என்று போராடியவர்களுடன் சேர்ந்து போராடியதோடு தனது எழுத்துக்கள் மூலம் அவர்களுக்கு ஊக்கமும் அளித்தார்.

1649 ஆம் ஆண்டு அப்போது ஆட்சியில் இருந்த முதலாம் சார்ள்ஸ் மன்னரின் தலை புரட்சியாளர்களால் வெட்டப்பட்டு, குடியாட்சி ஏற்பட்டது. குரோம் வெல் என்பவரின் தலைமையில் அமைக்கப்பட்ட அமைச்சரவையில் அயல்நாட்டு மொழிகள் சம்பந்தப்பட்ட துறையின் செயலாளராகப் பணியாற்றினார் ஜோன்மில்டன். இவர்களது குடியாட்சி முறையும் மில்டனுக்கு ஏமாற்றம் அளித்தது. மீண்டும் முடியாட்சி வந்தது. அதன்பின் அரசியலை விட்டு ஒதுங்கி வாழ ஆரம்பித்தார்.

1651 ஆம் ஆண்டில் அவருடைய இரண்டு கண்களிலும் முற்றிலும் பார்வை பறிபோனது. அந்தக் கால கட்டத்தில் ஜோன் மில்டன் எழுதியது தான் அவருடைய மிகச் சிறந்த காவியமான "இழந்த சொர்க்கம்".




- இது நிலத்தில் வளரும் சிறு செடி வகையைச் சேர்ந்தது.
- இதன் இலை, தண்டு, பூ, வேர், காய் அனைத்துமே மருத்துவ குணம் வாய்ந்தது.
- தூக்கமின்மை, நேரத்துக்கு சரியாக உணவு அருந்தாமை போன்ற காரணங்களால் உடல்நிலை பாதிக்கப்படுவது ஓரிதழ் தாமரையால் குணமாகிறது.
- இதன் இலை, தண்டு, வேர், பூ, காய் ஆகியவற்றை நிழலில் உலர்த்தி, காய வைத்து, தூளாக்கி, பாலில் கலந்து, இரு வேளையும் அருந்தி வந்தால் உடல் வலுப்பெறும்.
- காய்ச்சலால் அவதியுறுவோர் ஓரிதழ் தாமரை கஷாயம் அருந்தினால் குணம் பெறலாம்.
- இரைப்பை நோய்க்கு சிறந்த மருந்தாகும்.

**('மூலிகைகளின் பயன்பாடுகள்' நூலிலிருந்து)**

# மூளைக்குள் என்ன நடக்கிறது?

என்னதான் தூக்கி வைத்துக் கொண்டாடினாலும் சுயமாக சிந்திக்காத வரையிலும் ரோபோ என்பது உலோகத்தால் செய்யப்பட்டு ஆணிகளால் முறுக்கப்பட்ட இயந்திரம்தானே. அதே இயந்திரத்தை சுயமாக யோசிக்க வைத்துவிட்டால்? இப்படி யாரோ ஒரு புண்ணியவான் விரும்பியதன் விளைவாக ரோபோவிற்கு அறிவூட்டும் ஆராய்ச்சியில் இன்று ரோபோடிக் விஞ்ஞானிகள் படு மும்முரமாக ஈடுபட்டிருக்கிறார்கள்.

ரோபோவை அறிவாளியாக்கும் யோசனை இன்றைக்கு நேற்று உருவானதில்லை. கி.பி.1495 ஆம் ஆண்டிலேயே லியானார்டோ டா வின்சி, மனிதனைப் போலவே ஒரு இயந்திரத்தை உருவாக்கி விட வேண்டும் என விரும்பினாராம். கூகிளில் தேடிப்பாருங்கள் - அது பற்றிய ஏகப்பட்ட தகவல்கள் படங்களுடன் கிடைக்கிறது. அந்த காலகட்டத்திலிருந்தே சிந்திக்கக் கூடிய ரோபோ என்பது விஞ்ஞானிகளின் கனவாகவே இருந்து வந்திருக்கிறது.

ரோபோ சிந்திக்க வேண்டுமானால் அதற்கு ஏற்ற வகையில் செயற்கை அறிவை (Artificial Intelligence) உருவாக்கி ரோபோவுடன் இணைக்க வேண்டும். கிட்டத்தட்ட உலகில் உள்ள அத்தனை பொருட்களையும், உயிர்களையுமே செயற்கையாக உருவாக்கிவிட்ட நம் ஆட்கள் இதிலும் கால் வைத்துவிட்டார்கள். ஆனால் அதற்கு முன்பாக மனித மூளை எப்படி இயங்குகிறது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.


மனிதனின் மூளை கோடிக்கணக்கான நரம்பணுக்களால் (நியூரோன்) பின்னப்பட்டிருக்கிறது. இந்த ஒவ்வொரு நியூரோனும் ஒரு குட்டி கல்குலேட்டர் மாதிரித்தான். தனியொரு நியூரோனின் பணி என்று பார்த்தால் அது ஒரு துளி வேலைதான். ஆனால் மூளைக்குள் இருக்கும் பல கோடி நியூரோன்களின் சிறு சிறு வேலைகளை தொகுத்தால் அது பிரம்மாண்டமான வேலையாகிவிடுகிறது. நாம் பேசுவது, நடப்பதில் தொடங்கி விண்கலம் விடுவது வரைக்கும் அத்தனைக்கும் அடிப்படை இந்த குட்டி நியூரோன்களின் சின்னஞ்சிறு வேலைகள்தான்.

உதாரணமாக நம்மை யாராவது பெயர் சொல்லி அழைக்கும் போது அந்தச் சத்தம் காதுகளின் வழியாக மூளையை அடைகிறது. சத்தத்தின் அர்த்தத்தைக் கண்டறிய பல கோடி நியூரோன்கள் சுறுசுறுப்படைகின்றன. இந்த நியூரோன்கள் தமக்கு கிடைக்கப் பெற்ற சிறு சிறு உள்ளீடுகளை ப்ரொஸஸ் செய்து கேட்டது வெறும் ஓசையில்லை அது உங்களின் பெயர் என மைக்ரோ நொடிகளில் அறிவிக்கின்றன.

அந்தச் சமயத்திலேயே இன்னும் சில கோடி நியூரோன்கள் பெயரைச் சொல்லி அழைத்தவர் அன்பாக அழைத்தாரா, கோபமாக அழைத்தாரா, வெறுப்புடன் அழைத்தாரா என்பதையெல்லாம் ப்ரொசஸ் செய்து கொண்டிருக்க இன்னும் சில கோடி நியூரோன்கள் அழைத்தவருக்கு என்ன பதிலைச் சொல்ல வேண்டும் என்பதை முடிவு செய்கின்றன.

மனிதனின் மூளைக்குள் இருக்கும் இத்தகைய நரம்பணு இணைவை செயற்கையாக உருவாக்கினால் அதுதான் Artificial neural network. இங்கு செயற்கையான ஒவ்வொரு நியூரோனும் ஒரு "கணிதச் செயலாற்றி"யாக (A Mathematical Function) செயல்படுகின்றன. கணிதச் செயலாற்றி என்பதை எளிதாகச் சொல்ல வேண்டுமானால் "கூட்டல்" "பெருக்கல்"அல்லது "வகுத்தல்" என்ற ஒவ்வொன்றும் ஒரு கணிதச் செயல். ஒவ்வொரு செயற்கை நியூரோனும் தனக்கு அளிக்கப் படும் ஒரு மிகச் சிறிய உள்ளீட்டைக் கணித்து மிகச் சிறிய வெளியீடாக மாற்றுகிறது. இப்படி கோடிக்கணக்கான செயற்கை நியூரோன்கள் இணைந்து மனித மூளையை ஒத்த ஒரு செயற்கையான நியூரல் வலையமைப்பை அமைக்கின்றன.

செயற்கையாக வடிவமைக்கப்பட்ட நியூரல் வலையமைப்பிற்கு பல்வேறு விதமான உள்ளீடுகள் அளித்து பயிற்சியளிக்கப்படும். உதாரணமாக "கதவு மூடியிருக்கிறது"என்பது உள்ளீடு என்று எடுத்துக் கொண்டால் நியூரல் நெட்வேர்க் இந்த உள்ளீட்டைக் கணித்து "தாழ்ப்பாளை திறந்து உள்ளே போ" என ரோபோவுக்கு உத்தரவிடும்படியாக பயிற்றுவிக்கப்படும். "அறை வெப்பநிலை முப்பது பாகைக்கும் குறைவாக இருக்கிறது" என்பது உள்ளீடு என்றால் "ஏ.சியை நிறுத்து" என்பது வெளியீடாக இருக்கும். இப்படி பல்லாயிரக்கணக்கான உள்ளீடுகளால் செயற்கை நரம்பணு அமைவுக்கு பயிற்சியளிக்கப்படும். இது ஒரு குழந்தைக்கு பயிற்சியளிப்பதைப் போலத்தான். நெருப்பு சுடும் என்பது எந்தக் குழந்தையின் மூளையிலும் ப்ரோகிராம் செய்யப்பட்டிருப்பதில்லை. ஒரு முறை பெற்றுக் கொள்ளும் அனுபவத்தின் மூலமாக அது மெழுகுவர்த்தியானாலும், தீக்குச்சியானாலும் அல்லது ஊதுபத்தியானாலும் ஒரே விளைவு தான் என்பதை கற்றுக்கொள்கிறது. இதே போன்ற பயிற்சிக்குப் பிறகு செயற்கை நரம்பணு அமைவும் சுயமாகவே சிந்திக்கத் துவங்குகிறது.



சரி நிறுத்திக் கொள்ளலாம். இத்தகைய செயற்கை அறிவு பொருத்தப்பட்டிருக்கும் ரோபோக்களுக்கு இராணுவத்தில் தனி "மவுசு"தான். தமது எல்லைக்குள் அத்துமீறி நுழையும் விமானங்களை எதிர்கொள்வதற்கான ரோபோடிக் தடுப்பு பீரங்கிகள் பெருமளவில் புழக்கத்திற்கு வந்துவிட்டன. விமானங்களை கண்டறியும் அத்தனை வசதிகளும் இந்த ரோபோவிற்குள் பொருத்தப்பட்டிருக்கும். எல்லைக்குள் எதிரியின் விமானம் நுழைகிறது என்பதைக் கண்டுபிடித்தவுடன் இந்த ரோபோவுக்கு மூக்கு வியர்த்துவிடும். விமானம் வரும் திசையை நோக்கி தாமாகவே திரும்பி தயார் நிலையில் நின்றுவிடும். அதோடு அசந்திருக்கும் தமது நாட்டு வீரர்களை உசுப்பிவிட ஒரு சைரனையும் எழுப்பிவிடும். ஒரு இராணுவ வீரர் ஓடி வந்து "ட்ரிக்கர்"ஐ அழுத்த வேண்டியது மட்டும்தான் மிச்சம் வைக்கப்பட்ட வேலையாக இருக்கும். அவர் ட்ரிக்கரை அழுத்திய அடுத்த கணம் விமானம் சுக்கு நூறாகிவிடும். இத்தகைய ரோபோக்கள் செயற்கை அறிவால் கட்டுப்படுத்தப்படுகிறது என்பதை தனியாகச் சொல்ல வேண்டியதில்லை.

2007 ஆம் ஆண்டு தென்னாபிரிக்க இராணுவ வீரர்கள் இத்தகைய விமானத்தடுப்பு பயிற்சியை மேற்கொண்டிருந்தார்கள். பயிற்சியின் போது "ட்ரிக்"கர் அழுத்துவதையும் கூட Automatic ஆக மாற்றி வைத்திருந்தார்கள். அறிவியல் எப்பொழுதுமே மனிதனின் பேச்சுக்கு கட்டுப்பட்டு நடக்கும் என்று சொல்ல முடியாது. இந்தப் பயிற்சியின் போதும் கட்டுப்படவில்லை. பயிற்சி என்பதை முழுமையாக உணராத ரோபோ "ட்ரிக்கர்"ஐ அழுத்தி இராணுவ வீரர்களை சுட்டு வீழ்த்தியது. மிக முக்கியமான இராணுவ வீரர்கள் கருகி சாம்பலாக உதிர்ந்தார்கள். இதற்கு பிறகு உலகம் முழுவதும் இராணுவத்தில் பயன்படுத்தப்படும் ரோபோக்கள் அதிகபட்ச கவனத்துடன் கையாளப்படுகின்றன.

செயற்கை அறிவு பற்றிய ஆராய்ச்சியில் விஞ்ஞானிகள் கிட்டத்தட்ட பாதிக்கிணறு தாண்டிவிட்டார்கள். மீதிக்கிணறுக்காக திணறிக்கொண்டிருக்கிறார்கள். திணறலுக்கு காரணம் இல்லாமல் இல்லை. நம் ஆட்கள் இதயம், நுரையீரல் என ஒவ்வொரு உறுப்பையும் அக்குவேறு ஆணி வேறாக தெரிந்து வைத்திருக்கிறார்கள். ஆனால் மனித மூளையை மட்டும் புரிந்து கொள்ளவே முடிவதில்லை. புரிந்துகொண்டவர்களைக் கண்டிருக்கிறீர்களா?

**- வா.மணிகண்டன் -**

## மாற்றம் வேண்டும் இது மக்கள் முரசு

# பணம் கறக்கும் பாடசாலைக்கு பதிலடி கிடைக்காதா?

மாணவர் அனுமதிகளில் பணம் வசூலிக்கும் அதிபர்களிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வியமைச்சு பலதடவை கூறியும் கூட மாணவர் அனுமதிகளில் பணம் வசூலிக்கும் தன்மை குறையவே இல்லை என்பது ஒருபுறமிருக்க வசூலிக்கும் வடிவங்கள் மாற்றம் பெற்றுள்ளது என்பது தெளிவாகப் புலப்படுகின்றது. பெற்றோரின் அறிமுகங்கள் இல்லாத போது வசூலிக்கப்படும் பணத்தினால் முறைப்பாடுகள் அதிகரிக்கின்றன என்பதை இனங்கண்ட அதிபர்கள் மாணவரை அனுமதிக்கும் போது பணம் கோராது பெற்றோரைப் பாடசாலையோடு ஒன்றிணைத்த பின் பணம் கோரும் முறை தலைதூக்கி உள்ளது.

அண்மையில் குடாநாட்டில் உள்ள நகரப்புற பிரபல ஆரம்பப் பாடசாலையொன்றில் தற்போது கல்விகற்றுக் கொண்டிருக்கும் மாணவர்களின் பெற்றோருக்கு கல்வி அபிவிருத்தி தொடர்பான கூட்டமொன்றிற்கு அழைப்புக்கடிதம் அனுப்பப்பட்டது. கூட்டத்துக்கு வந்த பெற்றோரிடம் வகுப்பறையில் இலத்திரனியல் சாதனம் பொருத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்து ஒவ்வொருவரிடமும் தலா 15,000 ரூபா வீதம் கோரப்பட்டது.

இந்த அழைப்புக் கடிதத்திற்கு குறித்த அதிபரே கையொப்பமிட்டு அனுப்பியுள்ளார். குற்றத்தை பறைசாற்ற விரும்பும் நோக்கோடு இம்முரசு ஒலிக்கவில்லை. அவ்வாறான நோக்கம் இருப்பில் பெயர் சொல்லி ஆதாரப்படுத்தியிருப்போம். இதில் மாற்றம் வேண்டியே மக்கள் முரசு ஒலிக்கின்றது.

### அதிபர்களே சிந்தியுங்கள்.

பாடசாலை அபிவிருத்தியில் நாட்டம் கொண்ட அதிபர்களே சமூகப்பொறுபபை ஏன் மறந்து செயற்படுகின்றீர்கள்? .. நிர்வாக சட்ட திட்டங்களை ஏன் மீறுகின்றீர்கள்?.. உண்மைக்குப் புறம்பாக ஏன் செயற்படுகின்றீர்கள்?.. அப்படியோர் பாடசாலை அபிவிருத்தி தேவைதானா?

### நீங்கள் நல்லவர்களா?... கெட்டவர்களா?

அபிவிருத்தி நோக்கிச் சிந்திக்கும் போது உங்களை நல்லவர்கள் என கூறத் தோன்றுகின்றது. அதற்காக அத்தியின் வழி செய்ற்படும் போது கெட்டவர்கள் எனக் கூறத்தோன்றுகின்றது. இருப்பதைக் கொண்டு உழைப்பினால் முடிந்த அபிவிருத்தியை செய்யுங்கள். அளவிற்கு மேல் ஆசைப்படுவதனால் தான அவமானங்கள் வந்து சேருகினறன.

புகழாரம் சூட்டும் அதே சமூகம் உங்கள் சீரான சிந்தனைக்கும் உலை வைக்கலாம். நிர்வாக சட்டதிட்டங்களிற்கும் நிறுவ முன்னேற்றத்திற்கு மேற்ப ஊழியர்களின் விட்டுக்கொடுப்பிற்கூடாக செல்வதனே முகாமை. இருக்கின்ற வளத்தில் உச்ச பயனைப் பெறுவதுதானே அபிவிருத்தி ஏன் அவப்பெயர்களை சம்பாதிக்கின்றீர்கள்?... நிதி விடயத்தில் சீராக இருந்த நிர்வாகிகள் தான் சிறந்த சமூக அந்தஸ்தைப் பெறுகின்றனர். இது ஒரு புறமிருக்க பெற்றோர் பக்கத்திலும் சிந்திக்க வேண்டிய தேவை உள்ளது.

### பெற்றோர் குமுறல்கள் இலவசக் கல்வியின் அர்த்தமென்ன?

நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு போகும் வாழ்க்கைச் செலவில் பல இன்னல்களை எதிர்நோக்க வேண்டி உள்ளது. வருவாய்க்கு மீறிய செலவாணிகள் நடுத்தரவர்க்கத்துக்கான சம்பள அதிகரிப்பு இல்லாமை போன்ற பாரிய வாழ்க்கைச் சுமையை ஏற்படுத்துகின்றன. பிரபல பாடசாலைகளில் வசதிபடைத்த பிள்ளைகள் பெரும்பாலும் உள்ளார்கள் இவர்களின் பின்னணிகளை மேலோட்டமாக சிந்திக்கும் அதிபர்கள் பொதுப்படையான நிதிக்கோரல்களை முன்வைக்கின்றார்கள். கொடுக்க மறுத்தால் பிள்ளையை உளவியல் ரீதியாக பலவீனப்படுத்தும் செயற்பாடுகள் இடம் பெறுகின்றன. ஒருசிலர் அள்ளி வழங்குகின்றனர். அதற்காக எல்லோராலும் அது முடியுமென எதிர்பார்ப்பது தப்பு. துன்பங்களின் மத்தியில் குடும்பங்களின் கண்ணீரோடு பல இரவுகள் கழிவது இவர்களுக்குத் தெரியாதா? அரசு இலவசக் கல்வியை இலங்கையில் அறிமுகப்படுத்தியுள்ள தன் அர்த்தமென்ன?... அதிபர்களைத் தடுக்க கட்டுப்படுத்த அதிகாரிகளால் முடியாத? ஏன் அவர்களும் பின்வாங்குகின்றார்கள்? ஆதாரபூர்வமாக குறித்த இந்தப் பாடசாலையில் நடந்திருக்கின்றதே எந்த நடவடிக்கை அந்த அதிபரிற்கு எடுத்தார்கள்? இவ்வாறு குமுறுகின்றாள் ஒரு தாய்.

### சொல்லுங்கள்?.. இவளின் குமுறலிற்கு பதிலை?...

ஒரு பொது நிறுவனத்தில் உள்ள அதிகாரிகளே, அதிபர்களே ஆசிரியர்களே மக்களிற்கு சேவைசெய்யவே உங்கள் அதிகாரங்கள் பதவிகள் அதில் இருக்கும் வரை மக்கள் கேள்விக்குப் பதல் சொல்லியே ஆக வேண்டும் மேலும் இது தொடருமானால் மக்கள் முரசு ஆதார பூர்வமாக பெயர்விபரங்களை முன்வைத்து மக்களோடு ஒன்றிணைந்து நியாயம் கோரும்.

வெண்கட்டியன்





அதிக புள்ளிகளைப் பெற்ற திறமைசாலிகள் மூவருக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன. உங்களுக்கான பரிசில்கள் விபரம் பத்திரிகையில் வெளியாகும். மூன்று மாத இறுதியில் தினமுரசு காரியாலயத்தில் வைத்து வழங்கிக் கௌரவிக்கப்படும்.

**புதிர்ப்போட்டி 50 இற்குரிய விடைகள் அனுப்பவேண்டிய இறுதித் திகதி 20.07.2013**


01) இலங்கையிலே குறித்த ஓர் ஆண்டில் பிடுங்கப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கையில் 2/3 ஆனது தென்னை முக்கோணியிலிருந்தும் 1/6 ஆனது களுத்துறை மாவட்டத்திலிருந்தும் கிடைத்தனவெனின், அவ்வாண்டில் ஏனைய பிரதேசங்களில் பிடுங்கப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கை 18 மில்லியனாக இருக்கும்போது தென்னை முக்கோணியிலிருந்து கிடைத்த தேங்காய்களின் எண்ணிக்கை எத்தனை மில்லியன்?

1) 27 2) 36 3) 54 4) 72





02) A,B,C என்பன மூன்று காணித் துண்டுகள், B யின் பரப்பளவு 64 ஆகவும் C யின் பரப்பளவு 25 ஆகவும் இருப்பின் A யின் பரப்பளவு யாது?

1) 196 2) 169 3) 144 4) 121




03) ABCD ஒரு சதுரம், முக்கோணி BCE யின் சுற்றளவு 24 cm, சதுரம் ABCD யின் பரப்பளவு எத்தனை $cm^2$?

1) 25 2) 30 3) 36 4) 64




இச்சில்லின் எண்கள் குறித்த கோலம் ஒன்றிற்கு ஏற்ப இடப்பட்டுள்ளன. இதற்கு ஏற்ப, P, Q, R, S, T என்னும் ஆங்கில எழுத்துக்கள் உள்ள கூடுகளில் இடப்படவேண்டிய எண்களைக் கண்டு அவற்றை உரிய புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

1) P (................) 2) Q (.............)
3) R (................) 4) S (................)
5) T (................)

### புதிர்ப்போட்டி 48, 49 இல் சரியான விடை எழுதி பாராட்டுப்பெறுபவர்கள் விபரம்

பெயர் :- க.கோமஸ்ராஜ்
பாடசாலை:- யா/ நெடுந்தீவு மகா வித்தியாலயம்.

பெயர் :- அ.றொமிலா
பாடசாலை:- யா/ நெடுந்தீவு மகா வித்தியாலயம்.

பெயர் :- ர.சோபிஜா
பாடசாலை:- யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

பெயர் :- சி.தேவநேசன்
பாடசாலை:- யா/ புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்.

பெயர் :- க.விதுசன்
பாடசாலை:- யா/ உடுப்பிட்டி அ.மி. கல்லூரி.

பெயர் :- க.திவாகர்
பாடசாலை:- யா/ நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்.

பெயர் :- யோ.தனுசன்
பாடசாலை:- யா/ நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்.

பெயர் :- ம.யோதீஸ்வரன்
பாடசாலை:- யா/ நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்.

பெயர் :- கி.திவ்யன்
பாடசாலை:- யா/ அச்சுவேலி மகா வித்தியாலயம்.

பெயர் :- கி.பிரணவன்
பாடசாலை:- யா/ அச்சுவேலி மகா வித்தியாலயம்.

### புதிர்ப்போட்டி 49 இற்கான விடை எழுதி பரிசு பெறுவோர்

பெயர் :- வி.நிலேக்கா
பாடசாலை:-
யா/ கனகரத்தினம் மத்திய
மகா வித்தியாலயம்.



### புதிர்ப்போட்டி 49 இற்கான சரியான விடைகள்

1) 36
2) 65
3) ரூ.52.00
4) 5 நாட்கள்
5) 28 m
6) 5
7) 4
8) 291
9) ரூபா. 10000
10) 1990 - 1995

### விண்ணப்பதாரரின் விபரம்

மாணவர் முழுப் பெயர் :- ........................................
பாடசாலையின் பெயர் ........................................
தரம் :- :- ........................................
தொலைபேசி இல.:- ........................................
முகவரி :- ........................................
........................................



# யாழ். மாநகராட்சி மன்றத்தால் பாரியளவில் டெங்கு ஒழிப்பு செயற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகராட்சி மன்றப்பகுதியில் தேசிய நுளம்புக்கட்டுப்பாட்டு வாரச்செயற்பாடுகள் 01.07.2013 இல் இருந்து 07.07.2013 வரை பாரியளவில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக யாழ். மாநகரசபை பிரதம பொதுச்சுகாதாரப் பரிசோதகர் க.ஆ. ஜீவநாதன் அறிவித்துள்ளார்.

அதன்பிரகாரம் குறித்த ஏழு நாட்களிலும் முறையே பசார் I, பசார் II, நல்லூர், குருநகர் I, குருநகர்- II வண்ணார்பண்ணை, அரியாலை, நாவாந்துறை, கொழும்புத்துறை ஆகிய பொதுச் சுகா தாரப்பரிசோதகர்கள் பிரிவில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

இச்செயற்பாடுகளின் போது நுளம்புபெருகு வதற்கு ஏதுவாக காணப்படும் இடங்கள் உட னடியாக சம்பந்தப்பட்டவர்கள் மூலம் அழிப் பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நுளம்புக்குடம்பிகள் காணப்படும் இடங்கள் மற்றும் பிரச்சினைக்குரிய இடங்களை வைத்திருப்போர் மீது வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள் ளது. இவ்வழக் குத்தாக்கல் செய்வதற்கு உதவி யாக யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவிலிருந்து சுமார் பத்து பொலிஸ் உத்தியோகத்தர்கள் நாளாந் தம் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள்.

இச்செயற்பாட்டில் கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பாடசாலை சுகாதார அதிகாரிபணிமனைஉத்தியோகத்தர்கள், பட்டதாரி பயிலுநர்கள், பொருளாதார அபிவிருத்தி அமைச்சை சேர்ந்த உத்தியோகத்தர்கள், சமூக அமைப்பு பிரதிநிதிகள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள், கிராமமட்ட குழுக்கள், மாநகராட்சி மன்ற சுகாதாரப் பகுதி உத்தியோகத்தர்கள், இராணுவப் பிரிவைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள்,பொதுமக்கள் ஆகி யோர் இணைந்து மேற்கொண்டுவருகின்றனர்.

இதன் பிரகாரம் முதல்நாள் வேலைத்திட்டத் தில் பசார் I, பசார் II பொதுச்சுகாதாரப்பரிசோத கர் பிரிவுகளில் 1198 நிலையங்கள் பரீட்சிக்கப் பட்டு 93 நிலையங்களில் நுளம்பு பெருகக்கூடிய இடங்கள் அழிக்கப்பட்டும் 06 நிலையங்களுக்கு வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவற்றை விட07.அரச அலுவலகங்களும் 10 பாடசாலைகளும் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன.

இரண்டாவது நாள் நல்லூர் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவில் 06 பாடசாலைகள், 06 அர சாங்க நிறுவனங்கள், மேலும் 1021 நிலையங்கள், பொது இடங்கள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு அவற்றுள் 103 நிலையங்கள் நுளம்பு பெரும் இடங்களாக கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்ட துடன் 05 நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தாக் கல் செய்யப்பட்டுள்ளது.

மூன்றாவது நாள் குருநகர் I, குருநகர் II பொ.சு.ப. பிரிவில் 08 பாடசாலைகள், 04 அரச நிறுவனங்கள், பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன மேலும்1478 நிலையங்கள் பரீட்சிக்கப்பட்டன. 04ஆம் நாள் வண்ணார் பண்ணை பொ.சு. பரி சோதகர் பிரிவில் 02 அரசநிறுவனங்கள் மேலும் 984 நிலையங்கள் பரிசோதனைக்குட்படுத்தப் பட்டு 80 இடங்களில் நுளம்பு பெருகும் இடங்கள் கண்டு பிடிக்கப்பட்டு அவை அழிக்கப்பட்டதுடன் 2 நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

தொடர்ந்து இச் செயற்பாடுகள் அரியாலை நாவாந்துறை, கொழும்புத்துறை பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவுகளில் நடைபெற ஏற்பாடா கியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# வழித்தட பெயரில்லாத பேருந்து அலைந்து திரியும் பொதுமக்கள்

(அச்சுவேலி)

அச்சுவேலி வளலாய்ப்பகுதியில் மக்கள் மீள்குடியேற்றப்பட்டு நிரந்தர தற்காலிக வீடுகளும் இந்திய உதவியுடன் அமைத்துக்கொடுக்கப்பட்டுள் ளன.

இந்நிலையில் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து யாழ்சாலையால் வளலாய்க் கான பேருந்து சேவை ஒன்றும் இடம்பெற்று வரு கின்றது. இந்நிலையில் யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து சேவையை ஆரம்பித்து சேவை முடிவடையும். இடத்தின் பெயர்கள் ஊர்காட்டி விளம்பரக் குறியீடுகள் பேருந்து நிலை யத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் யாழ்ப் பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து வளலாய்ப்பகுதிக்கு சேவையில் ஈடுபடும் பேருந் தின் வழித்தட ஊர் காட்டிப் பெயர்கள் யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் காட்சிப் படுத் தப்படவில்லை. இதனால் நோயாளர்கள், வயோதி பர்கள் மற்றும் வெளிஇடங்களில் இருந்து வரு வோர் வளலாய் பகுதிக்கான பேருந்தைத் தேடி அலைந்து திரிவதாகத் தெரிவிக்கின்றனர்.

மேலும் யாழ். பேருந்து நிலையத்திலிருந்து வளலாய் பகுதிக்கு செல்லும் அரச பேருந்திலும் வளலாய் என்ற இடத்தின் பெயர் குறிப்பிடப்பட வில்லை. இதனால் அவ்விடத்திற்குச் செல்லும் பயணிகள். பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவ தாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே உரிய தரப்பினர் ஏனைய இடங்களுக் குச்செல்வதற்கான ஊர்காட்டி விளம்பரக் குறியீடு களைப் போன்று வளலாய்ப் பகுதிக்கு சேவை யில் ஈடுபடும் பேருந்து தரித்து நிற்கும் இடத்தில் யாழ்ப்பாணம் வளலாய் என ஊர்காட்டி விளம் பரக் குறியீட்டை யாழ். பேருந்து நிலையத்தில் மக்களின் பார்வைக்கு காட்சிப் படுத்துமாறும் மற்றும் பேருந்துகளிலும் இடத்தின் பெயர்ப் பலகையை காட்சிப்படுத்துமாறும் பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர். இவ்வாறு காட்சிப் படுத்தினால் தாம் சுலபமாக பயணத்தை மேற் கொள்ளலாம் எனப் பயணிகள் சுட்டிக்காட்டுகின்ற னர். (85)

# பழைய மாணவர் சங்கத்தின் 46ஆவது ஆண்டு நிறைவு விழா

(கைதடி)

கைதடி நவீல்ட் செவிப்புலனிழந்தோர் பாட சாலையின் பழைய மாணவர் சங்கத்தின் 46 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், வருடாந்த பொதுக் கூட்டமும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 08.30 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தலைவர் கெ.பிரகாஸ் தலைமையில் நடை பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஈ.பி.டி.பி யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாய கம், ஈ.பி.டி.பி யாழ். மாவட்ட அமைப்பாளர் க.கமலேந்திரன், கலாநிதி ஆறு திருமுருகன் உள்ளிட்ட முக்கிய பிரதிநிதிகள் கலந்து கொள்ள வுள்ளனர். நிகழ்வுகளின் இறுதியில் மாணவர் களுக்கான பரிசளிப்பு வைபவமும், கலைநிகழ்வு களும் இடம்பெறவுள்ளன. (03)




நல்லூர் சென்.பெனடிக்ற் வித்தியாலயத்தில் போசாக்கு உணவு வழங்கும் திட்டம்அண்மையில் நடைபெற்றபோது வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி திட்டத்தை ஆரம்பித்துவைத்து மாணவர்களுக்கு போசாக்குணவு வழங்கு வதினையும், கலந்துகொண்ட கல்வித்துறைசார்ந்த பிரதிநிதிகளையும் காணலாம். (படம்:– பா. பார்த்தீபன்)

# வாரம் ஒரு காரம்

## எப்படி நடக்கும்?.... எது சிறந்தது?...

மாகாணசபைத்தேர்தல் முனைப்புப் பெற்றுவரும் அதேவேளை கட்சிகள் தமது நிலைப்பாடு பற்றிய கருத்துக்களை தெரிவித்துவரு கின்றனர். இலங்கையில் தற்போது நடக்கும் அரசியல் தமிழ் மக்களின் வரலாற்றுத்திருப்பங்களாக இருக்கும் அதேவேளை கட்சிகளின் நிலைப்பாட்டால் தலைகீழாக மாறும் சந்தர்ப்பமும் உண்டு. தமிழரசுக் கட்சி 13 தொடர்பான நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் கலந்து கொள்ளப் போவதில்லை என தீர்க்கமாக அறிவித்துள்ள அதேவேளை ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி தனித்துப் போட்டியிடுவதா, அரசுடன் இணைந்து போட்டியிடுவதா? எனும் தீர்மானத்தில் வலுவாக கருத்துப்பரிமாற்றங் களை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளது. அத்துடன் முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடுவதாக அறிவித்துள்ளது.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினர். தீர்க்கமான நிதான்மான தீர்மா னங்களை எடுக்க வேண்டிய கட்டாய தேவைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். ஏனெனில் தமிழ் மக்களில் அநேகமானோர் தற்போது ஈழமக்கள் ஜனநாய கக்கட்சியின் யதார்த்த அரசியல் சிந்தனைகளை விளங்க ஆரம்பித்து விட்டனர். அத்துடன் தமிழரசுக் கட்சி உட்பட்ட தமிழ்க்கூட்டமைப் பினர் இதுவரை எதை சாதித்தார்கள்? என்கின்ற கேள்விகளெல்லாம் படித்த, அரசியலை சுயமாக சிந்திக்கின்ற தமிழ் மக்கள் மத்தியில் ஏற் பட்டுவிட்டன. ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிக்கு அங்கீகாரம் கொடுத்த தீவகப் பிரதேச சபைகளிற்கு ஒதுக்கப்பட்ட அரச நிதிகள் மற்றைய பிரதேச சபைகளிற்கு தமிழரசுக் கட்சியால் எடுத்துக் கொடுக்க முடிந் ததா? அரசை எதிர்க்கும் அரசியல் அணுகுமுறையால் தமிழ் மக்கள் ஆதரவைப் பெற்ற தமிழரசுக்கட்சி அத்தமிழ் மக்களிற்கு எதைப் பெற்றுக் கொடுத்தது.

தமிழ் மக்கள் முன்பொருகாலத்தில் மூர்க்கத்தனமான அரசியல் அழுத்தங்களால் பரந்துபட்ட அரசியல் பார்வையற்ற ரீதியில் இருந்தனர். யார் யார் இலங்கையரசினை வெறுக்கின்றனரோ அவர்கள் தமிழ்த்தேசி யத்தைக் காக்கின்றனர் என்கின்ற சிந்தனை மக்கள் மத்தியில் வேரூன்றி இருந்தது. ஆனால் கடந்து வந்த அரசியல் அனுபவங்கள் யார்யாரெல்லாம தமிழர்களின் அழிவிற்கு காரணமாக இருந்தனர் என்பதைத் தெளிவு படுத்தியுள்ளன. ஆகவே ஒன்றை தமிழ் மக்களும் சிங்கள மக்களும் தெளிவாக சிந்திக்கவேண்டும். இனவாத உணர்வுகள்தான் எங்கள் அரசி யல் பார்வைகளை இருளாக்கியுள்ளன. தமிழ் மக்களாகிய எமக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளை கேட்கும் முறையில் கேட்காது இனவாத உணர்வைத்தூண்டும் செயற்பாடுகள் மூலம் நாம் கேட்பது எமக்குத் தெரியாது. தென்னிலங்கை சிங்கள அரசியல்வாதிகள் பேசும் போது இனவாதமாகப் பார்க்கும் நாம், எமது பேச்சும் இனவாத அச்சுறுத் தலை இலங்கையரசுக்கும் சிங்கள மக்களுக்கும் ஏற்படுத்துவதாக இருக் கக்கூடாது. இலங்கையரசு பெரும்பான்மைப் பலத்துடன் இருந்தாலும் தமிழர்களுக்கு அதிகாரங்களைக் கொடுப்பதற்கு அதிகம் அச்சப்படு கின்றது.

ஏனெனில் நடந்த வன்முறைகளில் பாதிக்கப்பட்டவர்கள் சிங்கள மக்களும்தான். ஆகவே இந்த இடத்தில் மேலும் நம்பிக்கையீனங்களை ஏற் படுத்தும் செயற்பாடுகளில் நாம் இறங்குவது அரசியலில் ஆரோக்கிய மானதல்ல.

தற்போதுள்ள நிலையில் சுயமாக அரசியலை சிந்தித்தவர்கள் யதார்த்தப் பார்வையில் அரசியலைப் பார்ப்பவர்கள் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி யினை அரசுடன் இணைந்து கேட்குமாறு வலியுறுத்துகின்றனர். ஆனால் ஒருசிலர் தனித்துப் போட்டியிட்டால் பெரும்பான்மை வாக்குகளை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியே பெறமுடியும் எனக் கூறிவருகின்றனர். இது தொடர்பான முடிவுகளை கட்சி எடுப்பதே இறுதியாகும் என்பது ஒருபுறமிருக்க, தனித்து நின்று போட்டியிட்டால் தமிழரசுக்கட்சியைப் போல குருட்டுத்தனமான அரச எதிர்ப்பு மக்கள் ஆதரவைப் பெற முடி யுமே தவிர தமிழ்மக்களுக்கு எந்த அரசியல் இலாபங்களைப் பெற்றுக் கொடுக்க முடியும் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். வெறுமனே கோரிக்கைகளோடும், எதிர்க்கோசங்களோடும் அரசியல் நடத்துவது சமூகத்திற்கு ஆரோக்கியமானதல்ல. பெரும்பான்மை அரசியல்பலங்க ளில் இது எந்த முடிவுகளையும் தராது என்பது தந்தை செல்வா காலம் தொட்டு சம்பந்தரய்யாவின் காலம் வரையும் தமிழரசுக்கட்சியின் எடுத் துக் காட்டுகள் படம்பிடித்துக் காட்டுகின்றன. தனியொரு அரசியல் தலை வராக நின்று, அரசிடமிருந்து தமிழ் மக்களிற்கு அதிக அரசியல் இலாபங் களைப் பெற்றுக் கொடுத்த ஒரேயொரு தலைவராக டக்ளஸ் தேவானந் தாவை மட்டுமே இன்றைய சூழலில் விரல்சுட்டிக் காட்டமுடியும். இந்தக் காலகட்டத்துக்குரிய தமிழ்மக்களுக்குத் தேவையான அரசியல் துணிச்சலையும் சாணக்கியத்தையும் அவரிடம் மட்டுமே காணமுடி கிறது. இது அவருக்கு எதனால் சாத்தியப்பட்டது. தமிழ்மக்கள் சிந் திக்க வேண்டும். அரசினை எதிர்த்திருந்தால் முள்ளிவாய்க்காலில் அவ ரின் கதையும் முடிந்திருக்கும்.

தெளிவாக சிந்தித்தோமானால் தென்னிலங்கையிலுள்ள இனவாதப் போக்கிற்கு இடம் கொடுக்கின்ற செயற்பாட்டைத் தமிழரசுக்கட்சிதான் தற்போது செய்து வருகின்றது. ஆகவே, எப்படி நடக்க வேண்டும்? எது சிறந்தது? என்பதை மக்களே முடிவெடுக்க வேண்டும்.

# 13 குறித்து சிவ்சங்கர் மேனன் வாய்திறந்தால் போராட்டம்

## பொதுபலசேனா, தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் எச்சரிக்கை



(கொழும்பு)

எதிர்வரும் 7 ஆம் திகதி இலங்கை வரும் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் வாயைத் திறந்தால் கடும் போராட்டங்களை எதிர்கொள்ள நேரிடும் என்று கடும்போக்குச் சிங்கள அமைப்புகள் எச்சரித்துள்ளன.

பொறுமைக்கும் எல்லை உண்டு. அயல் நாடென அனைத்தையும் பொறுத்தோம். கடைசியில் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கி இலங்கையைத் துண்டாக்க சதி செய்யப்பட்டது.

தற்போது மீண்டும் அதே சதித திட்டத்தை சர்வதேச மற்றும் தமிழ் பிரிவினைவாதிகளுடன் இணைந்து இந்தியா முன்னெடுக்க நினைத்தால் நீண்ட நாள் உறவை துண்டிக்க நேரிடும் என்றும் அவ் அமைப்புகள் குறிப்பிட்டுள்ளன.

இலங்கை ஒரு சுயாதீன நாடு. உள்ளக தீர்மானங்களை நிறைவேற்றவும் தீர்மானிக்கவும் யாரிடமும் அனுமதியினை பெற்றுக் கொள்ளவேண்டிய தேவை இலங்கைக்கு கிடையாது. 1987 ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தம் போன்று அச்சுறுத்தி எதனையும் இலங்கையில் செய்துவிடலாம் என இந்தியா மீண்டும் நினைப்பது வெறும் பகற்கனவாகவே அமையும் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் அமைப்பாளர் வசந்த பண்டார தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து யார் வேண்டுமென்றாலும் இலங்கை வரலாம். ஆனால், உள்நாட்டு விவகாரங்களில் மூக்கை நுழைப்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. அதற்கு அனுமதி வழங்கப்போவதும் இல்லை. 13 ஆவது திருத்தச் சட்டத்தை வைத்துக் கொள்வதா? வேண்டாமா என்பது உள்நாட்டு விவகாரமாகும். மக்கள் விரும்பாவிட்டால் அதனை உடனடியாக நீக்கி விடுவோம். இதற்காக ஏனைய நாடுகளிடம் ஆலோசனை பெறும் தேவை இலங்கைக்கு கிடையாது என்றும் அவர் கூறினார்.

அதேபோன்று நாளைய தினம் ஞாயிற்றுக்கிழமை இலங்கை வரவுள்ள இந்திய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன் வருவது எதற்கென்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை. ஆனால், 13 ஆவது திருதத்ச் சட்டம் தொடர்பில் இலங்கைத் தலைவர்களுடன் பேசுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறு ஏதேனும் பேசி உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டால் கடும் போராட்டங்களை எதிர்கொள்ள நேரிடும் என எச்சரித்துள்ள பொது பலசேனாவின் தலைவர் கிரம விமல ஜோதி தேரர் ஏற்கனவே இந்தியத் தூதரகத்தை முற்றுகையிட்டு எதிர்ப்பு மகஜரினை கையளித்துள்ளோம். இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் உள்ளிட்டோர் அவதானமாக செயற்பட வேண்டும். இந்தியாவின் உள்ளக விவகாரங்களில் இலங்கை ஒருபோதும் தலையிட்டதில்லை. அதேபோன்று இந்தியாவும் நாகரிகமாக நடந்துகொள்ள வேண்டும் என்றார்.

# மூக்குத்துவாரத்திற்குள் நட்டைத் திணித்தார் சிறுமி



மூக்கு துவாரத்திற்குள் ஆணி நட்டைத் திணித்த சிறுமி மூச்சுத் திணறல் ஏற்பட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ். வட்டுக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த ராகுலன் டினுசா என்ற 4 வயதுச் சிறுமியே ஆணி நட்டினை மூக்குத் துவாரத்திற்குள் திணித்து மூச்சுத் திணறலுக்குள்ளாகியுள்ளார்.

இச்சம்பவம் கடந்த புதன் கிழமை இடம்பெற்றுள்ளது. சிறுமி விளையாடிக் கொண்டிருந்த நிலையில் நட்டை மூக்குத் துவாரத்தினுள் செலுத்தியுள்ளதாக பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

மூச்சுத்திணறலுக்கு உள்ளாகியதைக் கண்ட பெற்றோர் சிறுமியை உடனடியாக வைத்தியசாலையில் அனுமதித்ததாக அவரகள் மேலும் தெரிவித்தனர்.(25)


# பாரம்பரிய இசைக்கருவிகள் சென்திரேசாவிற்கு அன்பளிப்பு

கிளிநொச்சி சென் திரேசா பெண்கள் கல்லூரிக்கு ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான பாரம்பரிய இசைக்கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் இந்த இசைக்கருவிகளை கிளிநொச்சி மாவட்ட செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க. முருகவேல் ஆகியோருடன் இணைந்து வழங்கினார்.

இசை மற்றும் நடனக் கலைகளைப் பயிலவும் இன்னிய நடனத்தை மேற்கொள்ளவும் இந்த இசைக்கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. வன்னிப் பிரதேசத்தின் ஒரேயொரு பெண்கள் பாடசாலையாக செனதிரேசா உள்ளமை குறிப்பிடத்தக்கது.



# புலம்பெயர்ந்த படைப்பாளியால் புத்தகங்கள் அன்பளிப்பு



மாணவர்களின் வாசிப்புத்திறன் விருத்திக்கும் படைப்பு முயற்சிகளை ஊக்குவிக்கவும் கிளிநொச்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த 3 பாடசாலைகளுக்கு 35 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒருதொகுதி புத்தகங்கள் புலம்பெயர் தமிழ்ப்படைப்பாளியான இளங்கோ என்பவரால் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

ஈழத்துப் படைப்பாளிகள், எழுத்தாளர்கள், கல்வியாளர்களின் புத்தகங்கள் இந்தத் தொகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இயக்கச்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, கரியாலை நாகபடுவன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, ஊற்றுப்புலம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகிய பாடசாலைகளுக்கே இந்தப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் உதவிக் கல்விப் பணிப்பாளர் க.கணேசலிங்கம், ஆசிரிய ஆலோசக்ர் எம். விஜயநாதன், பளைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.ஆனந்தசிவம் உள்ளிட்ட அதிகாரிகளும் பெற்றோரும் பழைய மாணவர்களும் கலந்துகொண்டனர்.

# கண் சத்திர சிகிச்சைப் பிரிவு கண்டியில் பூட்டப்பட்டது

கண்டி பொது வைத்தியசாலையின் கண் சத்திர சிகிச்சைப் பிரிவுகள் அனைத்தையும் மூடி வைக்க வைத்தியசாலை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

சத்திரசிகிச்சைப் பிரிவில் விஷக்கிருமிகள் தொற்றியுள்ளதாகச் சந்தேகம் ஏற்பட்டதை அடுத்து இந்நடவடிக்கை எடுக்கப்பட்டதாக வைத்தியசாலைப் பிரதிப் பணிப்பாளர் சுசில் சிறிவர்த்தன தெரிவித்தார்.

தற்போது அந்த சத்திர சிகிச்சைப் பிரிவை சுத்தப்படுத்தும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாக அவர் குறிப்பிட்டார்.

# மட்டு மாவட்டத்திற்கு முன்மாதிரியான செங்கலடிப் பிரதேச செயலகம்

## பல்வேறு தரப்பினரும் பார்வையிட படையெடுப்பு



மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச செயலாளர் பிரிவிலும் தற்போது முன்மாதிரியாக கருதப்படும் செங்கலடி ஏறாவூர்பற்று பிரதேச செயலகத்தை பார்வையிடுவதற்காக பல அரச திணைக்களங்கள் வருகை தருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. செங்கலடி பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் கடுமையான பயிற்சிகள் கடின உழைப்புக் காரணமாக உருவாக்கப்பட்டுள்ள 5 எஸ் நிர்வாக ஒழுங்கமைப்புக்கள் மற்றும் மாதிரித்தோட்டம், அரும்பொருள காட்சியகம், நூலகம், மாவட்டத்தில் முதலிடம் பிடித்த கிராமசேவையாளர் அலுவலகம் உள்ளிட்ட பல விடயங்களைப் பார்வையிடுவதற்காகவே இவ்வாறு பல அரச தனியார் திணைக்களங்கள் வருகை தருவதாகத் தெரியவந்துள்ளது. அண்மையில் மேறபடி பிரதேச செயலகத்தை பார்வையிடுவதற்காக மாவட்ட தபால் திணைக்கள உத்தியோகத்தர்கள் பாடசாலை மாணவர்கள், திருகோணமலை வெருகல் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் வருகைதந்து சென்றுள்ளனர்.

அரசாங்க உத்தியோகத்தர்களைக் கண்டு பொது மக்கள் பயப்படும் வகையில் நிர்வாகம் நடத்தும் பல திணைக்களங்கள் இருக்கும் போது பொதுமகளைக் கண்டு பயந்து சேவைசெய்யும் செயலகமாகச் செங்கலடி பிரதேச செயலகத்தின் நிர்வாக கட்டமைப்புக்கள் அமைந்துள்ளதாகவும் குறிப்பாக பொதுமக்களுக்கான துரித சேவையினை வழங்குவதற்கான பல செயற்றிட்டங்கள் இங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக இப் பிரதேச செயலகத்தைப் பார்வையிட்ட உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு முன்மாதிரியாக உள்ள மேற்படி செங்கலடி பிரதேச செயலகத்தை பார்வையிடுவதற்காக நாளாந்தம் பல உத்தியோகத்தர்கள் வருகை தருகின்றனர்.

# உரமானிய சர்ச்சை குறித்து அறிக்கை சமர்ப்பிக்க பணிப்பு

(கொழும்பு)

உரமானியம் வழங்குவது தொடர்பில் எழுந்துள்ள பிரசசினை தொடர்பாக அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் முழுமையான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விவசாய அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்தனவுக்கு பணிததுள்ளார்.

நாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள பசளை நிவாரண பிரச்சினை தொடர்பாக நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்பட்டது. விவசாயிகளுக்கு உரிய முறையில் பசளை வழங்குவதில் சில பிரச்சினைகள் காணப்படுவதாக விவசாய அமைச்சர் குறிப்பிட்டார். அது தொடர்பில் முழுமையான அறிக்கை அடுத்த வியாழக்கிழமை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு அது தொடர்பில் தீர்வு காணப்பட உள்ளது..

7. குறிப்பிட்ட பயணம் ஒன்று செல்வதற்காக முற்பகல் 7.30 இற்கு வீட்டிலிருந்து புறப்பட்ட அப்பா, பி.ப 2.45 இற்கு வீடு வந்து சேர்ந்தார்.

1. அப்பா பயணத்திற்காகச் செலவு செய்த காலம் எவ்வளவு? ..............................

2. அப்பா வீடு வந்த நேரத்தை டிஜிற்றல் கடிகார நேரமாகத் தருக? ......................

8. பாடசாலைக்கு கொண்டுவரப்பட்ட அப்பியாசக் கொப்பிகள் 329 ஆகும். இவை ஒரு பிள்ளைக்கு 3 வீதம் பங்கிடப்பட்டன.

1. கொப்பிகளை ஒரு பிள்ளைக்கு 3 வீதம் பங்கிடப்பட்ட பின் எஞ்சிய கொப்பிகள் எத்தனை? ....................

9. வயர்துண்டு ஒன்றின் நீளம் 8m 50cm ஆகும். அதில் 2m 75cm துண்டு வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சிய வயர்த்துண்டின் நீளம் யாது?

..............................

10. ஒரு பழ வியாபாரி தான் வாங்கிய மாம்பழங்களில் மாம்பழம் ஒன்றை 3 ரூபா இலாபம் வைத்து 10 ரூபாவிற்கு விற்றான் எனின் அவன் வாங்கிய மாம்பழங்கள் 125 எனின் அவனுக்கு செலவான பணத்தொகை யாது?

..............................

11. சிவா புள்ளி A யில் இருந்து பயணத்தை தொடங்கி வடக்கு நோக்கி 50m தூரமும் பின் கிழக்கு நோக்கி 40m தூரமும் சென்று மீண்டும் தெற்கு நோக்கி 50m தூரம் பயணித்து B புள்ளியை அடைந்தான். எனின் A புள்ளிக்கும் B புள்ளிக்குமிடையிலான தூரம் எவ்வளவு?

..............................

12.

| | |
|---|---|
| 8 | 6 |
| 7 | 1 |

இவ்இலக்கங்களை கொண்டு ஆக்கக்கூடிய மிகப்பெரிய நான்கிலக்க எண்ணுக்கும் மிகச்சிறிய நான்கிலக்க எண்ணுக்குமிடையிலான வித்தியாசம் எவ்வளவு? ..........................

13. 320, 150 , 100.5 , 10.6 , 5.0 இவ் எண்களை ஏறுவரிசைப்படுத்தி எழுதுக. ..........................

14. 24 எனும் எண்ணை உரோம எண்குறிகளில் எழுதிக்காட்டுக. .......................... (30 புள்ளிகள்)

(13) காட்டில் உள்ள தாவரங்கள் நாமாவோம். நன்மை செய்யவே பிறந்துள்ளோம். என்ற தலைப்பில் ஐந்து வாக்கியங்களை எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களை கொண்டிருக்க வேண்டும். இலக்கணரீதியான தொடர்பு சரியாக இருக்க வேண்டும்.

------------------------------------------------------------
------------------------------------------------------------
------------------------------------------------------------
------------------------------------------------------------
------------------------------------------------------------
------------------------------------------------------------



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

# கல்வி முரசு



1.30 மணி

**(01) பின்வரும் பாடலை தெளிவாக வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

(1) எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்.

(2) பன்னிய பாவம் எல்லாம்
பரிதி முன் பனி போல
நன்னியே நின் முன் இங்கு
நசித்திடல் வேண்டும் அண்ணாய்

1. முதலாம் பாடலில் இடம் பெற்றுள்ள பெயரடைமொழியைக் குறிப்பிடுக? ..............................
2. பாவம் எனும் சொல்லின் எதிர்கருத்துச் சொல்லை தருக? ..............................
3. நல்லறிவு எனும் சொல்லை பிரித்தெழுதுக? ..............................
4. 'செய்த பாவங்களை எவ்வாறு நீக்கிக் கொள்ள வேண்டும்'? என புலவர் கூறுகிறார்? ..............................
5. எங்களுடைய சிந்தனை யாவும் எவ்வாறு இருக்கவேண்டும்? ..............................
6. திண்ணியநெஞ்சம் என்பதனால் விளங்கிக் கொள்வது யாது? .............................. (07 புள்ளிகள்)
7. பரிதி என்றால் என்ன? ..............................

**(02) பின்வரும் பழமொழிகளின் பொருளை குறிப்பிடுக.**

1. இரக்கப்போனாலும் சிறக்கப்போ ..............................
2. ஆனைக்கும் அடிசறுக்கும் ..............................

**(03) பின்வரும் தொடர்களுக்கு பொருத்தமான தனிச்சொல்லை தருக.** (04 புள்ளிகள்)

1. அரச தொழில் துறையிலிருந்து இளைப்பாறிய பின் அரசால் வழங்கப்படும் ஊதியம். ..............................
2. பகையரசருக்கு கொடுக்கப்படும் திறைப்பொருள் .............................. (02 புள்ளிகள்)

**(04) பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியமாக்குக.**

1. எப்போதும் / உரைக்க / உண்மை / வேண்டும் / நாம்.

..............................

2. அமைதியாக / ஓடிக் / கங்கை / கொண்டிருந்தது / வளவே

.............................. (04 புள்ளிகள்)

**(05) பின்வரும் வாக்கியத்தை வினாவாக்கியமாக மாற்றி எழுதுக.**

1. மகாத்மா காந்தியின் சரிதம் சத்தியசோதனையாகும் ..............................

1. come forward .............................................. 2. don't shout please ..............................................

**(7) கருத்தினை ஆங்கிலத்தில் தருக.**

1. நல்வாழ்த்துக்கள் .............................................. 2. இது என்ன? ..............................................

**(8) சிங்களத் தொடருக்கான கருத்தினை தமிழில் தருக.**

1. அய்யா கடேட்ட கியா .................................. 2. ஜயக(G)ன்ன ..............................................

**(9) சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1. சூப் தயாரிக்க பயன்படுத்தக்கூடிய மரக்கறியானது?
   1. கரட் - ஈரப்பலா 2. போஞ்சி - வெண்டி
   3. முருங்கை - மரவள்ளி 4. கரட் - பீற்றூட்

2. இலங்கைக்கு கிழக்குதிசையில் காணப்படும் நாடு.
   1. தாய்லாந்து 2. இந்தியா 3. இத்தாலி 4. ஆபிரிக்கா


3. 
   இக்காலுக்குரிய பறவை
   1. மீன்கொத்தி 2. மரங்கொத்தி
   3. நாரை 4. காகம்

4. விற்றமின் D குறைபாட்டு நோய்
   1. மாலைக்கண் 2. என்புருக்கி 3. மரஸ்மஸ் 4. பெரிபெரி

5. தென்மாகாணத்தின் பிரதான நகரம்.
   1. களுத்துறை 2. அம்பாந்தோட்டை 3. காலி 4. மாத்தறை

6. விற்றமின் A நிறைந்துள்ள உணவுவகை
   1. பூசணி - கத்தரிக்காய் 2. மீன் - முட்டை
   3. மஞ்சள்பூசணி - பப்பாசி 4. வாழைக்காய் - கரட்

7. சாய்தளத்தினூடாக பொருள் ஒன்றை இலகுவாக காவிச்செல்லும் முறை.




8. கலாவாவியை கட்டுவித்த அரசன் யார்?
   1. பண்டுகாபயன் 2. வசபன் 3. தாதுசேனன் 4. வலகம்பா

9. இலங்கைக்கு உரித்தான தாவரமானது
   1. குங்குலிய மரம் 2. அரச மரம் 3. ஆலமரம் 4. மூங்கில்

10. புதன் கோளுக்கு அண்மையில் உள்ள கோள் எது?
   1. வியாழன் 2. புவி 3. சனி 4. வெள்ளி



12. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்த ஆண்டு.
   1. 1796 2. 1815 3. 1505 4. 1658


13. பின்வரும் இடங்களில் தொல்பொருள் பிரசித்தி பெற்ற இடம்
   1. எம்பிலிப்பிடிய 2. சீகிரியா 3. பானகம 4. கொத்மல

14. பின்வருவனவற்றுள் கஞ்சக்கருவி எது?
   1. தம்பட்டம் 2. கைத்தாளம் 3. வயலின் 4. வீணை

15. வேகமாக ஓடக்கூடிய மானினம்.
   1. கஸ்தூரிமான் 2. புள்ளிமான் 3. சருகுமான் 4. இம்பாலாமான்

**(10) பின்வரும் குறியீடுகளுக்கான கருத்தினை புள்ளிக்கோட்டில் எழுதுக.** (15 புள்ளிகள்)

1) 2) 3) 4)




.............................. .............................. .............................. ..............................

**(11) பின்வரும் எழுத்துக்கள் குறிப்பிடும் நதிகளின் பெயர்களை குறிப்பிடுக.** (8 புள்ளிகள்)




A .............................................. N ..............................................

F .............................................. G ..............................................

K .............................................. H ..............................................

(06 புள்ளிகள்)

**(12) கணிதவினாக்களுக்கு விடை தருக.**

1. A, B, C, D, E ஆகிய ஐந்து கழகங்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட போட்டி ஒன்றில் பங்குபற்றியோரின் எண்ணிக்கைகளைக் கீழே உள்ள அட்டவணை காட்டுகிறது.

| கழகங்கள் | பங்குபற்றியோர் | |
|---|---|---|
| | ஆண் | பெண் |
| A | 300 | 400 |
| B | 225 | 150 |
| C | 150 | 300 |
| D | 225 | 275 |
| E | 100 | 260 |

i. கழகம் C யிலிருந்து போட்டியில் கலந்து கொண்டோரின் மொத்த எண்ணிக்கை யாது? ..............................

ii. கழகம் A இலிருந்து கலந்து கொண்ட ஆண்களின் எண்ணிக்கைக்கும் பெண்களின் எண்ணிக்கைக்குமிடையிலான வித்தியாசம் யாது? ..............................

iii. கழகம் D யிலிருந்து கலந்து கொண்டோருக்காக 10 பஸ்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. ஒவ்வொரு பஸ்ஸிலும் சம எண்ணிக்கையானோர் பயணம் செய்தனர் எனின், ஒரு பஸ்ஸில் பயணம் செய்தோரின் எண்ணிக்கை யாது? ..............................

iv. கழகம் E யிலிருந்து பங்குபற்றிய ஆண்களுக்கு மாலை நேரத் தேநீர் ஒன்றின் போது 8 பிஸ்கட்டுக்கள் வீதம் கொடுக்கப்பட்டது. கொடுக்கப்பட்ட பிஸ்கட்டுக்களின் எண்ணிக்கை யாது? ..............................

v. ஐந்து கழகங்களிலிருந்தும் கலந்து கொண்ட ஆண்களின் மொத்த எண்ணிக்கை யாது? ..............................

# மக்களின் தேவைகளைக் கண்டறிய அம்பாறைக்கு மாதமொரு பயணம்

## அமைச்சர் டக்ளஸ் உறுதியளிப்பு



(கல்முனை நிருபர்)

அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் தேவைகள் மற்றும் பிரச்சினைகள் குறித்து அறிந்துகொள்ளவும், அவற்றுக்கான தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்கவுமென மாதத்தில் குறைந்தது ஒரு தடவையாவது இங்கு வருகைதரத் தீர்மானித்துள்ளேன். இவ்வாறு அமைச்சரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான கே.என்.டக்ளஸ் தேவானந்தா உறுதியளிததுள்ளார்.

கடந்த முப்பது வருடங்களின் பின்னர் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த காரைதீவு கிராமத்திற்கு வருகைதந்த அவர், காரைதீவு மாவடி ஸ்ரீகந்தசுவாமி ஆலயத்தில் திரண்ட மக்கள் மத்தியில் உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூசையின் பின்னர் அங்கு திரண்டிருந்த மக்கள் மத்தியில் அவர் மேலும் உரையாற்றும்போது,

இன்று நான் காரைதீவு கிராமத்திற்கு வருகைதந்தபோது எம் மக்கள் காட்டிய அன்பு, நம்பிக்கை, மரியாதைக்கு நான் நிச்சயம் கடமைப்பட்டுள்ளேன். அன்று ஈழமக்கள் ஜனநாயக்கட்சியின் அம பாறை மாவட்ட அலுவலகம் காரைதீவில் இயங்கியபோது நாம் பல்வேறு சேவைகளை மக்களுக்கு ஆற்றிவந்தோம்.

நாம் வாய்ப்புக்கிடைத்த போதெல்லாம் அரசியல் அதிகாரங்களை வடகிழக்கு மக்களுக்காகவே பயன்படுத்தியுள்ளோம்.

அதேபோல் ஒரு பகுதி அரச நிதி மூலமும், பெரும் பகுதி எமது கட்சி நிதி மூலமும் நாம் மக்களுக்கான சேவையைத் தொடர்ந்தோம். எனினும் தேர்தல்கள் வரும்போது மககள் உணர்ச்சியூட்டப்பட்டு, நரம்புகள் முறுக்கேற்றப்பட்டு, இரத்தங்கள் சூடேற்றப்பட்டு, வித்தியாசமான சூழலில் மக்களை வாக்களிக்கச் செய்தனர். இந்த நிலைமைகளாலும், நிதி நிலமை மற்றும் ஏனைய நிலைமைகளால் காரை தீவில் இயங்கிய எமது கட்சியின் மாவட்ட அலுவலகத்தை மூட வேண்டிய துரதிஷ்டமான நிலைமையேற்பட்டது.


ஆனாலும், எச்சந்தர்ப்பத்திலும் நாம் மக்களை விட்டு ஓடவில்லை. மக்களுடனிருந்தே எம் சேவைகளைத் தொடர்ந்து வருகின்றோம். இந்த நிலையில் காரைதீவு பிரதேச மக்கள் உட்பட, அம்பாறை, மாவட்ட தமிழ் மக்களின் இன்றைய அரசியல் நிர்க்கதி நிலைமை தொடர்பாக எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

எனவே உங்கள் பிரதிநிதியாக அரசியலில் செயற்படுவேன் என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் உறுதிபடக் கூறுகின்றேன். இதற்காக அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் பிரச்சினைகள், தேவைகளைக் கேட்டறியவும், அவற்றுக்குத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்கவும் குறைந்தது மாதம் ஒருதடவையாவது இங்கு வருவதற்கு நான் தீர்மானத்துள்ளேன்.

இங்கு அலுவலகம் இல்லாவிட்டாலும், ஆலயங்கள், பொதுஇடங்களில் நான் மக்களைச் சந்திப்பேன். முன்கூட்டியே அறிவித்துவிட்டு நான் வந்தால் இத்தகைய மக்கள் சந்திப்புக்களை நடத்தலாம். எனது சேவை அவசியமென்பதை எம் மக்கள் என்றும் உணர்ந்துள்ளனர்.

அரசியலில் வேறுபாடுகளுக்கப்பால் நான் உதவவேண்டுமென்ற கோரிக்கை ஒன்றையும் தவிசாளர் செல்லையா இராசையா முன்வைத்தார். நிச்சயம் எம் ம்க்களுக்கு என்னாலான சகல உதவிகள், சேவைகளை வழங்குவேன். நாம் மக்களோடு இருந்துகொண்டே மக்கள் பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றோம் எனக் கூறினார்.

# ஆசிரிய நியமனம் பெற்றவர்களுக்கு தொழில் வழிகாட்டல் பயிற்சி நிறைவு



(வவுனியா)

வவுனியா, முல்லைத்தீவில் நடைபெற்று வந்த ஆசிரியர் நியமனம் பெற்றவர்களுக்கான தொழில் வழிகாட்டல் பயிற்சி நெறியின் நிறைவுநாள் நிகழ்வுகள் நேற்று முன்தினம் வவுனியா பூந்தோட்டம் தேசிய கல்வியியற் கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்றது.

அண்மையில் ஆசிரிய நியமனம் பெற்ற பட்டதாரிகள், ஆசிரிய உதவியாளர் நியமனம் பெற்றவர்கள் உட்பட ஒப்பந்த அடிப்படையிலான ஆசிரியர்களுக்கு வவுனியா மற்றும் முல்லைத்தீவில் கடந்த ஒரு வார காலமாக பயிற்சி நெறிகள் இடம்பெற்று வந்த நிலையிலேயே நேற்று முன்தினம் நிறைவு நாள் நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன.

இந்நிகழ்வில் வட மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி, வட மாகாண ஆளுநரின வவுனியா ஆணையாளர் முகைதீன், வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.அன்ரன் சோமராஜா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமதி பால பிரேமரத்தின, வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்

# தேசிய நுளம்பு ஒழிப்புவாரம் வவுனியாவில் சிரமதானம்



தேசிய நுளம்பு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு வவுனியா வடக்கு பிரதேச செயலக சமுர்த்தி அலுவலகத்தினால் சிரமதானப் பணிகள் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டன. புளியங்குளம் தெற்கு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரும் பொதுமக்களும் இணைந்து புளியங்குளம் தனிநாயகம் அடிகளார் வித்தியாலயம் மற்றும் பழையவாடி கிராமங்களில் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர். வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் க.பரந்தாமனின் ஆலோசனைக்கு அமைய நெடுங்கேணி சமுர்த்தி தலைமையக முகாமையாளர் கே.ஜீவலதா தலைமையில் இந்த சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது


## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்
## கேள்வி அறிவித்தல்

தவிசாளர் பெறுகைக்குழு மாவட்ட செயலகம் சார்பாக அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலரால் கீழ் குறிப்பிடப்படும் வேலைகளுக்கான தகைமையுடையோரிடமிருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.

1. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும்
2. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
3. ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் நிர்வாகக் கிளை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம். என்னும் முகவரியில் 05.07.2013 தொடக்கம் காலை 9 மணியிலிருந்து மாலை 3.00 வரை விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம் என்பதுடன் உதவி மாவட்ட செயலாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம். (தொலைபேசி இல. 021222 2771) அவர்களிடம் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
4. விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை நிர்வாகக் கிளை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம். என்னும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 05.07.2013 முதல் 24.07.2013 வரை காலை 9 மணியிலிருந்து மாலை 3 மணிவரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான 1000 ரூபா கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

05. மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தவிசாளர் பெறுகைக்குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு 25.07.2013 திகதியன்று பி.ப 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் நிர்வாகக் கிளை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம். அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடுதல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலையின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தை தபாலுறையில் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேல் குறிப்பிட்ட முகவரியில் நேரடியாக வருகைதர விரும்பும் விலைக் கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகளின் முன்னிலையில் 25.07.2013 திகதி பிற்பகல் 3 மணிக்கு திறக்கப்படும்.

6. கேள்விகளை ஏற்றுக்கெள்வதும், நிராகரிப்பதும் பெறுகைச் சபையின் இறுதித்தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

7 கீழ் அட்டவணையில் குறிப்பிட்ட விலைக் கூறல் பிணையானது கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியிலிருந்து 90 நாட்களுக்குச் செல்லுபடியாகும். விதத்திலும், கேள்விப் பிணைப் பெறுப்பு இலக்கமிடப்பட்டும் இருத்தல் வேண்டும்.

| கேள்வி இல | விலை விபரம் | மதிப்பீட்டுத்தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் (மாதம்) | தேவையானதரம் | கேள்வி பிணைத் தொகை | மீளளிக்கப்படாத தொகை(ரூ) |
|---|---|---|---|---|---|---|
| JK/ADM/03/CONS.WORK/2013(1) | யாழ்ப்பாண பிரதேச செயலக நிர்மாண வேலை - பகுதி III | 10.98 | 5 மாதம் | C5/C6 | 110,000.00 | 1000.00 |
| JK/ADM/03/CONS.WORK/2013(11) | சண்டிலிப்பாய் பிரதேச செயலக நிர்மாண வேலை - பகுதி VII | 02.03 | 5 மாதம் | C5/C6 | 23,300.00 | 1000.00 |
| JK/ADM/03/CONS.WORK/2013(111) | யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலக நான்கு மாடிக் கட்டட நிர்மாண வேலை - பகுதி III | 11.77 | 5 மாதம் | C5/C6 | 118,000.00 | 1000.00 |

(C/2400)

சுந்தரம் அருமைநாயகம்
அரசாங்க அதிபர்
மாவட்டச் செயலாளர்
யாழ்ப்பாண மாவட்டம்.

# தமிழக மீனவர் பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்படும்

## அமைச்சர் பஸில் உறுதியளிப்பு

தமிழக மீனவர்களின் பிரச்சினை சுமுகமான முறையில் தீர்க்கப்படும் என அமைச்சர் பஸில் ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.

இந்தியா சென்றுள்ள பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவை , இராமேஸ்வரம் மீனவ சங்க பிரதிநிதிகள் டில்லியில் நேற்று சந்தித்துப் பேசினர்.

பஸில் ராஜபக்ஷவை சந்தித்த பின் தமிழக மீனவ பிரதிநிதிகள் டில்லியில் பேட்டியளித்தனர். அப்போது , இந்திய மீனவர்கள் குழு பேச்சுவார்த்தைக்காக விரைவில் இலங்கை செல்ல இருப்பதாகத் தெரிவித்தனர். வடக்கு மாகாண மீனவ பிரதிநிதிகளை இந்திய மீனவர்குழு சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவர் என்றும் தெரிவித்தனர்.

இலங்கைக் கடற்படையால் தாக்குதலுக்கு உள்ளாவது குறித்து அப்போது மீனவர்கள் எடுத்துக் கூறினர். தமிழக மீனவர்கள் மீதான கைது நடவடிக்கையை நிறுத்துமாறு, இலங்கைக் கடற்படை அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டும் என்றும், பஸில் ராஜபக்ஷவிடம் வலியுறுத்தினர்

# தேசிய நல்லிணக்கத்திற்கு எகிப்து இராணுவம் அழைப்பு



எகிப்தில் அதிபர் மொஹமட் முர்ஸி பதவி கவிழ்க்கப்பட்டமைக்கு எதிராக நேற்றைய தினம் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்ற நிலையில் அந்நாட்டு இராணுவம் தேசிய நல்லிணக்கத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது.

முன்னாள் அதிபர் முர்ஸிக்கு இன்னும் அங்கு கணிசமான ஆதரவு இருப்பதாக, அவர் அங்கம் வகிக்கும் முஸ்லிம் சகோதரத்துவக் கட்சி நம்புவதாக எகிப்திலுள்ள பிபிசி செய்தியாளர் ஒருவர் கூறுகிறார்.

இதேவேளை, அவருக்கு எதிரானவர்களும் தலைநகர் கெய்ரோவிலும் மற்ற நகரங்களிலும் வீதிகளில் இறங்கிப் போராடத் தயாராகிவருவதாகத் தெரியவருகிறது.

முன்னதாக, இடைக்கால அரசாங்கத்தில் பங்கெடுக்குமாறு இடைக்கால அதிபர் விடுத்த வேண்டுகோளை இஸ்லாமியவாத முஸ்லிம் சகோதரத்துவக் கட்சியினர் நிராகரித்துவிட்டனர்.

இராணுவம் நாட்டு மக்களுக்காகவே செயற்பட்டுள்ளதாகவும் அரசியல் நடவடிக்கைகளில் அவர்களின் பங்கு இருக்காது என்றும் எகிப்தின் எதிரணித் தலைவர் மொஹமட் எல் பராதே பிபிசியிடம் தெரிவித்தார்.

## உலகச் செய்திகள்


# கோபத்தைக் கிளறவேண்டாம் இந்தியாவிற்கு சீனா எச்சரிக்கை



எல்லைப் பிரச்சினையில், சீனாவின் கோபத்தை இந்தியா தூண்டக்கூடாது என, சீன இராணுவத் தளபதி லுயோ யுவான் தெரிவித்துள்ளார். இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே.அந்தோணி, சீனாவிற்கு பயணம் மேற்கொண்டுள்ளார். இந்திய - சீனா எல்லைப் பிரச்சினை உள்ளிட்ட விடயங்கள் குறித்து, அந்நாட்டு இராணுவ அமைச்சருடன் நேற்றையதினம் அவர் பேச்சுவார்த்தை நடத்த இருந்த நிலையில் சீன இராணுவ தளபதி லுயோ யுவான், நிருபர்களிடம் கூறியதாவது: இரு நாடு களுக்கு மிடையே உள்ள எல்லைப் பகுதியில், 90 ஆயிரம் சதுர கி.மீ., பரப்பு இந்தியாவால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், எல்லைப் பகுதியில், இராணுவ வீரர்களின் எண்ணிக்கையை இந்தியா அதிகரித்து, சீனாவின் கோபத்தை கிளறக்கூடாது. சீனாவின் அச்சுறுத்தலால் தான், இராணுவ செலவை அதிகரித்துள்ளதாக இந்தியா கூறுகிறது. எதைக் கூற வேண்டும், எதைக் கூறக்கூடாது, என்ற விசயத்தில் இந்தியா எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும். என யுவான் கூறினார்.

# தர்மபுரி கலப்புத்திருமணம் கணவன் சடலமாக மீட்பு



தமிழகத்தை உலுக்கிய தர்மபுரி மாவட்ட கலப்புத் திருமணத தம்பதியரில், கணவன் இளவரசன் (வயது -23) ரயில் தண்டவாளத்தில் மூளை சிதறிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவர் தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் எனக்காவல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

தலித் இளைஞரான இளவரசன் வன்னியர் வகுப்பைச் சேர்ந்த திவ்யாவை அவரது பெற்றோரின் விருப்பத்தை மீறித திருமணம் செய்த, பின்னர் திவ்யாவின் தந்தை தற்கொலை செய்துகொள்ள, அதை அடுத்து தருமபுரியில் மிகப்பெரிய வன்முறை வெடித்தது.

திவ்யாவின் தாயார் தேன்மொழி, தனது மகளை கடத்திச் சென்று கட்டாயத் திருமணம செய்ததாகவும், அவரை மீட்கக் கோரியும் சென்னை உயர்நீதிமனறத்தில் வழக்குத் தொடர்ந்தார்

முதலில் கணவன் குடும்பத்தினருடனேயே இருப்பதாகக் கூறிய திவ்யா, பின் ஒரு கட்டத்தில், தாயுடன் செல்வதாகக் கூறினார்.

நேற்று முன்தினம் மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜராகி இளவரசனுடன் சேர்ந்து வாழ விருப்பமில்லை எனக் கூறிவிட்டதாக திவ்யா செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்த நிலையில் கடும் மன உளைச்சலுக்குத் தான் ஆளாகியிருப்பதாகவும், தன் தந்தையின் மரணம் தன்னை மிகவும் பாதித்துவிட்ட நிலையில் இனி இளவரசனுடன் வாழும் வாய்ப்பில்லை எனவும் அவர் செய்தியாளர்களிடம் கூறினார்.

இந்நிலையில் தருமபுரி அரசு கலைக் கல்லூரியின் பின்புறம் உள்ள ரயில் தண்டவாளத்தில் இளவரசனின் உடல் நேற்று முன் தினம் கண்டெடுக்கப்பட்டது.

இளவசரர் சடலமாக மீட்கப் பட்டதனை அடுத்து திவ்யாவிற்கு பாதுகாப்புக் கோரி நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப் பட்டது. வைகை என்ற சட்டத்தரணி, சென்னை உயர் நீதிமன்றில் தாக்கல் செய்த மனுவில், திவ்யாவிற்கு உரிய பாதுகாப்பு வழங்கிட வேண்டும். இளவரசன் மரணம் குறித்து சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட வேண் டும். இம்மனுவை அவசர வழக்காக விசாரிக்க வேணடும் என கூறினார். மனுவை விசாரித்த நீதிபதிகள் ஜெயச்சந்திரன், சுந்தரசேன் ஆகியோர் விசாரணைக்கு ஏற்றுக்கொண்டனர்.


# சீனாவுடனான உறவு தேனைவிட இனிப்பானது

## பாக். பிரதமர் புகழாரம்

(பீஜிங்)

சீனாவுடனான உறவு தேனைவிட இனிப்பானதென பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரீப் புகழாரம் சூட்டியுள்ளார்.

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரீப் 5 நாள் பயணமாக சீனா சென்றுள்ளார். இவருடன் 11 பேர் கொண்ட உயர்மட்டக் குழுவும் சென்றுள்ளது. நேற்று முன்தினம் நவாஸ் செரீப் சீன அதிபர் சி ஜிங்பிங்கை சந்தித்தார். அப்போது பாகிஸ்தானில் மின்சாரம், போக்குவரத்து மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த சீனாவின் உதவியைக் கோரினார்.



நேற்றையதினம் அவர் பிரதமர் லி கேகியாங்கை சந்தித்தார். இந்தச் சந்திப்பு சீன தலைநகரில் உள்ள ஒரு அரங்கத்தில் நடைபெற்றது. அங்கு சென்ற நவாஸ் செரீப்புக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. இதனால் மகிழ்ச்சி அடைந்த நவாஸ கூறியதாவது:-

'நமது இரு நாட்டு நட்பு இமையத்தை விட உயர்ந்தது, கடலை விட ஆழமானது, தேனை விட இனிப்பானது.' என்ற பழமொழியை இந்தச் சூழ்நிலை எனக்கு நினைவுபடுத்துகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

இதற்குப் பதில் அளித்த லி கேகியாங், 'சீன மக்கள் மீது நீங்கள் வைத்திருக்கும் பெரும் அன்பையும் அரவணைப்பையும் பாராட்டுகிறேன்', என்றார்.

இந்தச் சந்திப்பின் போது பாகிஸ்தான்-சீனா இடையிலான வர்த்தக, பொருளாதார உறவுகளை மேம்படுத்துவது குறித்து பேச்சு இடம் பெற்றது.

## பேய் பிசாசு...

(5ஆம் பக்கத்தொடர்)

இல்லை பிரபஞ்சத்தில் எங்கும் விரவி, அநேகம் இருக்கின்றனர். விரைவில் சந்திக்கப்போகிறோம். இந்த இரண்டு நிலைப்பாட்டில் ஒன்றைத்தான் ஏற்றுக்கொள்ளவேண்டிவரும். ஆனால் இதில் நிச்சயம் எது என்றால், ஏலியன்களுக்கான தேடல் வழிமுறைகள் அனைத்தும் அறிவியலுக்கு ஒப்புமையானதே. லேட்டஸ்ட் தொழில்நுட்ப உதவியுடன் (ரேடியோ தொலைநோக்கி போன்ற), தேடல்களை அமைத்துள்ளோம்.

'உளன் எனில் உளன், அலன் எனில் அலன்,' என்று நம்மாழ்வார் கடவுளுக்குச் சொன்னது அப்படியே ஏலியன்களுக்குப் பொருந்துகிறது.

# அமெரிக்கத் தூதரகத்தை மூடுவதற்கு தயங்க மாட்டோம்

## பொலிவிய ஜனாதிபதி எச்சரிக்கை

(கோகம்பா)



தான் பயணம் செய்த விமானத்தை தரையிறக்கி சோதனை நடத்திய அமெரிக்காவிற்கு கண்டனம் தெரிவித்துள்ள பொலிவிய ஜனாதிபதி தேவையேற்படின் தனது நாட்டிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தை மூடுவதற்கும் தயங்க மாட்டேனென எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்காவின் உளவு ரகசியங்களை வெளியிட்ட ஸ்னோடென் ரஷ்ய விமான நிலையத்தில் தங்கி இருக்கிறார். இந்த நிலையில் ரஷ்யாவிலிருந்து புறப்பட்ட பொலிவிய அதிபர் இவோ மொராலெஸ்-ன் விமானத்தில் ஸ்னோடென் தப்பிப்பதாக தகவல் வந்தது.

இதைத் தொடர்ந்து பொலிவியா அதிபர் விமானம் பறக்க பிரான்ஸ், போர்த்துக்கல், இத்தாலி, ஸ்பெயின் நாடுகள் தடை விதித்தன. இதனால் அவர் விமானம் ஆஸ்திரிய நாட்டின் வியன்னாவில் அவசரமாக தரையிறக்கப்பட்டு சோதனை இடப்பட்டது. இதில் ஸ்னோடென் விமானத்தில் பயணிக்கவில்லை என்பது உறுதி செய்யப்பட்டது. அங்கிருந்து அதிபர் நேற்றுமுன்தினம் பொலிவியா வந்துசேர்ந்தார்.

இது குறித்து அதிபர் இவோ மொராலெஸ் கூறியதாவது:-

அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளை வற்புறுத்தி எனது விமானம் பறக்க தடைவிதிக்க செய்து விட்டது. இதனை நான் ஆழமாக ஆராய்ந்து, அவசியப்பட்டால், பொலிவியாவில் உள்ள அமெரிக்க தூரகத்தை மூட நடவடிக்கை எடுப்பேன். எனத் தெரிவித்தார்.

# “13” அகற்றப்படக் கூடாது என்று முதலில் குரல் கொடுத்தவர் டக்ளஸ்

அரசியல் அமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அகற்றக் கூடாது என்று முதலில் குரல் கொடுத்தவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தான் என மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட கூட்டுறவுச்சபையின் தேவநாயகம் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற பனம் கைப்பணி கிராம சான்றிதழ் மற்றும் உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினது வழிகாட்டலுக்கு அமைவாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வானது, மகிழ்ச்சியானதும், முக்கியமானதுமான நிகழ்வாகும். மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரை பனை வளத்தை எவரும் பொருட்டாக எண்ணாத நிலையில் அமைச்சர் தனது அமைச்சைப் பொறுப்பேற்றுக் கொண்டதன் பின்னர் பனைசார்ந்த அபிவிருத்தி செயற்திட்டங்கள் அவரது வழிகாட்டலுக்கு அமைவாக திட்டமிடப்பட்ட முறையிலும், ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டு வருகின்றது என்றும் சுட்டிக்காட்டினார். இதனிடையே 1991 ஆம் ஆண்டிலிருந்து அரசாங்கங்களுடன் இணைந்து செயற்படும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பல அமைச்சுக்களை பொறுப்பேடுத்து அவற்றின் ஊடாக மக்களுக்கு பல சேவைகளைச் செய்துள்ளார்.

ஜனாதிபதி பிரேமதாசா, ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா முதல் தற்போது ஜனாதிபதியாகவுள்ள மகிந்த ராஜபக்ஷ வரையிலான பல அரசியல் தலைவர்களுடன் கடமையாற்றி பல்வேறு உயிராபத்துக்களை எதிர்கொண்டிருந்த நிலையில் இற்றைவரை மக்களது மேம்பாட்டுக்காக தொடர்ச்சியாக உழைத்து வருகின்றார். அவரது தலைமையின் கீழ் குறிப்பாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் பல்வேறு அபிவிருத்தி மேம்பாட்டுத் திட்டங்கள் சிறப்பான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நாடாளுமன்றத்தில் அங்கத்துவம் வகித்த நாள் முதலாக தமிழ் மக்களுக்காக உரத்துக் குரல் கொடுப்பவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மட்டுமே என்றும், 13 ஆவது திருத்தச் சட்டத்தில் திருத்தங்களை ஒருபோதும் செய்ய வேண்டாமென முதல் முதலாகக் கூறியவரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா என்றும் முரளிதரன் இதன்போது சுட்டிக் காட்டினார்.

ஆனால் இந்த விடயத்தில் காலம் தாழ்த்தியே தமிழ்க் கூட்டமைப்பினர் தற்போது தான் பேசிவருகின்றார்கள். எதிர்க் கட்சியிலிருந்து எதையும் பேசி விடலாம் ஆனால் எதையும் செய்ய முடியாது.

எமது. உரிமைகளை கல்வியாலும், பொருளாதாரத்தினாலுமே மேம்படுத்த முடியும். வடபகுதி யுத்தத்தினால் முழுமையாகச் சேதமடைந்த போதிலும், தற்போது அங்கு பல்வேறு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஆளும் கட்சியில், வடக்கில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கிழக்கில் நானும் பங்கெடுத்திருப்பதனால் தான் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பல்வேறு அபிவிருத்தி செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்தவகையில் தமிழ் மக்களுக்காக தலைநிமிர்ந்து உழைத்துக் கொண்டிருக்கும் தமிழ் அரசியல் தலைவர்களில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முக்கியமானவர் என்றும் சுட்டிக்காட்டினார்.

# யாழ்ப்பாணத்தில் பொன்சேகா

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியைச் சேர்ந்த தாயொருவர் 2006 ஆம் ஆண்டு காணாமல் போன தனது மகனும் அதே ஆண்டில் இனந்தெரியாதவர்களது துப்பாக்கிச் சூட்டில் படுகொலை செய்யப்பட்ட மற்றொரு மகனதும் புகைப்படத்தை நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த முன்னாள் இராணுவத் தளபதியும், ஜனநாயகக் கட்சியின் தலைவருமாகிய சரத்பொன்சேகாவிடம் காண்பித்து கதறியழுதார்.

நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த அவர் யாழ். பரமேஸ்வரா வீதியில் மிலேனியம் விருந்தினர் விடுதியில் கட்சி உறுப்பினர்களுடனான சந்திப்பு ஒன்றை நடாத்தினார்.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டிருந்த தாயொருவரே இவ்வாறு தனக்கு நேர்ந்த கதி குறித்தும், காணாமற் போன தனது மகனை மீட்டுத் தரும்படி சரத் பொன்சேகாவிடம் கூறிக் கண்ணீர் விட்டு அழுதவாறு அவரது புகைப்படத்தையும் துப்பாக்கிச் சூட்டில் படுகொலை செய்யப்பட்ட மற்றைய மகனது படத்தையும் அது தொடர்பான ஆவணங்களையும் கையளித்தார்.

தான் தையல் நிலையம் ஒன்றை நடத்தியே தமது குடும்பத்தை நடாத்தி வருவதாகவும், ஐந்து பேருக்கு அதில் வேலை வழங்கியிருப்பதாகவும், மேலதிக உதவியை எதிர்பார்த்தே தொழிலை விருத்தி செய்ய வேண்டிய நிலையில் இருப்பதாகவும் அங்கு தெரிவித்த அவர், யாழ்ப்பாணத்தில் பெருமளவு பெண்கள் தொழில் இன்றி அல்லலுறுவதாகவும், இந்தச் சந்திப்பில் சரத் பொன்சேகாவிடம் எடுத்துக் கூறினார்.

குறித்த பெண் கொடுத்த ஆவணங்களையும், புகைப் படங்களையும் சரத் பொன்சேகா பெற்றுக் கொண்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# பிரெட்ரிக்கா ஜோன்ஸ் அமெரிக்காவில் தஞ்சம்

(கொழும்பு)

பாதுகாப்புச் செயலாளரின் கடும் அச்சுறுத்தல் காரணமாக நாட்டைவிட்டு வெளியேறியிருந்த பிரபல ஊடகவியலாளர் பிரெட்ரிக்கா ஜோன்ஸ், அமெரிக்காவில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளார். பிரபல பத்திரிகையாளரான லசந்த விக்கிரமதுங்க கொல்லப்பட்ட அச்சுறுத்தலான சூழ்நிலையிலும் துணிச்சலுடன் முன்வந்து இலங்கையின் பிரபல பத்திரிகையான சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் பொறுப்பை ஏற்றுக்கொண்டவர் பிரெட்ரிக்கா ஜோன்ஸ்.

அதுமாத்திரமின்றி கடந்த 25 வருட கால அவரது பத்திரிகைத்துறை அனுபவத்தில் யுத்த சூழ்நிலைகள் மற்றும் போராளிக்குழுக்களின் தலைவர்களை பேட்டி கண்டு அவர் வெளியிட்ட செய்திகள் வாசகர் மட்டத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தது.

யுத்தம் முடிவுற்ற நிலையில் வெள்ளைக் கொடிகளுடன் சரணடைய வந்த விடுதலைப் புலிகளின் தலைவர்களை படுகொலை செய்யுமாறு பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ உத்தரவிட்டதை சரத் பொன்சேகாவின் வாயால் வரவழைத்து, உண்மையை உலகறியச் செய்ததில் பிரெட்ரிக்காவுக்கு பெரும் பங்குண்டு.

பின்பு அந்தச் செய்தியை தனது அரசியல் நிகழ்ச்சி நிரலுக்காக சரத் பொன்சேகா மறுத்தது குறிப்பிடத்தக்கது. எனினும் பிரெட்ரிக்கா ஜோன்ஸின் அறிக்கையைக் கொண்டே சரத் பொன்சேகா மீது இராணுவ நீதிமன்றில் தேசத்துரோக வழக்குத் தொடரப்பட்டு அவர் சிறைக்கு அனுப்பப்பட்டார்.

அதனையடுத்து அவர் தனது பாதுகாப்புக் கருதி நாட்டைவிட்டு வெளியேறியிருந்தார். இந்நிலையில் அவர் அமெரிக்காவில் அரசியல் தஞ்சம் பெற்றிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# சாலைக் கடற்கரையில் நடந்தது கொலையே

## பிரேத பரிசோதனையில் தகவல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு சாலைக் கடற்கரைப் பகுதியில் கடந்த 26 ஆம் திகதி கரையொதுங்கிய ஆண் ஒருவரின் சடலம் கொலை செய்யப்பட்டு வீசப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அப்துல் காதர் என்ற முஸ்லிம் ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளதாக பிரேத பரிசோதனை அறிக்கை தெரிவிப்பதாக முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்தனர்.

இக்கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், இச்சம்பவத்துடன் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படுபவரும் இறந்தவருடன் குளிக்கச் சென்று காணாமல் போனவருமான மற்றுமொருவரையும் பொலிஸார் தேடி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நீதிமன்ற உத்தரவின்படி இப்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்தனர். (125)

## அரியாலையில்...

நோக்கிச் சென்ற பயணிகளே அதிகளவில் காயமடைந்துள்ளனர்.

சிறு காயங்களுக்குள்ளான பயணிகள் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளனர். பலத்த காயமடைந்த ஆறு பேர் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இப்பேருந்தின் நடத்துனரான நெல்லியடியைச் சேர்ந்த ரி.சுகந்தன் (வயது-31), தவசிக்குளம் கொடிகாமத்தைச் சேர்ந்த ச.பிரதீபன் (வய்து-40) அதேயிடத்தைச் சேர்ந்த பி.தர்மலோஜினி (வயது-44), உரும்பிராயைச் சேர்ந்த எல். தெய்வானைப்பிள்ளை (வயது-69), ஆழியவளையைச் சேர்ந்த க.வசந்தகுமாரி (வயது-55) ஆகியோரே இவ்வாறு வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வவுனியா நோக்கி முன்னே சென்ற தனியார் பேருந்தும், பின்னே வந்த போக்குவரத்துச்சபை பேருந்துமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளதாக யாழ்.போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் குறித்து யாழ். போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன், பேருந்துகளையும் அகற்றியுள்ளனர்.

(எஸ்.பி, இ, 112)

## நேபாள...

தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் இன்று இடம்பெறவுள்ள இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 70 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வுகள் இடம்பெறவுள்ள நிலையில் விசேட விருந்தினராக கலந்து கொள்ளும் பொருட்டு இலங்கை வந்துள்ள அவர் நேற்று வவுனியாவில் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளை சந்தித்தார்.

இதன்போது உரையாற்றிய அவ்ர், நேபாளத்தில் 125 இற்கும் மேற்பட்ட சமூகங்கள் வாழ்ந்த போதிலும் இதுவரை எந்த முரண்பாடுகளும் தோற்றம் பெறவில்லை.

முரண்பாடுகளுக்கு வன் முறையோ யுத்தமோ தீர்வாகாது. அனைவரையும் மதித்தும் ஒவ்வொருவருடைய சமய கலாசாரங்களை மதித்து மனிதாபிமானத்துடன் அனைவரும் நடத்தப்படவேண்டும்.

இனக் குழுமங்களுக்கிடையில் விரோத தன்மை அற்றதாக உருவாக்கப்படும் போது மனிதாபிமானம் வளரும் என தெரிவித்திருந்தார். இதேவேளை நேபாளத்தில் இடம்பெற்ற அரசியல் நிலைமைகள் தொடர்பிலும் கலந்து கொண்டிருந்த சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு விளக்கமளித்திருந்தார்.

## வடக்கு மாகாண...

இலங்கை ஒப்பந்தத்தின்படி, வடக்கு, கிழக்கு மாகாணசபைக்கான தேர்தல் கடைசியாக 1988 ஆம் ஆண்டு நடத்தப்பட்டது.

அதன்பின்னர் தேர்தல்கள் . நடத்தப்படாமல் ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஆளுநர்களினால் மாகாணசபை நிர்வாகம் நடத்தப்பட்டுவந்தது.

2006ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் பங்காளியாக இருந்த மக்கள் விடுதலை முன்னணி உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்ததன்படி வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இரண்டாக பிரிக்கப்பட்டன. அதன் பின்னர் இத்தேர்தல் நடத்தப்படவுள்ளது.

## சோனியாவுடன்...

அமைச்சர் பசில் ராஜபக்ஷ இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனனையும் சந்திக்க நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதேவேளை, தற்சமயம் புதுடில்லி சென்றுள்ள இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர், இந்தியா செல்வதற்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தனைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளதாக ஏசியன் ட்ரிபியூன் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, இலங்கை மற்றும் இந்திய மீனவர்களுக்கு இடையேயான பேச்சுவார்த்தை ஒன்று நேற்று புதுடில்லியில், அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் தலைமையில் இடம்பெற்றது.

## உபதபாலகம்..

பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து பொலிஸாரும் ஸ்தலத்திற்கு விரைந்து சேதவிபரங்களைப் பார்வையிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் இந்தத் தபாலகத்தைச் சூழவுள்ள வீடுகளில் எவரும் குடியிருப்பதில்லையெனவும் அந்த வீடுகளில் கட்டுமான வேலைகள் நடைபெற்று வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (பா)

# கே.பி. தேர்தலில் குதிப்பது ஏன்?

# இப்படிக் கேட்கிறார் பொன்சேகா



கே.பி., தயா மாஸ்ரர், தமிழினி போன்றோரை அரசு வடக்கு மாகாணத் தேர்தலில் வேட்பாளர்களாக நிறுத்த முயற்சிப்பது மக்களை திசை திருப்பி வாக்குகளை சிதறடித்து அவர்களது வாக்குகளைப் பெறவே என்று முன்னாள் இராணுவத் தளபதியும், ஜனநாயகக் கட்சியின் தலைவருமாகிய சரத்பொன்சேக நேற்றுத் தெரிவித்துள்ளார்.

யாழ். பரமேஸ்வரா வீதியில் மிலேனியம் விருந்தினர் விடுதியில் நேற்று முற்பகல் நடைபெற்ற ஜனநாயகக் கட்சி உறுப்பினர் மற்றும் ஆதரவாளர்களுடனான சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் முடிவிற்கு வந்திருந்தும் மக்கள் ஏதிர்பார்த்திருந்த எதுவும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. இன்னமும் பிரச்சினைகளைப் பெரிதாக்கி மக்களை தவறாக வழிநடத்தி வருகின்றனர். இவ்வாறான நிலைக்கு இனியும் மக்கள் இடம் கொடுக்கக் கூடாது. இந்நாட்டில் சகலரும் இன, மத வேறுபாடின்றி சமமாக வாழும் நிலை வரவேண்டும். ஜனநாயகக் கட்சி சார்பில் தமக்கு, வரும் மாகாண சபைத் தேர்தலில் வாக்களிக்குமாறு யாழ்.மக்களைக் கோட்டுக்கொண்ட அவர், தற்போது நடைபெறுவது சரி, பிழை என்று கூறவரவில்லை ஆனால் அனைத்து மக்களும் சமமாக வாழும் நிலை தோன்றவேண்டும். இதற்காக தமக்கு வாக்களிக்குமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

அரசு இன, மத பேதங்களை முன்நிறுத்தி செயற்படுகிறது. அருகே இருக்கும் இந்தியாவுடன் கூட ஒற்றுமையாக இருக்க அரசுக்குத் தெரியவில்லை. தமிழ் மக்களை எவ்வளவு ஏமாற்ற முடியுமோ அவ்வளவுக்கு ஏமாற்றும் வேலையில் அரசு ஈடுபட்டுள்ளது என்று தெரிவித்த சரத்பொன்சேகா திரும்பவும் இந்த மக்களிடத்தில் வாக்குக் கேட்டு வந்திருப்பது அனைத்து மக்களும் சமமாகவும், சுபீட்சமாகவும் வாழ்வதற்கே. யாழ்ப்பாணத்தில் புதிதாக இருவரை கட்சிக்கு தேர்ந்தெடுத்துள்ளோம். எமது கட்சியில் வடக்கில் இருந்து அங்கத்தவர்களாக இணைந்து கொள்ளலாம் தற்சமயம் எமது கட்சியில் 132 பேர் அங்கத்தவர்களாகவுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் மக்களை அரசு தவறான வழியில் கொண்டு செல்கிறது. நான் ஜனாதிபதியானால் மக்களை நல்வழிக்கு கொண்டு வருவேன். அனைத்து மக்களுக்கும் இந்த நாடு சொந்தம் அதனை நினைத்துக் கொள்ளவேண்டும் என்று தெரிவித்த அவர் 13 ஆவது திருத்தத்தில் மாற்றம் வரும் என்பதனை நான் உறுதியாக நம்பவில்லை என்றும், இலங்கையில் இருக்கும் அனைத்து மக்களும் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதே தமது அவா என்று சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த அவர் நேற்று நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு விஜயம் செய்து வழிபாடுகளில் ஈடுபட்டதுடன், யாழ்.ராசாவின் தோட்டத்தில் அமைந்துள்ள யாழ்.ஊடக அமையத்தில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றையும் நடாத்தினார். (பா)

# விபரங்கள் சேகரிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் தனிஒருவரை குடும்பத் தலைவராகக் கொண்டவர்களின் விபரங்கள் பிரதேச செயலர்களால் சமூக சேவைகள் அமைச்சிற்கு அனுப்பிவைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த வகையில் தந்தையை இழந்த குடும்பங்கள், தாயை இழந்த குடும்பங்களின் விபரங்களை கிராம அலுவலர்களிடமிருந்து தரவுகளைப் பெற்று அனுப்பி வைக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சமூக சேவைகள் அமைச்சு இவர்களுக்குரிய புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. (90)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மலையக மக்கள் முன்னணி சந்திப்பு

(கெழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகளுக்கும், மலையக மக்கள் முன்னணியின் பிரதிநிதிகளுக்குமிடையிலான சந்திப்பொன்று நேற்று மாலை 5 மணியளவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் கொழும்பில் இடம்பெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், எம்.பத்மநாதன் ஆகியோரும், மலையக மக்கள் முன்னணியின் சார்பில் அதன் உபதலைவர் வீ.இரா தாகிருஷ்ணன், செயலாளர் லோரன்ஸ், சுப்பிரமணியம், கிருஷ்ணா, அரவிந்தகுமார் உள்ளிட்ட பிரதிநிதிகளும் இச்சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது 13 ஆவது அரசியலமைப்பு திருத்தம் பற்றியும் அதனை மாற்றியமைக்கும் முயற்சிகள் பற்றியும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

# றஷ்மியின் இரண்டு கவிதை நூல்களின் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)




ஓவியரும் கவிஞருமான றஷ்மியின் ஈதேனின் பாம்புகள், ஈ தனது பெயரை மறந்து போனது ஆகிய இரண்டு கவிதை நூல்களின் அறிமுக நிகழ்வு நாளை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் திருநெல்வேலி அம்மன் வீதியில் அமைந்துள்ள ஆங்கில மையத்தில் நடைபெறவுள்ளது.

மறுபாதி, தவிர இலக்கிய வட்டத்தினரின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த நிகழ்வில் கவிஞர் ந.சத்தியபாலன் தலைமையில் அறிமுகவுரையை கவிஞர் சித்தாந்தனும் விமர்சன உரைகளை விரைவுரையாளர் செல்வமனோகரன், கவிஞர் ந. மயூரரூபன் ஆகியோரும், நன்றியுரையை கவிஞர் தானா விஸ்ணுவும் ஆற்றுகின்றனர்.

# கரைச்சி பிரதேசத்தில் கூட்டுறவாளர் தினம்

(கிளிநெர்ச்சி)

சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு கரைச்சி பிரதேசத்தின் 91 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினம் இன்று காலை 9 மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு கரைச்சி கிழக்கு பல.நோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் க.தர்மசூரியன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக கிளிநொச்சி தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபர் திருமதி பரமோதயன் ஜெயராணி கலந்து கொள்ளவுள்ளார்.

பள்ளி மாணவர்களதும், கூட்டுறவாளர்களினதும் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதுடன், நடத்திமுடிக்கப்பட்ட விளையாட்டுப் போட்டிகளுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இன்றைய தினம் நடைபெறுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

# வீதி விபத்தில் இருவர் காயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரியில் நேற்றுக் காலை இடம்பெற்ற வீதிவிபத்து ஒன்றில் இருவர் காயமடைந்துள்ளனர்.

சாவகச்சேரி நுணாவில் அமிர்தாம்பிகை வித்தியாலயத்திற்கு அருகாமையில் நேற்றுக் காலை கொழும்பிலிருந்து யாழ். நோக்கி வந்த தனியார் பேருந்தே விபத்துக்குள்ளகியது.

இவ்விபத்துச் சம்பவத்தில் பஸ் நடத்துனரும், பயணி ஒருவரும் காயமடைந்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையின் பின் வீடு திரும்பியுள்ளனர். (இ)

# செய்தியாளர்களைக் கண்டால் முகச்சுழிப்பு ஏன்?

# பொட்டுக் கேடுகள் மேற்கிளம்பும் என்று அச்சமா?

யாழ்.மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபையின் சில உறுப்பனர்கள் சபைக் கூட்டங்களுக்கு பத்திரிகையாளர்கள் சமுகமளிப்பதை விரும்புவதில்லை எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

உறுப்பினர்கள் சிலரால் சபையில் ஏற்படுத்தப்படும் குழப்பங்கள், சிறுசிறு சம்பவங்களுக்கு அடிக்கடி சபையை விட்டு வெளிநடப்பு செய்தல், சபையின் சட்டதிட்டங்களுக்கு அமைவாக நடந்து கொள்ளாமல் விதிகளுக்கு மாறாக செயற்படுதல், தாம் சார்ந்த கட்சியின் கொள்கைகளுக்கு மாறாகத் தவறிழைத்தல் போன்ற சம்பவங்களில் இவர்கள் ஈடுபடும் போது பத்திரிகைகள் அவற்றை மக்கள் மத்தியில் கொண்டு போய் விடுகின்றன என்பது இவர்களது ஆதங்கமாகும் எனக்கூறப்படுகிறது.

பொதுமக்களாகிய வாக்காளர்களே தமது வாக்குகளை அளித்து இவர்களை உள்ளூராட்சி சபைகளுக்கு உறுப்பினர்களாக தெரிவு செய்திருந்தார்கள். தாங்கள் தெரிவு செய்து அனுப்பிய இவ் உறுப்பினர்கள் சபையில் எப்படி நடத்து கொள்கின்றார்கள், என்னென்ன பிரச்சினைகளை எப்படி எப்படிக் கையாளுகின்றார்கள் போன்றவைகளை அறிந்து கொள்ளும் உரிமை அவர்களைத் தெரிவு செய்த வாக்காளப் பெருமக்களுக்கு என்றும் உரியதாகும்.

சபைக்கு வந்து தமது உறுப்பினர்களின் செயற்பாடுகளை அவதானிக்கும் சந்தர்ப்பங்கள் அவர்களுக்கு இல்லை. பத்திரிகைகள் மூலமாகவே அனைத்தையும் அவர்கள் அறிந்து கொள்ளும் வாய்ப்புக்கள் அதிகளவில் உண்டு எனவும் தெரிவிக்கப்படுகிறது.

முன்னர் பத்திரிகையாளர்களை வருந்தி அழைத்த தவிசாளர்களும், சில உறுப்பினர்களின் அழுத்தங்களினால் இப்போது அவர்களை அழைப்பதாக இல்லை மாதாந்த மற்றும் விசேட கூட்டங்களில் இடம்பெறும் சபை நடவடிக்கைகள் மக்கள் மயப்படுத்தப்படுவது அவசியம் என்பதால் சபைக் கூட்டங்களில் பத்திரிகையாளர்களை அனுமதிக்கும் விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் எனக்கோரப்பட்டள்ளது. (137)


‘மூட்டாள்’ ஆக வெளிநாடு போகப்போகிறீர்களா?

மேசனின் ஒரு நாள் கூலி 1500/-

மூட்டாளின் சம்பளம் 700/-

மேசனுக்கு இருக்கும் தொழில் திறனும் அனுபவமுமே அவர் அதிகம் சம்பாதிக்கக் காரணம்

நீங்களும் வெளிநாடு போய் குறைந்தளவு ஊதியம் பெறாமல் 50,000/- வருமானத்துடன் தொழிற்பயிற்சியைப் பெற்று மாதம் ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேல் உழையுங்கள்

மொத்தச் செலவு
465,000/- (நாலு இலட்சத்து அறுபத்தையாயிரம்)
(நிபந்தனைகளுக்கு உட்பட்டது)

| | |
|---|---|
| 3 மாத இலவச ஆங்கில வகுப்பு & துறைசார் அடிப்படைப் பயிற்சிகள் | விசேட கடன் வசதிகள் & பகுதி பகுதியாகக் கட்டணம் செலுத்தும் வசதி |
| சொகுசுமாடிக் குடியிருப்பில் இலவச தங்குமிடம் | IELTS வங்கிப்பணம் தேவையில்லை - நேரில் விசா அனுமதி |
| SEGi பல்கலைக்கழகத்தில் பயிற்சி | UK, Australia சான்றிதழ்கள் |
| வருமானத்தை உறுதிப்படுத்தும் தொழில் ஒப்பந்தம் (Job Contract) | பயிற்சி நிறைவடைந்து தொழில் பெறும் வரையில் தொடர் சேவை |

பயிற்சி முடிவில் Australia, New Zealand, Canada, Singapore, Malaysia, China வில் Work Permit உடன் வேலைவாய்ப்பு

வடக்கு மாகாண இளைஞர் யுவதியருக்கு இலவச கல்வி-தொழில் வழிகாட்டல் சேவையை வழங்கிவரும் எங்கள் அர்ப்பணிப்புமிக்க அரவணைப்பின்கீழ் வாருங்கள்...

(C/2908)

சிகரம்
கல்வி - தொழில் வழிகாட்டி
153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(DAMROவுக்கு முன்னால்)
தொ.பே.: 021 222 00 11
நேரடி: 0773 616 798
மி.அ.: edusikaram@gmail.com web: www.sikaram.lk


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 யூலை 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.